உ

அகத்திய மாமுனிவர்

வயித்திய

பரிபூரணம்-சாரம்

(சுத்தப்பதிப்பு.)

S. 82

உ

முருகன் துணை.

அகத்தியர்
பரிபூரணம் - ௪௦௦

(சுத்தப்பதிப்பு)

தமிழ்ப்பண்டிதரும்,
ஆயுள்வேத, சித்தமருத்துவருமான
மா. வடிவேலு முதலியாரவர்களாலும்
சென்னை
ஈஸ்ட்ரன் பார்மக்யூடிகல் ஒர்க்ஸ்
மருத்துவசிரோமணி
க. ச. முருகேச முதலியாரவர்களாலும்
பார்வையிடப்பட்டு

சென்னை
கணேச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1921.

விலை அணா - 8.

அகத்தியர் பரிபூரணம் - ௪௦௦

அட்டவணை

	பக்கம்.
அகாரம்—உகாரம்	62
அகார உகாரதீட்சை,	•
பூரணமகிமை	105
அஷ்டகர்மப்பாவை	15
ஆக்ருஷ்ணம்	17
உச்சாடனம்	16
தம்பனம்	15
பேதனம்	17
மாரணம்	16
மோகனம்	16
வசியம்	15
வித்துவேஷணம்	17
அப்பிரக சிந்தூரம்	76
அய சிந்தூரம்	79
அறிவு	82
அறுகம்வேர் தயிலம்	109
ஆக்கிராண நசியம்	110
ஆக்ருஷ்ணம்	17
இஞ்சிச் சூரணம்	94
இரசகர்ப்பூரக்கட்டு	58
,, குளிகை	56
,, வைப்பு	36
இரசபற்பம்	72
இரசவாதத்திற்கு வாலைரச சிந்தூரம்	92
இரசாயனம்:—	
சாதிக்காய்	89
திப்பிலி	89
இலிங்கக்கட்டு	57
இலேகியம்:—	
கபாடம்	86
திரிகடுகு	86
தூதுளை	88
தேற்றுங்கொட்டை	85
பெரும்பாடு	84

	பக்கம்.
உச்சாடனம்	16
உப்பின் பெயர்	93
உருமாற்றமை	25
எண்ணெய்:—	
கர்ப்பவியாதிக்கு	112
சகலமேகத்துக்கு	113
கஞ்சி:—	
சேத்திமசுரத்துக்கு	100
பித்தசுரத்துக்கு	100
வாதசுரத்துக்கு	99
கட்டு:—	
இரசகர்ப்பூரம்	58
இலிங்கம்	57
தாளகம்	59
கட்டுவாதி மாத்திரை	55
கண்வியாதிக்கு மருந்து	111
கந்தக தயிலம்	106
கபாட லேகியம்	86
கபாலசூலைக்கு சவுரித் தயிலம்	104
கருஞ்சூரை சூரணம்	97
கர்ப்பூரசிலாசத்து பற்பம்	63
கலை நாடி	7
கர்ப்பவியாதிக்கு எண்ணெய்	112
கன் மந்திர	67
கன்மவரலாறு	66
கஷாயம்:—	
குளிர், விஷ, பழையசுரம், வயிற்றுவலிக்கு	100
சந்நி, சூதகவாயு, கர்ப்ப ஸ்திரி வெப்புக்கு	101
சேத்துமசுரத்திற்கு	100
பித்தசுரத்திற்கு	100
மூதண்டம்	107

அட்டவணை.

	பக்கம்.
கஷாயம்:—	
மூலத்துக்கும், இரசவேக் காட்டுக்கும்,	101
வாதசுரத்திற்கு	99
காட்டுக்கருணை சூரணம்	97
காதுகுத்திரைச்சலுக்குத் தயிலம்	108
காதுமந்தத்துக்குச் சிரசில் தேய்க்கத் தயிலம்	108
காந்த சிந்தூரம்	78
காப்பு	1
காமகேசரி குளிகை	44
காயசித்திக்கு வயித்தியம் வாதம்கூறல்	33
குப்பி சிந்தூரம்	74
குருநாடியிருக்குமிடம்	9
குருநாடி நடையும்குணமும்	9
குளிகை:—	
அபின்	48
இரசகர்ப்பூரம்	56
காமகேசரி	44
சர்வசுரம்	45
சாம்பிராணிப்பூ	53
சுரம்	49
தாதுபுஷ்டி	42
தாம்பிரம்	52
பாஷாணம்	46
வாலை சஞ்சீவி	50
வாலை பேதி	50
சகலமேக எண்ணெய்	113
சத்தியுப்பின் பெயர்	20
சத்துருமாரணம்	29
சந்நிக்குத்தாம்பிரக்குளிகை	52
சந்நிக்கு கலிகம்	110
சந்நிக்குத் தைலம்	107
சர்வசுர குளிகை	45
சவர்க்கார வைப்பு	19
சவ்வீர வைப்பு	92

	பக்கம்
சாதிக்காய் ரசாயனம்	89
சாந்திபண்ண	30
சாம்பிராணிப்பூக் குளிகை	53
சிந்தூரம்:—	
அப்பிரகம்	76
அயம்	79
காந்தம்	78
குப்பி	74
தாம்பிரம்	82
நாகம்	80
வாலைரசம்	92
சிரநோய், பீநசம், சிர சூலைக்குத் தயிலம்	103
சிலாசத்துப் பற்பம்	64
சிவயோகி கற்பம்	104
சிவராஜயோகம்	117
சீந்திற் சூரணம்	98
சுக்கு சூரணம்	90
சுர குளிகை	49
சுரத்துக்கு அபின் குளிகை	48
,, பாஷாண குளிகை	46
சூடன்வைப்பு	37
சூரணம்:—	
இஞ்சி	94
கருஞ் சூரை	97
காட்டுக்கருணை	97
சீந்தில்	98
சுக்கு	90
திப்பிலி, மிளகு	90
திராட்சை	95
திரிகடுகு	91
பறங்கிப்பட்டை	97
மந்தவாயுவுக்கு	96
வாந்திபேதிக்கு	96
வெள்ளைக்கு	94
சேத்துமசுரகஷாயமும் கஞ்சும்	100
சௌவீரவைப்பு	33

அட்டவணை.

	பக்கம்.
ஞானம்	31
தசவாயு தசநாடிகளின் பெயர்	5
தம்பனம்	15
தைலம்:—	
அறுகம்வேர்	109
கந்தகம்	106
காதுகுத்திரைச்சலுக்கு	108
காதுமந்தத்துக்கு	108
சந்திக்கு	107
சவுரி	104
சிரநோய், பீநசம், சிரசூலைக்கு	103
பீநசத்துக்கு	102
தாதுபுஷ்டிக் குளிகை	42
தாம்பிர சிந்தூரம்	82
தாளகக்கட்டு	59
தாளகபற்பம்	60
திப்பிலி மிளகு சூரணம்	90
திப்பிலி ரசாயனம்	89
திராட்சைச் சூரணம்	95
திரிகடுகு சூரணம்	91
திரிகடுகு லேகியம்	86
திரிபுகை	
தூதுளை லேகியம்	88
தூரத்துச்செய்தியறியுமை	26
தேற்றாங்கொட்டைலேகியம்	85
நாக சிந்தூரம்	80
நாக பற்பம்	70
நாதவுப்பின் பெயர்	20
நூல் விவரம்	3
நூல் கொடாதிருக்க	119
பச்சைக்கர்ப்பூரவைப்பு	38
பஞ்சநாடிகளிருக்குமிடம்	9
பறங்கிப்பட்டைசூரணம்	97
பற்பம்:—	
இரசம்	72
கர்ப்பூரசிலாசத்து	63
பற்பம்:—	பக்கம்.
சிலாசத்து	64
சொர்ணம்	68
தாளகம்	60
நாகம்	70
வெள்வங்கம்	64
வெள்ளி	69
பாயிரம்	1
பாஷாணமுறிவு	47
பித்தசுரகஷாயம் - கஞ்சி	100
பீநசத் தயிலம்	102
பீநசத் திரி	103
பீநசத்துக்கு நசியம்	102
புருஷ நாடி	6
புருஷருக்கு நாடி நடக்கும் விதம்	7
பூதமாரணத் திரிபுகை	28
பூரணநூல் மகத்துவ ஞானம்	1
பெண்களுக்கு நாடி நடக்கும் விதம்	7
பெண்ணுக்கும் ஆணுக்கும் இடுமருந்து	27
பெருநூற்காவியப்புகழ்ச்சி	5
பெரும்பாடு தீர லேகியம்	84
பேதனம்	17
பேதிமாத்திரை	51
போதகிரி	116
மந்தவாயுவுக்குச் சூரணம்	96
மரண நாடி	12
மாத்திரை:—	
கட்டுவாதி	55
பேதி	51
மாரணம்	16
முப்பூ	18
முப்பூவின் பெயர்	19
,, மரபு	93
முப்பூவுக்கு விபரம்	91
மூதண்டகஷாயம்	107

அட்டவணை.

	பக்கம்.
மூலகிரி	115
மூலக்கஷாயம் இரசவேக் காட்டுக்கு கஷாயம்.	101
மை:—	
உருமாற்ற	25
தூரத்துச்செய்தியறிய	26
வசியம்	24
மோகனம்	16
வசியத்துக்கு விபூதி	22
வசியமை	24
வசியம்	15
வசியவளையம்	23
வயித்திய தருமம்	111
வழலைப்பேர்	20
வாதசுரகஷாயம்-கஞ்சி	99
வாந்திபேதிக்குச்சூரணம்	96
வாயுவுக்கும், மந்தத்துக்கும், கெர்ப்பிணிக்கும் வியாதி நாடி	14
வாலைசஞ்சீவிக்குளிகை	50
வாலைபேதிக் குளிகை	50
வாலைரசத்துக்கு அனுபானமும் தீருநோய்களும்	41
வாலைரசத்துக்குத்தீரும் வியாதி	40
வாலைரசவைப்பு	39
விண்ட அண்டம்	21
வித்துவேஷணம்	17
வியாதியறியும்விதம்	8
விஷங்களுக்கு குழம்பு	109
வெண்குட்டந்தீர சொர்ன பற்பம்	68
வெள்வங்கபற்பம் (நவமூலத்திக்கு)	64
வெள்ளிபற்பம்	69
வெள்ளைக்குச் சூரணம்	94
வைப்பு:—	
இரசகர்ப்பூரம்	36
சவர்க்காரம்	19
சூடன்	37
சௌவீரம்	33, 92
பச்சைக்கர்ப்பூரம்	38
வாலைரசம்	39
வைப்புக்கு விபரமும், வெடியுப்புசுத்திவிபரமும்	92
வைராக்கியம்	4

உ

கணபதி துணை.

—:o:—

அகத்தியமுனிவர்

அருளிச்செய்த

பரிபூரணம்.

(நானூறு.)

காப்பு.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பூரணமாய்நிறைபரிபூரணத்தைப்போற்றிப்
புகழ்பெரியவயித்தியபூரணத்தைப்பாடக்
காரணமாய்க்கருவுருவாயெங்குந்தானாய்க்
கண்மணியினடுவான கருணைதன்னை
ஆரணமாய்முக்கோணநடுவினின்ற
அம்பரத்தையனுதினமுமறிவாற்போற்றி
வாரணமாமுகத்தோனைநாளும்போற்றி
மகத்தானவேதியனைவணங்கினேனே.

பாயிரம்.

வணங்கிமிகநிற்கையில்வேதியனுஞ்சீரார்
வடமொழியைத்தான்கொடுத்தேயருளுமீந்தான்
இணங்கிமிகப்பூரணத்தையிருந்துபார்த்தேன்
ஏகாந்தபூரணத்தினின்பங்கண்டு
குணங்கிமிகப்போகாமலறிவிற்கூடிக்
குருவானபூரணத்தைக்கூர்ந்துபாடி
வணங்கிமிகவேதியன்முன்வைத்தேயானும்
வணக்கமாய்க்கைகூப்பிப்பணிந்திட்டேனே. (௧)

பணிந்திட்டவிந்நூலைமறையோன்றானும்
பக்குவமாயாதியந்தநன்றாய்ப்பார்த்துக்
* கணிந்திட்டகருவெல்லாமிதிலேதோன்றுங்
கைம்முறையுங்குருமுறையுமிதிலேதோன்றும்
அணிந்திட்டவிந்நூலைவைத்துக்கொண்டே
யனுதினமும்பூரணத்தைப்பண்பாய்க்கண்டு
துணிந்திட்டவயித்தியமும்வாதஞ்செய்து
துரியமுள்ளயோகமுடன்ஞானம்பாரே. (௨)

பாரென்றுசொன்னமொழிபெற்றுக்கொண்டு
பதிவானபொதியையிலேயிருக்கும்போது
நேரென்றவயித்தியபூரணத்தைப்பார்க்க
நிமிஷத்திற்றென்பொதியிற்சித்தர்வந்து
தேரென்றதென்பொதியிற்கும்பமூர்த்தி
செகசோதியானபூரணத்தைப்பார்க்க
மேரென்றமேருகிரிதன்னில்வந்தோ
மேன்மையுடனடிமைபடைத்தாளென்றாரே (௩)

என்றவொருசித்தர்களைப்பார்த்தேயானும்
இன்பமுடன்பூரணத்தையவருக்கீந்தேன்
வம்பருக்குமுலகத்திலுள்ளபேர்க்கும்
வாய்க்காதுவாய்த்தாலும்வழிதோன்றாதால்
என்றொருநற்சிவயோகிக்கெய்துமாகில்
இதிலுள்ளகருக்களெல்லாமெய்துமெய்தும்
கண்டுமிவன்காணுமற்கலங்குஞ்சோதிக்
கருவினிலேயமைந்தபூரணமென்பாரே. (௪)

---

* 'கணித்திட்ட' என்பது 'கணிந்திட்ட' என விகாரப்பட்டது.

பாரப்பாபூரணமாமிந்த நூலைப்
பாரிலுள்ளோர்க்கியோதேபதனஞ்சொன்னேன்
நேரப்பாபூரணமும்வயித்தியமுஞ்சொன்னேன்
நிலையாதகுருநாடிநிலைக்கச்சொன்னேன்
காரப்பாபற்பமொடுசெந்தூரங்கள்
கட்டானமாத்திரைகள்சரக்குவைப்பு
பேரப்பாமுப்பூவின் தீக்ஷைமார்க்கம்
பெருநூலின்மறைத்தவெல்லாம்பேசினேனே. (௫)

பேசினேன்தைலங்கள்ரசாயனங்கள்
பெலமானலேகியமுங்கியாழத்தோடு
வீசினேன்சகலவியாதியுமேதீர
விளம்பினேன்வசியமொடஞ்சனமுமாற்றத்
தூசியிலேதிரிபுகைகளநந்தஞ்சொன்னேன்
துடியானமாரணமும்வைப்புஞ்சொன்னேன்
பாசமுடனஷ்டகர்மமெட்டுஞ்சொன்னேன்
பராபரத்தின்குறிசொன்னேன்பணிந்துகேளே. (௬)

நூல் விவரம்.

கேளப்பாமூன்றுலட்சங்காப்புச்சொன்னேன்
கிருபையுள்ளவாதமதுலட்சங்காப்புச்
சூளப்பாவயித்தியத்திலிரண்டுலட்சம்
சொன்னவற்றைச்சுருக்கியிருகாண்டஞ்சொன்னேன்
பாளப்பாவதைக்குறுக்கிப்பாதியாகப்
பாடினேனறுநூற்றினுஞ்சொன்னேன்
வேளப்பாதிராவகமெண்ணூறுஞ்சொன்னேன்
வேதமுறையைஞ்ஞூற்றில்வெளியிட்டேனே. (௭)

வெளியிட்டவைம்பதிலேமூன்றுஞ்சொன்னேன்
விவரணமுந்நூற்றிற்செந்தூரஞ்சொன்னேன்
வழியாகவெண்பதிலேமுப்பூச்சொன்னேன்
வயித்தியந்தானுயிரத்தைஞ்ஞூறுஞ்சொன்னேன்

அழியாதமுந்நூற்றிற்கர்மதர்மம்
அன்பாகச்சொன்னதைநீயறிந்துபாரு
முளியாதேநானூற்றிலிரண்டுசொன்னேன்
மூடினதோர்நீற்றினமாநான்குநூறே. (௮)

நானூற்றில்வயித்தியபூரணமுந்தோன்று
நாடியுடன்குருநாடிநன்றாய்த்தோன்றப்
பாலானமுப்பாலுநன்றாத்தோன்றப்
பாடினேன்வயித்தியபூரணமிதப்பா
தேடினாற்கிடையாதிவ்வுலகத்துள்ளே
சிவயோகர்வைத்திருப்பார்கொடுக்கமாட்டார்
நாளாகவவர்களுக்குத்தொண்டுசெய்து
நன்மையுடனூல்வாங்கிநாட்டம்பாரே. (௯)

வைராக்கியம்.

நாட்டமென்றபூரணத்தைக்காணவென்றால்
நன்மையுள்ளசற்குருவாற்காணவேண்டும்
ஓட்டமென்றவோட்டமெல்லாம்ஓடாதேநீ
யொருமனதாய்ச்சுழுமுனையினுகந்துநில்லே
ஆட்டமென்றதிருநடனமங்கேயுண்டு
ஐம்பத்தோரெழுத்துமுதலெல்லாமுண்டு
பாட்டைமிகப்பிதற்றினலென்னவுண்டு
பத்திமுத்திவயிராக்கியமாகப்பாரே. (௧௦)

பாரப்பாவுலகத்தில்ஞானமென்பார்
பராபரத்தினிருப்பிடத்தைப்பாரார்பாரார்
சாரப்பாவுலகத்தில்யோகஞ்செய்வார்
சார்ந்திருக்கும்பரஞ்சோதிதன்னைக்காணார்
ஊரப்பாகிரியையென்றேயுழலுவார்கள்
உத்தமனேயுள்ளுயிரையறியமாட்டார்
நேரப்பாசரியையென்பார்தன்னுக்குள்ளே
நெருப்பாறுந்திருக்கோயில்கண்டிலாரே. (௧௧)

நெறிப்பாறுமயிர்ப்பாலங்கடந்தப்பாலே
நிலையாதகங்கையடாநீஞ்சப்போகா
திருப்பார்களதுமயமாயாடியாடி
யின்பநல்ம்பற்றுகியோடியோடிக்
குறிப்பாகக்கண்டவர்க்கேதெரியுமார்க்கம்
கோடிரவிசுடர்காந்திகொண்டவாட்டம்
வெரிப்பாகப்பூரணத்தையறிவாற்பார்க்க
வெட்டவெளியாகுமடாகுருவைத்தேடே. (கஉ)

பெருநூற்காவியப் புகழ்ச்சி.

குருவானஞானகாவியத்திற்றானும்
கூர்மையுள்ளபூரணத்தின்குறிப்பைச்சொன்னேன்
பரிவானசௌமியமாஞ்சுருக்கமப்பா
பாடினேனைஞ்னூற்றின்ஞானமெல்லாம்
கருவானபூரணமீராறுநூலில்
கருதினேன்ஞானமொடுகற்பமெல்லாம்
சரியானபெருநூறகாவியத்திற்றானும்
சாற்றினேன்மும்மணியின்றன்மைதானே. (கங)

தன்மையுள்ளசௌமியசாகரத்திற்றானும்
சகலமுமேயாதியந்தமாகச்சொன்னேன்
முன்னமேகுருநூல்பன்னிரண்டுநூற்றின்
முத்தியுள்ளஞானமொடுகற்பஞ்சொன்னேன்
வன்மையுள்ளவயித்தியபூரணமீதையா
வாழ்த்தினேன்வயித்தியத்தின்வழிதானன்றாய்ச்
சொன்னமொழியெவ்வளவுந்தப்போவில்லை
சோதியென்றபூரணத்தாற்றுலங்கினேனே. (கச)

தசவாயு தசநாடிகளின் பெயர்.

பூரணமாமாதாரந்தன்னினின்ற
புரியட்டதசவாயுப்பேர்தான்கேளு
வாரணமாம்பிராணனேடபானன்றானும்
மகத்தானவுதானனுடன்சமானன்வியானன்

காரணமாநாகனொடுகூர்மன்றானும்
கனமானகிரிகரன்கூர்தேவதத்தன்
ஆரணமாந்தனஞ்சயனும்பத்துமாச்சு
அப்பனேயசைவையினியறைகின்றேனே. (கரு)

அறைகிறேனிடைகலைபின் சுழினையாகி
அலம்புடையுங்காந்தாரியத்தியோடே
இறையானசிகுவைசங்கினியோடெண்ண
வியல்புருடன்குருவென்பர்சோத்திரந்தான்
நிறையானநெடுந்துவக்குச்சட்சுவோடு
நேர்மையுள்ளசிங்குவையாக்கிராணமாகும்
முறையுடனேயிவையறிந்துநிதானங்கண்டு
முதன்மையுள்ளகுருநாடியஞ்சுங்கேளே. (கசு)

புருஷநாடி.

அஞ்சாகிப்பத்தானதசநாடிக்குள்
அப்பனேரவிமதியுநெருப்புமாகி
மிஞ்சாதவாதபித்தசிலேத்மமாகி
வீறுமன்மூன்றினிலேவியாதிகாண
நெஞ்சாரக்காணுதற்குவகையைக்கேளு
நேர்மையுள்ளதத்துவத்தைநினைவாய்ப்பார்த்துச்
செஞ்சாரைபோலப்பாநாடிதன்னைத்
திரமாகக்காணுதற்குவகையைக்கேளே. (கஎ)

கேளப்பாபுருடருக்குவலதுகையைக்
கிருபையுடன்றான்பிடித்துநெட்டைவாங்கிச்
சூளப்பாபெருவிரலங்குலத்துக்கப்பால்
சுகமாகமூவிரலாலமுத்திப்பாரு
வாளப்பாமுதல்விரலேவாதநாடி
வண்மையுடனடுவிரலேபித்தநாடி
தேளப்பாகடைவிரலேசிலேத்மநாடி
திரமாகநின்னறிவாற்றெளிந்துகாணே (கஅ)

புருஷருக்கு நாடி நடக்கும் விதம்.

காணவேபுருடருக்குவாதநாடி
 கானகத்துமயில்போலுமன்னம்போலும்
தோணவேகோழிநடைநடக்குஞ்சொன்னேன்
 துரியமென்றபித்தத்தினாடிகேளாய்
ஏணவேயானையுடநடையைப்போலும்
 என்மகனேயட்டையைப்போனடக்கும்பாரு
வேணவேசிலேத்துமந்தான்பாம்புபோலும்
 மென்றவளைப்பாய்ச்சதுபோலாகும்பாரே. (௧௯)

பெண்களுக்கு நாடி நடக்கும் விதம்.

பார்க்கவேபெண்டுகளுக்கிடதுபக்கம்
 பதிவாகப்பார்த்திடவேபகாக்கேளு
காக்கவேவாதமதுசர்ப்பம்போலாம்
 கனமானபித்தமதுதவளைபோலாம்
ஏற்கவேயையமென்றநாடிதானும்
 இன்னடையாவன்னம்போற்செழிப்பாய்க்காணும்
ஆர்க்குமேதோன்றுமிந்தநாடிமூன்றும்
 அனுதினமுநல்லறிவாலறிந்துதேறே. (௨0)

கலை நாடி.

தேறவேசந்திரனும்வாதநாடி
 திரமானசூரியனும்பித்தநாடி
மீறவேயக்கினியுஞ்சிலேத்மநாடி
 விளங்கவேவியாழமதிலங்கிமீறும்
கூறவேமந்தன்சேயிரவிமூன்றும்
 குணமானசூரியனுங்குழறியோடும்
ஏறவேதிங்கள்புதன்வெள்ளிதானும்
 இன்பமுள்ளசந்திரனுமோடுங்காணே. (௨௧)

வியாதியறியும் விதம்.

காணவேயிரவியிலேவாதமோடில்
    கனமானசளியிருமலிரைப்புண்டாகும்
நாணவேசெவ்வாயில்வாதமோடில்
    நன்மையுள்ளசுரமதுதானணுகுஞ்சொன்னேன்
தோணவேமந்தனிலேவாதமோடில்
    துணிவாகச்சீதளமுஞ்சந்நியெய்தும்
வேணவேவியாழத்தில்வாதமோடில்
    விலாவோடுதேகமெல்லாம்வலியுண்டாமே. (௨௨)

உண்டானதிங்களிலேபித்தமீறில்
    உத்தமனேசலதோஷமுடனேகாணும்
பண்டானபுந்தியிலேபித்தமோடில்
    பாரமுடனீரேற்றந்தலைக்குற்றுண்டாம்
அண்டானவெள்ளியிலேபித்தமோடில்
    அப்பனேகண்ணோயுங்காதுநோயாம்
தண்டானகுருவினிலேபித்தமோடில்
    தண்மையுறுந்தாபசுரந்தலைநோக்காடே. (௨௩)

நோக்காட்டையறிந்துரைக்கவயித்தியர்க்கு
    நுண்ணறிவாச்சொல்லிவிட்டேனுணுக்கமெல்லாம்
*பார்க்காட்டாற்றெரியாதுபழக்கமாகப்
    பார்த்தறிந்தோர்தமையடுத்துப்பரிவாய்க்கேளு
†கேட்காட்டாற்கிடையாதிவ்வுலகத்துள்ளே
    கிருபையுடன்மனவுறுதியாகநீயும்
‡வாய்க்காட்டாவிந்நூலில்வாய்க்கும்பாரு
    வண்மையுள்ளகுருநாடிவகையைப்பாரே. (௨௪)

---

* பார்க்காவிட்டால் † கேட்காவிட்டால் ‡ வாய்க்காவிட்டால் என்பன பார்க்காட்டால்-கேட்காட்டார்ல்-வாய்க்காட்டால் என விகாரமாயின.

குருநாடியிருக்கும் இடம்.

பாரப்பாகுருநாடியைக்தினுப்பண்
 பரந்துநிற்கும்வரலாறுதன்னைக்கேளு
சிரப்பாபித்தத்தின் முன்னேநிற்குந்
 தெசநாடிபத்துக்குந்திரமாய்நிற்கும்
ஏரப்பாவாதமென்றுசொல்வார்மூடர்
 இருத்தியங்கேபார்ப்பளவில்வேறாய்நிற்கும்
தாரப்பாகொண்டகுருநாடிநேர்மை
 தனையறியவகையுனக்குச்சாற்றுவேனே. (உ௫)

பஞ்சநாடிகளிருக்கும் இடம்.

சாற்றுவேன்பெருவிரலிற்பூதநாடி
 சங்கையில்லாஆள் தூண்டிவாதமென்க
ஏற்றமுள்ளநடுவிரல்தான்பித்தமாகும்
 இசைந்தவொருபவித்திரமேயையமாகும்
தோற்றுகின்றசிறுவிரல்தான்பூதநாடி
 சுத்தமுள்ளகுருநாடியைந்துட்சேரும்
மாற்றுமேகுருநாடியைந்துட்சேர்ந்து
 வளர்ந்துநிற்கும்பேர்பெரியவண்மைதானே. (உசு)

குருநாடி நடையும் குணமும்.

பேர்பெரியகுருநாடிக்குணமேதென்னில்
 புரண்டுவரில்வாதத்திலட்டைபோலச்
சீறியவாயுமிகுமிரும்மேறேன்றும்
 தினவுசொறிமிகவும்வருந்தேகம்வாடும்
சூரியபித்தத்திலாமைபோலத்
 தோன்றிடிலேசுரமிருக்குஞ்சுழற்றும்வாய்நீர்
கார்பெருகிவருவதுபோல்வியர்வுதோன்றும்
 கதித்திடுநீர்க்கட்டுசிலேத்துமத்திற்போமே. (உஎ)

சேற்றுமத்திற்குருநாடி சிங்கம்போலச்
சீறிநிற்கிலதின் குணந்தான் சந்நிதோன்றும்
ஆற்பநத்தையூடுருவத்தமருமாகில்
அசாத்தியமாமரணகுறிதப்பாதப்பா
காற்பெனவேகுருநாடிகுன்றிப்போகில்
கழியும்வயிற்றுக்கடுப்பாங்கைகால்வீங்கும்
ஏற்பனவுமில்லையில்லைதிட்டஞ்சொன்னேன்
இசைந்தகுருநாடிநிலையிருத்திப்பாரே. (உஅ)

பாரப்பாகுருநாடிபக்கம்பாயில்
பாரித்தசிலேத்துமந்தானெதிரேமோதும்
கூரப்பாகுருநாடிநேரேநிற்கில்
குற்றமில்லைவாதபித்தமிரண்டுஞ்சேரும்
தாரப்பாகுருநாடிபின்னேவாங்கில்
தப்பாதேயசாத்தியங்கடானுண்டாகும்
காரப்பாவுடலுக்குளுயிராய்நின்ற
கருவானகுருநாடியொன்றுகாணே. (உகூ)

ஒன்றுக்குமெட்டாதநாடிநேர்மை
யூடுருவித்தானிருக்குமுண்மைகேளாய்
வண்டுகடான்மதுவருந்துநேர்மைபோல
வாதபித்தசிலேத்துமத்தின்மதுவையுண்ணும்
என்றைக்கும்வாத*பித்தநடுவேநிற்கும்
ஏறுவதுங்குறைவதுவுமில்லையப்பா
கன்றுக்குப்பாலிறங்கும்பசுவைப்போலக்
காத்திருக்குங்குருநாடிகாலைப்பாரே. (௩௦)

குருநாடிநிலையறியாக்குருடரெல்லாம்
கூட்டமிட்டுச்சாத்திரத்துக்குவமைசொல்வார்
மருநாடிவாதபித்தசிலேத்மமூன்றின்
மத்தியமென்றிதையறியார்வார்த்தைசொல்வார்

* 'பித்தம்' என்பதை பித்து - அம் எனப்பிரித்து, அம்முக்குச் சிலேத்மம் எனப் பொருள் கொள்க.

கருநாடிகுருநாடியாகக்காணும்
கைம்முறையாய்க்குருதொட்டுக்காட்டத்தோன்றும்
பெருநாடிசாத்திரத்தின்மயங்கிடாதே
புலத்தியாகுருநாடிப்பின்னல்பாரே. (௫௧)

பார்த்தப்பா*வாதபித்தநடுவேபார்க்கில்
வண்டதுபோன்மதுவுண்ணுமத்தியத்தில்
போற்றப்பாமூவிரலுமுருவித்தாண்டிப்
பூரணமாய்மூலமுதலுருவிப்பாய்ந்து
சாற்றப்பாவிசைநரம்பினூடேசேர்ந்து
சந்திரமண்டலமேவிச்சார்ந்துபின்னும்
நாற்றமுற்றகுருநாடியெங்குஞ்சுற்றி
நடுவில்வருநேர்மைதனைநாடிப்பாரே. (௫௨)

பம்பரம்போற்குருநாடிகிறுகிறென்று
பற்றிநிற்கும்வாதபித்தநடுவிலேதான்
அம்பரம்போற்குமுறியெழும்வாதபித்தம்
ஐயமென்றநாடிமுதலாடியோடிக்
கம்பமுடன்மண்டலங்கண்மூன்றுஞ்சுற்றிக்
கத்தரிக்கோன்மாறலெனக்கட்டிச்சேர்ந்து
தம்பமுடன்வாதபித்தநடுவிலேதான்
தாரகம்போலாடிநிற்குங்குருவிதாமே. (௫௫)

குருநாடிவாதமதினிற்கும்போது
கோழியுடனன்னமயில்குறியாமென்ன
வருநாடிபித்தத்தினிற்கும்போது
வளராமையட்டையெனவகுக்கலாமே
திருநாடிசிலேத்துமத்தினிற்கும்போது
தெரித்துவிழும்†விட்டிலைப்போற்றெளிந்துகாணும்
பெருநாடிசாஸ்திரத்திலையவேண்டாம்
பிராணகலைதனையறிந்துமரணம்பாரே. (௫௪)

---

* பித்தம் - 10 பக்கம் அடிக்குறிப்பில் காண்க.

† இங்குகண்ட சேத்மநாடிநடை 19-ஆவது செய்யுளிற்கண்ட நடையோடு முரண்படுவதை ஆராய்ந்தறிக.

மரண நாடி.

மரணமதையறிவதற்குக்குறியைக்கேளு
வழுவாதவிசைநரம்புகுளிர்ந்துகாணும்
விரணமெனும்பொறிகளெலாந்தளர்ந்துமெத்த
விசைநரம்புந்தான்றளர்ந்துவிரைந்துவாங்கி
நரநரெனப்பற்கடித்துமணியும்நட்டு
நாவுலர்ந்துமூச்சயர்ந்துநடுக்கமுண்டாய்த்
துரணமெனும்வாதபித்தசிலேத்மமெல்லாம்
சோத்தியம்பார்விட்டிலைப்போற்றுடிக்கிற்சாவாம்.

துடிகொண்டசேத்துமந்தான்வெள்ளம்போலே
சுருசுருக்காய்மடமடெனவோடுமாகில்
அடிகண்டமற்றுநாண்மரணமாகும்
அப்பனேபித்தமதுசிதறியோடில்
முடிகொண்டமூன்றுநாள்சாவார்சொன்னேன்
முழுமையுமேவாதமதுசிதறியோடில்
இடிகண்டஎட்டாநாள்மரணமாவர்
இன்பமாய்க்கண்டறிந்தேயிடைந்துநில்லே. (௫௬)

நில்லப்பாவாதபித்தமிரண்டுங்கூடி
நிலைதப்பிச்சிதறியஃதோடுமானால்
கொல்லுமப்பாபதினைந்துநாளிற்றானும்
குணமாகவிதனுடனேஐயுங்கூடில்
வெல்லுமப்பாமண்டலத்தில்யாக்கைபாழாம்
விதமாகமூன்றுமேயொன்றாய்க்கூடில்
அல்லப்பாவரணைவாற்றுடியேகாணில்
அப்பனேயவர்பிழையாரறிந்துபாரே. (௫௭)

பிழையாதவாதபித்தசேத்மங்கூடிப்
புரண்டுவருந்தேட்கொடுக்குப்போலேயாடி
உளையாதவோட்டம்போலோடுமானால்
உத்தமனேதிங்களிலேமரணமாவார்

குளையாதநாடியின்மெய்க்குறியைக்காணூர்
கூட்டமிட்டுக்குருவெனவேபிரசங்கிப்பார்
விழியானகண்ணிரண்டுமற்றைக்கண்ணும்
விதியறிந்தாற்சந்தியுமேவிலகும்பாரே. (௩அ)

சந்தியெழும்போதிலிந்தநாடிமூன்றுஞ்
சாதகமாய்ச்சுழல்வண்டுதண்ணீர்மீதில்
உன்னியதுபரபரத்தேயோடுறுப்போல்
ஓடியெங்கும்வாதபித்தசேத்மமெல்லாம்
கண்ணியதுசாதகமாய்வருமேயாகில்
கதிப்பாகும்வாதபித்தம்பம்பரம்போல்
பின்னியதுவிட்டிலைப்போற்றெறித்துவிழில்
பேச்சில்லைமரணமென்றுபிரித்துச்சொல்லே. (௩கூ)

சொல்லப்பாவாயுவுக்குமந்தத்துக்குந்
துணையாகவமர்ந்துமெத்தத்தளர்வாயோடும்
அல்லப்பாபசிதனக்குத்தூங்கியோடும்
அப்பனேசந்திதான்புழுப்போலோடும்
நில்லப்பாவயிற்றுவலிகண்டபேர்க்கு
நேராகவுள்ளுறவாய்வாங்கியோடும்
கல்லப்பாகிரந்தியென்றநோய்தனக்குக்
கரையுடைந்தவருவியைப்போற்காணுங்காணே. ()

கரணிதத்தில்வாதமென்றூற்சேத்மவாதம்
காணுமடாசூலையென்றூற்சேத்மபித்தம்
விரணமுடன்புண்புரைக்குவாதபித்தம்
விதியறியாப்பீனிசந்தான்பித்தசேத்மம்
துரணமுடனீர்ப்பாடுகொர்ப்பப்பாட்டால்
சொல்லுகிறேனடியெல்லாஞ்சுழன்றுகாணும்
கிரணமென்றபாம்புவிஷந்தாதுவெல்லாம்
[illegible]டுக்காணுதுகொர்ப்பமாமே. (சக)

வாயுவுக்கும் - மந்தத்துக்கும் - கேர்ப்பிணிக்கும் வியாதிநாடி.

கெர்ப்பிணிக்குவாதபித்தங்கலங்கிக்காணும்
கிராணியதிசாரமென்றால்தளர்ந்துகாணும்
உற்பவித்தசயமிளைகாசரோகம்
உற்றிடிலோசிலேத்துமந்தான்மீறிக்காணும்
பிற்பிடித்தவிஷமீருஞ்சோகைபாண்டும்
பெலமானல் * மேகனைப்போல்மீட்டும்பாரு
பற்பிடித்தமேகமென்றால்பித்தமீறும்
பாலகனேகாங்கைகொண்டுநீராம்பாரே. (சஉ)

நீர்மேகமானவர்க்குநாடிதானும்
நிர்ணயமாய்காடியெல்லாம்பெலமேகெட்டுக்
கார்மேகம்போல்வந்தவெரியின்மேலே
கரண்டுவிழும்புழுப்போலேபுரட்டிக்காணும்
சீர்மேகமானவர்க்குநாடிதானும்
சீறிநிற்கும்குருநாடிதிறமாய்த்தானும்
பேர்மேகங்கடுத்திடுக்கில்வாதபித்தம்
பின்னியதுதுடித்துவருமுற்றுப்பாரே. (சங)

உற்றதொருகெர்ப்பிணிக்குச்சேத்மபித்தம்
உறுதியெனும்விக்கலுக்குச்சேத்மவாதம்
மற்றதொருசுரந்தனக்குவாதபித்தம்
வகையானகணக்காய்ச்சலபித்தவாதம்
சித்தமுறுந்தலையிடிக்குப்பித்தமாகுஞ்
சீரானகயரோகந்தனக்குப்பித்தம்
குற்றமில்லையிதின்குணங்கள்மருந்தாற்றீரும்
குருவானபூரணத்தின்குறிதான்பாரே. (சச)

* "வீணையைப்போல்" என்றும் பாடம்.

அஷ்டகர்மப்பாவை

தம்பனம்.

பாரப்பாபூரணகாவியத்திற்றானும்
பாடினேனஷ்டகர்மப்பாவைதன்னை
நேரப்பாவப்பாவைதன்னைநீயும்
நினைவாகமனதினிலேநிறுத்திக்கொண்டு
சாரப்பாவுனதறிவைமேலுக்கேற்றிச்
சந்திரனைச்சூரியனிற்சாரப்பண்ணி
கூரப்பாவக்கினியிற்கூர்ந்துநின்று
குணமானபாவைதனைக்குருவாய்ப்போற்றே (௬௫)

போற்றியேநடுமனையினின்றுகொண்டு
பூரணமாய்நயமயநவென்றேவோதி
பார்த்திபனேகருப்பூரதீபம்பார்த்துப்
பாங்காகவிபூதியைநீகையில்வாங்கி
நேர்த்தியாயநுதினமும்பூசிப்பூசி
நீயிருக்கவதினுடையநேர்மைகேளு
பார்த்தபேர்சகலருந்தம்பனமேயாவார்
பாலகனேபராபரத்தைப்பணிந்துபோற்றே. (௬௬)

வசியம்.

பணிந்துநின்றபொற்பாவைதன்னைநீயும்
பாலகனேசுழிமுனையான்மேருக்கேற்றி
அணிந்துநின்றயவசிவயவென்றுநீயும்
அப்பனேகர்ப்பூரதீபம்பார்த்துத்
துணிந்துநின்றவிபூதிதனைக்கையில்வாங்கிச்
சுத்தமுடன்லலாடமதிற்பூசிவிட்டால்
அணிந்துநின்றசத்துருக்கள்வசியமாவார்
…ருந்தாம்வணங்கிநிற்பார்கேளே. (௬௭)

மோகனம்.

கேளப்பாபொற்பாவைதன்னைநீயும்
கெடியாகக்கேசரத்தினிறுத்திக்கொண்டு
வாளப்பாபூரணத்தின்மநதைவூன்றி
மயநயமவென்றுநீமனதிற்கொண்டு
வேளப்பாகர்ப்பூரதீபம்பார்த்து
விபூதிதனையுத்தளமாய்ப்பூசிக்கொண்டால்
கோளப்பாவொன்றுமில்லையெல்லாமோகங்
குணமானபூரணத்தின்கிருபையாலே. (௪அ)

மாரணம்.

கிருபையென்றபூரணத்தாற்பாவைதன்னைக்
கெர்ச்சிதமானடுமனையினுட்டிக்கொண்டு
வறுமையுடன்சிவயவசியென்றுநீயும்
மார்க்கமுடன்கர்ப்பூரதீபம்பார்த்துப்
பெருமையுடன்விபூதியுத்தளமாய்ப்பூசில்
பேரானசத்துருக்கண்மரணமாவார்
அருபமென்றபூரணத்தினுண்மையாலே
அசையாதகோரயெல்லாமகன்றுபோமே. (௪௯)

உச்சாடனம்.

போமப்பாபூரணத்தாற்பாவைதன்னைப்
புத்தியுடன்சுழிமுனையிற்கண்டுகொண்டு
காமப்பாவசியசிவவென்றுநீயுங்
கனமானகர்ப்பூரதீபம்பார்த்தே
ஓமப்பாவறுதினமும்பூசிக்கொண்டால்
உன்னுடையசத்துருக்களோடிப்போவார்
காமப்பால்கொண்டுநிதங்கருவினின்று
கண்மணியாற்சின்மணியைக்கண்டு... (௫0)

ஆக்ருஷ்ணம்.

போற்றப்பாபொற்பாவைதன்னையும்
புத்தியுள்ளவறிவினிடம்பொருந்தவைத்துப்
பார்த்தப்பாயநமநயவென்றுநீயும்
பத்தியுடன்கர்ப்பூரதீபம்பார்த்துச்
சார்த்தப்பாவிபூதியைநீலலாடமீதிற்
சகலருமேகிருஷ்ணமாதன்னைச்சேர்வார்
காத்தப்பாபூரணத்தைப்பார்க்கப்பார்க்கக்
கனமாயைத்தான்மீர்ந்துசோதியாமே. (ருக)

வித்துவேஷணம்.

சோதியென்றபராஞ்சோதிப்பாவைதன்னைச்
சுத்தமுடனுச்சியென்றமேருக்கேற்றி
நீதியுடன்வயசியவவென்றுநீயும்
நிலைத்தந்தக்கர்ப்பூரதீபம்பார்த்தே
ஆதியென்றவிபூதியைநீகையில்வாங்கி
அணிந்துகொண்டால்வேஷணமாமறிவாற்பாரு
பாதிமதியணிந்தவரன்கிருபையாலே
பாராபரத்தின்குறிகண்டேயறிவாய்நில்லே. (ருஉ)

பேதனம.

நில்லென்றநிலைதனிலேநின்றுகொண்டு
நிலையாதபொற்பாவைநினைவிற்சேர்த்துச்
சொல்லுமந்திரஞ்சியவயசியென்றென்று
சொல்லியேகர்ப்பூரதீபங்கண்டே
அல்லுமேவிபூதியுத்தளமாப்பூச
அனைவோருமுனைக்கண்டாற்பேதனிப்பார்
வெல்லுமேயட்டகர்மமெட்டுமாடும்
[illegible]ண்டறிந்துமேலேபாரே. (ருங)

மேலானகுதம்பத்தையுற்றுப்பாரு
மேன்மையுள்ளமூன்றெழுத்துமொன்றாய்க்காணும்
காலானவாசியினன்றழுத்துமங்கே
கனமானபிரமாவின்கருணையங்கே
மாலானமாலின்றன்பதியுமங்கே
மந்திரங்கண்மூன்றெழுத்தாய்மறைந்ததங்கே
சேலானசெயலறிந்தாலெல்லாமுண்டு
செயலறியச்சற்குருவைத்தேடிப்பாரே. (௫௪)

முப்பூ.

பாரப்பாவின்னமொருசெய்திகேளு
பதிவானமுப்பூவையறியவென்றால்
பேரப்பாசொல்லுகிறேனன்றாய்க்கேளு
பெருமையுள்ளபிறப்பிறப்புமகத்துமூலி
வேரப்பாவடிமுடியுநடுவுமாகி
வேதாந்தசித்தாந்தநாதமாகி
காரப்பாவாலையுடன்புவனையாகி
கருணையுள்ளதிரிபுரையின்கண்மூன்றாமே. (௫௫)

மூன்றானபூநீற்றைச்சலத்திற்கொட்டி
முத்துப்போற்றெளிவிறுத்ததைங்காலேகாய்ச்சு
நன்றானவெடியுப்புப்பலந்தாணுலு
நாட்டதிலேசீனமோடிந்திரண்டே
ஒன்றானசத்தியெட்டுச்சோடசந்தான்
உத்தமனேகல்வத்திலிட்டுக்கொண்டு
சென்றாட்டவெண்கருவிலெருக்கம்பால்வார்
சிறந்தபழச்சாறாட்டியரைத்துப்[illegible] (௫௬)

சவர்க்காரவைப்பு.

போட்டரைக்கச்சூடனொருகாசுபோடு
புகழானசரக்கெல்லாஞ்சேரவொன்ருய்
நீட்டரைசாமம்மிரண்டுக்கதிகம்வேண்டாம்
நிலையானவில்லைசெய்துநினைவாய்க்கேளு
காட்டரையரவிதனிலேகாயப்போடு
கனமானசுண்ணும்புக்குள்ளேவைத்தே
ஆட்டமுடனடுப்பேற்றியெரிப்பாய்சாமம்
அத்தோடேவாங்கிமெல்லப்புடத்தைப்போடே.

புடமெடுத்தேயாறவைத்துப்பூரணமேநோக்கிப்
புத்தியுடன்ருனெடுக்கவெளுத்துநீறும்
குடமெடுத்தகொங்கைமின்ளுள்மாலின்றேவி
குதிகொள்வாளுன்முகத்திற்குறையொன்றில்லை
தடுமாறிக்கைபாகந்தவறிடாதே
தண்மையுடன்முப்பூவைக்கண்டுதேறு
விடமெடுத்தசவர்க்காரக்குருவிதாச்சு
வெள்ளாட்டிற்கெதிர்ப்பட்டவேங்கையாச்சே.(ருஅ)

முப்பூவின்பெயர்.

வேங்கையென்றமுப்பூவின்பேர்தான்கேளு
வெறித்தசிங்கம்பேரண்டவெள்ளைச்சாரை
தாங்கையென்றசிறுநாகம்பட்சிராசன்
சரக்கானசெந்துவுக்குக்காலன்காலன்
பாங்கையெல்லாங்கண்டவனேவாதஞானி
பதிவானவண்டமடாவாதியுப்பே
ஓங்கியென்றசத்தியுப்புவழலையுப்பாம்
[illegible]யுள்ளநாகவுப்பையுகந்துகேளே. (ருக)

நாதவுப்பின்பெயர்.

உகந்துநின் றநாதமடாவாலேவாலை
　யோங்காரறீங்காரவொருமைப்பிள்ளை
செகந்தனிலேதிருவென் றுஞ்சேந்தியென் றுந்
　தீட்டானதீட்ட றுக்குஞ்செல்லியென் றும்
அகந்தனிலேயமிர்தமென் றுஞ்செந்தேனென் றும்
　அன்பானவிஷமென் றும்பேய்ச்சியென் றும்
முகந்தனிலேசிந்தூரத்திலதமென் றும்
　மோனமுள்ளவாலையடாசத்திகேளே. (௬௦)

சத்தியுப்பின்பெயர்.

சத்தியென் றவுப்பின் றன்பேரேதென்றால்
　தயங்காததரிசிலென் றுங்காரமென் றுஞ்
சித்தானசெந்தமென் றுமண்தானென் றுஞ்
　சிவசிவாவன்னமயத்தன்னமென் றும்
உத்தியென் றபாரசத்திபெருமைக்காரி
　யொடுங்காதவாசமுள்ளவேமசத்தி
கற்று லுமனம்பதறுங்கைகால்கூசுங்
　கருணையுள்ளசத்தியைநீகண்டாற்றுனே. (௬௧)

வழலைப்பேர்.

தானானவழலையின் றன்பேர்தான்கேளு
　தருவானவண்டகேசரிதானென் றும்
கோனானகொடுமுடியாம்பொதியிலென் றுங்
　குருவானபீடமென் றுங்குருக்களென் றுந்
தேனானசோதியென் றுந்தீபமென் றுந்
　தெவிட்டாதவமிர்தரசவாக்கியமென் றுங்
காணுகபூரணமாம்வழலையென் றுங்
　கண்டுபார்முப்பூவின்கருவிதாமே. (௬௨)

ஆமப்பாமுப்பூவுமொன்றாய்க்கூடி
ஆதியிலேமும்மூர்த்தியானார்பாரு
காமப்பால்கானற்பால்சோமப்பாலுங்
கலந்துநின்றரவிமதியக்கினியுமாகி
ஓமப்பாமூலமுதலாறுமாகி
யுடன்சேர்ந்தபொருள்தனையுற்றுப்பாரு
தாமப்பாமுப்பொருளென்றிதற்குப்பேராஞ்
சார்மூலமுதன்முடிவுவரையுமெண்ணே. (௬௩)

எண்ணவேயின்னம்வெகுபேர்களுண்டாம்
என்மகனேபுத்தியினாலறிந்துகொண்டு
சொன்னதொருகருமானமேதென்றாலே
சொல்லறிந்துசொல்லுகிறேன்பிண்டம்பிண்டம்
மன்னவனேபிண்டமென்றான்மலைக்கவேண்டா
மந்திரகலைவழலைமலர்பூக்குங்காலம்
முன்னமேயக்காலமறிந்துமைந்தா
முத்திகொண்டநாதமதில்விந்தைப்பாய்ச்சே. (௬௪)

விண்ட அண்டம்.

விந்துநிலையறிந்துவிந்துபாயுங்காலம்
வேதாந்தநாதமதற்குயிருண்டாகி
சொந்தமுடன்றிரண்டுடனேமணியுமாகிச்
சோதிமணியானதுவும்பிறையுமாகி
வந்தமதிப்பிறையதுவும்வட்டமாகி
வட்டமதுதிரண்டுருவாய்மண்ணுமாகி
அந்தமுள்ளமண்ணுகரியுப்பாய்நின்றே
[illegible]னபிண்டமாச்சே. (௬௫)

பிண்டமென்றசவர்க்காரவித்தைதன்னை
  பேருலகிலாரறியப்போகிறார்கள்
கண்டவர்கள்கோடியிலேயொருவருண்டு
  கைம்முறையாயவர்காட்டிற்குருவுந்தோன்றும்
பண்டாகநின்றபூரணத்தைக்கண்டாற்
  பாலகனேமுப்பூவுநன்றாய்த்தோன்றும்
விண்டதில்லைகண்டவர்கள்சொல்லார்சொல்லார்
  வீணாகச்சுட்டலைந்துவிதியென்பாரே. (௬௬)

விதியானவிதியறிந்தோன்வாதங்காண்பான்
  விதியறியான்பதியறியான்வீணன்வீணன்
சதியாகமுன்சொன்னமுப்பூவாலே
  சகலதொழில்கைம்முறையாய்ச்செய்யலாகும்
பதியானபதியறிந்தேயமிர்தமுண்டு
  பாலகனேலாடமதிற்பற்றிக்கொண்டு
கெதியானமோட்சமெனநின்றாயானாற்
  கேசரத்திற்கேசரியாள்கிருபையாமே. (௬௭)

வசியத்துக்கு விபூதி.

கிருபையுள்ளபுலத்தியனேவசியமொன்று
  கெணிதமுடன்சொல்லுகிறேனன்றாய்க்கேளு
துருவமுள்ளவுருத்திரபூமியிலேசென்று
  சுகமாகவெந்தஅஸ்தியெடுத்துமைந்தா
அருவமுள்ளஅஸ்தியுடன்விஷ்ணுமூலி
  ஆதிசத்திதன்னுடையவேருங்கூட்டிக்
கருவையினிச்சொல்லுகிறேன்கலசப்பாலாற்
  கருணையுடன்றானரைத்தேநூற்...

செய்யடாவுண்டைதனையுலரவைத்துச்
செம்மையுடனெருவடுக்கிப்புடத்தைப்போடு
மெய்யடாசொல்லுகிறேனீறிப்போகும்
வேதாந்தமானதொருநீற்றைவாங்கி
வையடாசவாதுடனேபுனுகுசேர்த்து
மார்க்கமுடன் அங்ஙெனவேலட்சமோதி
மையமென்றநெற்றியிலேவிபூதிபூசி
மார்க்கமுடன் அரசரிடஞ்சென்றுபாரே. (௬௯)

சென்றுமிகநின்றுடனேயிராசமோகஞ்
சிவசிவாசெகமோகம்ஸ்ரீவசியமாகும்
அண்டர்பிரானருள்பெருகிவசியமுண்டாம்
அப்பனேஓம்கிலியும்ரீயுமென்று
பண்டுபோலிலட்சமுருவேற்றிப்பின்னர்
பாலகனேலலாடமிசைப்பூசிச்சென்றால்
தொண்டரென்றேசத்துருக்கள்வணங்குவார்கள்
துஷ்டனென்றமிருகமெல்லாம்வசியமாமே. (௭௰)

வசியவளையம்.

ஆமென்றவசியமொன்றுசொல்லக்கேளு
ஆகிமுதலானகொடியறுகுவாங்கி
ஓமென்றுகண்டித்துமதுவிற்போட்டே
ஒருமையுடன்மண்டலஞ்சென்றெடுத்துப்பாரு
நாமென்றநீரதுவுநன்றாய்வற்றி
நடுவானகொடியதுவும்பதமாய்நிற்கும்
காமென்றுதன்மயமாவந்தமூலந்
[illegible]கேளே. (௭௧)

தன்மையென்னவெள்ளியுடன்செம்புசேர்த்துத்
　தருவானதங்கமதுமூன்றமொன்ருய்
உண்மையுடன்ருனுருக்கித்தகடுதட்டி
　உறுதியுள்ளமூலமதைவைத்துருட்டிச்
செம்மையுடன்ரவிவளையம்போலேசெய்து
　தெரியாமற்பொதிந்ததின்வாய்சேர்த்துக்கொண்டு
நன்மைபெறச்சற்குருவைத்தியானம்பண்ணி
　நாயறிலேசத்திமுன்புவைத்துப்போற்றே. (எ௨)

வைத்தெடுத்தரவிவளையம்விளக்கித்தன்னை
　வலதுகையிற்ருன்பூட்டியிருப்பாயானல்
மைத்தமொழிவிழியாருமன்னர்கூட்டம்
　மகத்தானமிருகமுதல்வசியமாகும்
மெய்த்ததோரிம்முறைதான் அதீதவித்தை
　வேதாந்தபூரணத்தில்விண்டமார்க்கம்
உற்றதொருசேதிதன்னையுலகத்தோர்க்கே
　யுரையாதேயுரைத்ததினுலுறுதிபோமே. (எ௩)

வசியமை.

போக்கானஇன்னமொருவசியங்கேளு
　புகழ்பெரியஆவின்கோரோசனைகர்ப்பூரம்
வாக்கானகண்ணனிடமூலிவேரும்
　மகத்தானசந்தனமும்புனுகுங்கூட்டி
தாக்கானமந்திரம்ஓம்றீங்வசிவசி
　சர்வமோகினிவசியமென்றேயோது
தேக்கானதில்லைநடமாடும்போலே
　செந்துவெல்லாந்...

பாரப்பாகிராம்பொன் றுகூடச்சேரில்
பரைவசியஞ்செகவசியமிரண்டுமாடும்
நேரப்பாவுள்ளங்கையுள்ளங்காலில்
நின் றழுக்குஞ்சவ்வா துஞ்சேர்ந்ததானால்
தேரப்பாவசியமதையென்னசொல்வேன்
திரிலோகமூன் றுமேவசியமாகும்
காரப்பாமந்திரத்தைலட்சமோதில்
கருவியெல்லாம்வசியமடாகண்டுபாரே. (எரு)

உரு மாற்ற மை.

வசியமென்றமாற்றமொன் றுசொல்லக்கேளு
வால்நீண்டேயிருக்கின் றகரிச்சான்பிச்சு
வசியமென்றபச்சோந்திபச்சைப்பாம்பு
வண்மையுள்ளபாம்பாணைப்பிச்சுங்கூட்டி
வசியமென்றகரும்பூனைகருங்குரங்கு
மார்க்கமுள்ளகண்ணிரண்டும்பிச்சுங்கூட்டி
வசியமென்றயானைக்கண்சட்டித்தூறில்
மார்க்கமுடன்றான்கருக்கிக்கல்வத்தாட்டே. (எசு)

ஆட்டுவாய்ப்புனுகுடன்சவ்வாதுகூட்டி
அப்பனேசூதகமாநாதம்விட்டே
ஆட்டியேயானையிடதந்தச்செப்பில்
அப்பனேவழித்துவைத்துப்பதனம்பண்ணி
ஆட்டென்றதாம்பிரத்திற்சீலைசுற்றி
அப்பனேவையாட்டான்மைகாணாது
ஆட்டினதோர்மையதனிற்பணம்போனெற்றி
[illegible]ணிந்திடவேநின்னுருவமாருங்காணார். (எஎ)

காணுதேபோகுமடாமையின்சூட்சம்
கருவாக வுலகத்தோரறிந்தாரானால்
வீணாகப்போகாதுகொலைகள்செய்வார்
விருதுபெற்றசித்தருன்னை வைவாரப்பா
* தோணுதமையிதனை வைத்துக்கொண்டு
துருவமென்றஆயிரத்தெட்டிதழினின்றால்
காணுதுகருவிதொண்ணூற்றாறுமுன்னைக்
கைலாசத்திருநடனங்காணுவாயே. (௭௮)

தூரத்துச்செய்தி யறியு மை.

காணுதற்கேயின்னமொருகருவைக்கேளு
காசினியில்வேரெல்லாங்காய்க்கும்பூக்கும்
* தோணுதற்குச்சொன்னபலாவேரைமைந்தா
சுத்தமுடன்றானுலர்த்திநறுக்கிக்கொண்டு
பூணுதற்குமால்தேவிநறுக்கிக்கொஞ்சம்
புத்தியுடன்பாம்பரணைப்பிச்சுக்கூட்டி [டே
† ஆணுவத்தான்மூன்றுமொன்றாய்ப்பொடித்துக்கொண்
அப்பனே அயக்கரண்டிதன்னிற்போடே. (௭௯)

தன்னிலேபசுநெய்யால்வறுத்துக்கொண்டு
சாதகமாய்க்காகிதத்திற்றுழாவிலைவைத்தே
உன்னிதமாய்ப்பசுநெய்யாலரைத்துமைந்தா
உறுதியுள்ளதந்தமென்றசெப்பில்வைத்துத்
தன்னிலையைத்தானறிந்துதியானஞ்செய்து
தண்மையுள்ளவெற்றிலையிற்றடவிப்பாரு
உன்னிதமாய்வெகுதூரமுள்ளசெய்தி
உறுதியுடன் *தோணுமடாவுற்றுப்பாரே. (௮௰)

---

* 'தோணுத' 'தோணு' தோன்றாத, தோன்று என்ப...
வழக்கு.

† 'ஆணுவம்' என எ...

* தோணுமப்பாவெளியிலுள்ளவஸ்துவெல்லாம்
சூட்சமாயிம்மைக்குச்சாபமில்லை
காணுமப்பாபாலர்முதல்கிழவர்மட்டும்
கருணையுள்ளபூரணத்தின்கடாக்ஷத்தாலே
† ஆணுவமாயிம்மையைவெளிவிடாதே
ஆதிசத்தியஞ்சனுதேவிபூசை
பூணுமப்பாமெய்சுருக்கந்தன்னிற்சொன்னேன்
புத்தியுடன்அநுதினமும்பூசைபண்ணே. (அக)

பெண்ணுக்கும் - ஆணுக்கும் இமேருந்து.

பண்ணப்பாவின்னமொருகருவைக்கேளு
பச்சோந்திப்பிச்சுடனேயாடையொட்டி
‡ நிண்ணப்பாசுருங்கியொடுசிறியாநங்கை
நிலையாதவீசுரமாமூலிவேரும்
கண்ணப்பாபொன்னூமத்திலையுங்கூட்டிக்
கருவாகக்குமரியிடநாதத்தாலே
நண்ணப்பாமைபோலேயரைத்துநீயும்
நலமானமிளகதுபோல்குளிகைசெய்யே. (அஉ)

குளிகைதனைச்சிமிளதனிலடைத்துக்கொண்டு
குருவானமனோன்மணியைப்போற்றிசெய்து
குளிகைதனைத்தம்பனமோகனமேயோதிக்
குணமாகவிந்துதனின்மத்தித்தேதான்
குளிகைதனை § யறுசுவையிலிட்டாயானல்
கும்பிட்டுமதிமயங்கிமோகமாவார்
குளிகைதனைக்கொடுத்துவிட்டுமோகியாதே
குணமாகப்பொருள்பறித்தேயருளைத்தேடே. (அங)

---

* 'தோணு' இது அந்தாதியானது.
† 'ஆணவம்' 'ஆணுவம்' என எதுகைநோக்கிற்று.
‡ நிண்ணப்பாசுருங்கி-நின்றுறச்சுருங்கி.
§ அறுசுவையில்-ஆறுசுவைகளிலேதாவதொன்றில், அறுசுவை
ந்தல்ல.

அருளானபெண்களிடபுருஷர்தானும்
அயலாரைமோகித்தேயகல்வாரானால்
வெருளாதேயவனுதந்தன்னிற்சேர்த்து
வேணபடி * யறுசுவையில்தாக்கச்சொல்லு
இருளான † வெளியாசையொழிந்துநல்ல
இல்லிடமேவணங்கிமிகஇணக்கமாவான்
பொருளானபொருளப்பாவெளிவிடாதே
பூரணத்தாற்காரணத்தைப்புகன்றிட்டேனே. (அ௪)

பூதமாரணத் திரி புகை.

புகன்றிட்டேனின்னமொருவித்தைகேளு
புகையானதிரிபுகைதான்புனிதமாக
அகன்றிட்டகருங்கழுதைச்சடைதானொன்று
அப்பனேயதின்கஷ்டம்நாயின்கஷ்டம்
புகன்றிட்டதாம்பிரத்தின்சிலையோடு
பூரேறுஞ்சவர்க்காரஞ்சாரங்கெந்தி
இகழ்ந்திட்டவெடியுப்புங்களஞ்சிவீதம்
என்மகனேபொடிசெய்துதிரியிலூட்டே. (அ௫)

ஊட்டியேகருங்கழுதைநெய்யின்மைந்தா
உத்தமனேதிரிநனைத்துத்தீபமேற்றிக்
காட்டியேதானவித்துப்புகைக்கும்போது
கனமானபேய்பூதங்காணுதோடும்
நாட்டியேதுஷ்டதேவதைகளெல்லாம்
நாடாமற்கோயில்விட்டுக்காட்டிற்போகும்
தாட்டிகமாய்ப்பச்சைமரம்பட்டுப்போகும்
தண்மையுடனிப்புகையைவெளிவிடாதே. (அ௬)

* அறுசுவை - 27-ம் பக்கம் அடிக்குறிப்பைப் பார்க்க.
† வெளிஆசை - பரஸ்திரீகமனம்.

வெளிவிட்டா லுலகத்தில் துஷ்டருண்டு
வேடிக்கைபோலவருஞ்செய்துபார்ப்பார்
விழிகெட்டகுருடரைப்போற்றெய்வமெல்லாம்
வீடுவிட்டுக்காடுறையும்விதியோவென்று
பழிவிட்டுப்போகாது நின்னைச்சுற்றும்
பத்திரமாயிந்நூலைப்பதனம்பண்ணு
வெளிதொட்டேயொளிகண்டஞானியானால்
விஸ்தாரமாகவிதைச்செய்யார்பாரே. (அஎ)

சத்துரு மாரணம்.

பாரப்பாபூதமாரணத்தைச்சொன்னேன்
பதிவானபுலத்தியனே பகைவரெல்லாம்
விரப்பாதானடங்கிமரணமாக
விதமானகருவொன்றுவிளம்பக்கேளு
நேரப்பாசெங்கொட்டைசூதநாபி
நெறியானகௌரிவெள்ளைரத்தபாஷாணம்
ஆரப்பாகார்முகிலுமெலிப்பகையுங்கூட
அப்பனேசெந்தோன்றிச்சுணையுங்கூட்டே. (அஅ)

சுணையுடனேகுருவண்டுங்கழுதைவண்டும்
சொற்பெரியபுரசம்விரைபன்னிரண்டும்
இணையாகமஞ்சாடிவீதங்கூட்டி
என்மகனேயிராகுவின்றீவிஷத்தாலாட்டிக்
கனமானகுழம்புபோற்பண்ணிக்கொண்டு
கருணையிலாச்சத்துருக்கள்காலிற்றூக்குத்
* தினவானுலெடுக்குமடா குழம்பின்வேகம்
தீராதசொறியுடனேகுட்டமாகும். (அகூ)

* 'தினவானுல்' என்பது 'தினவானது' என்னும் பொருட்டு.

சாந்திபண்ண.

குட்டமொடுகுழிவிழுந்துகரைந்துசாவான்
குடிகெடுக்கும்பாவிகளுக்கிதுவேவேண்டும்
கட்டையில்லாப்பாவிகள்தாம்திரும்பிவந்து
காவிலேபணிந்திட்டால்கருதக்கேளு
மட்டமென்றஅறுகதுவோர்பிடிதான்மைந்தா
மார்க்கமுள்ளவெண்குன்றியிலையவ்விதம்
சட்டமாயரைத்ததனைமேலும்பூசித்
தண்மையுடன்றான்குடிக்கச்சாந்தமாமே. (௯௦)

சாந்தமென்றேயிக்குழம்பையுலகத்துள்ள
சகலருக்குஞ்சொல்லாதேசபிப்பார்சித்தர்
காந்தலென்றகாந்தறனைவிடுத்தோருண்டு
கருவானஎளியோர்கள்பெரியோருண்டு
வேந்தரென்றவேந்தருண்டுசிசுக்களுண்டு
வித்தைசொன்னகுருவுண்டுபெண்களுண்டு
பாந்தமுடனிவர்களுமேகுற்றஞ்செய்தாற்
பதறுதேபதறினதாற்பாவமாமே. (௯௧)

பாவமென்றபாவமதுசெய்யனன்றே
பலபேதசாத்திரத்தைப்பார்த்தனன்றே
தாபமென்றதபசுக்குக்கோபமாகா
தண்மையில்லாக்கோபத்தாற்றபசுபாழாம்
சோபமென்றபெண்கள்மேல்மோகம்வேண்டாம்
சொந்தமனையிருந்ததனாற்றோஷமில்லை
கோவிலென்றுங்குளங்களென்றுந்தேடவேண்டாம்
குணமாகவுன்னிடத்திற்குறிதான்காணே.

ஞானம்.

காணுதற்கேயின்னமொருகருவைக்கேளு
கருணையுள்ளபுலத்தியனேகணிதவானே
பூணுதற்குநவ்வெழுத்தின்மேலேமைந்தா
புத்தியுடன்மவ்வெழுத்தாஞ்சிகாரந்தோன்றும்
பேணுதற்குமவ்வெழுத்தின்மேலேசென்றால்
பிலமாகவவ்வெழுத்தின்கீழதாகத்
*தோணுதற்குச்சிவாலயமுநதியுமுண்டு
சுத்தமுடனவ்விடத்தேகண்டுதேரே   (௬௩)

கண்டுமனந்தேர்ந்தந்நதியின்மூழ்கிக்
கமலமலர்ச்சிவாலயத்தைப்பூசைபண்ணில்
தண்டமென்றபூரணத்தின்கீழதாகச்
சபையானசிவாலயங்கணதிகளுண்டு
கொண்டுநின்ற அனுகதமாமயிர்ப்பாலத்தில்
கொள்ளநின்றசிவாலயங்கணதிகளுண்டு
வண்டெனவேவாசிமலர்தனையெடுத்து
மகத்தானசிவாலயத்தைப்பூசைபண்ணே.   (௬௪)

பூசையதுசெய்வதற்குப்பலத்தைக்கேளு
புனிதமுடனஷ்டாங்கஞ்சித்தியாகும்
நேசமுள்ள அஷ்டாங்கஞ்சித்தியானால்
நிலையானசிவயோகநினைவிற்றோன்றும்
பாசமில்லாச்சிவயோகம்நினைத்தபோதே
பரமகுருதேசிகனும்பதிவாய்வந்தே
ராசனென்னசிவராசயோகங்காட்டி
நடுமனையின்பூசைவகைநல்குவாரே.   (௬௫)

* 'தோணு' 26-ஆம் பக்கம் பார்க்க.

வகையானபரமகுருவருவதேது
மார்க்கமுள்ளசரிதைவழிமார்க்கத்தாலே
திகையாமற்சரிதைவழிநடந்தாயானால்
சிவசிவாகிரியையதின்வழியேதோன்றும்
பகையாமற்கிரியைவழிநன்றாய்ப்பார்த்தால்
பாலகனேயோகவழிபரிவாய்த்தோன்றும்
நகையாமல்யோகவழிநன்றாய்ப்பார்த்தால்
நன்மையுள்ளஞானவழிநாடும்பாரே. (௯௬)

பாரப்பாபுலத்தியனேபிரமக்கியானி
பரிவானஞானமதைப்பகரக்கேளு
காரப்பாஆதாரமூலந்தன்னில்
கனிவானஅக்கினிதன்னாவிதன்னைச்
சேரப்பாமுக்கோணச்சுடரினின்று
திருவாசியானதொருசெங்கணமேவிச்
சாரப்பாவந்தமனைசொந்தமென்று
சங்கையுடன்முனிருந்துதன்னைக்காணே. (௯௭)

காணப்பாமேல்வழியைக்கண்டுகூடிக்
கருணையுடனவ்வழியைக்கலந்துமேவிப்
பூணப்பாநிராதாரஞ்சித்தமாகிப்
பூரணமாய்நின்றுபூரணமதாகித்
*தோணப்பாசிவனயன்மாற்பூசைசெய்து
தொடங்கிநின்றதீவினைகளிரண்டுமற்றுப்
பேணப்பாப்ரபஞ்சமற்றாசையற்றுப்
பேரண்டச்சோதியிலேபுகுந்துவாழே. (௯௮)

புகுந்துமிகவாழ்ந்ததனாற்பலத்தைக்கேளு
புனிதமுடன்பிறப்பிறப்புமற்றுநல்ல
செகச்சோதிபாதமதிற்சேர்ந்துவாழ்வாய்
திருவானபூரணத்தின்கிருபையாலே

---

* 'தோணப்பா' தோன்றப்பா என்பதின் வழக்கு.

இகழ்ந்துநீமனமொத்துப்பாராவிட்டால் [னேன்
எண்ணவொண்ணாப்பிறப்பிறப்புமெய்துஞ்சொன்
தகுந்ததொருஞானத்தின்றன்மைகண்டால்
சாயுச்சியபதவியிலேசாரலாமே. (௯௯)

காயசித்திக்கு வயித்திய, வாதம் கூறல்.

சாராமற்காயசித்திசெய்துநீயுஞ்
சமர்த்தாகவுலகமதிற்சஞ்சரித்தால்
வீறான ஆணவத்தைவிட்டுமைந்தா
விருதுபெற்றசித்தனென்றேவிளக்கமாகத்
தாராளமாகநீசரக்குவைப்பும்
தண்மையுள்ளவயித்தியமுந்தானேசெய்து
பேராதமுப்பூவால்வாதங்கண்டு
பேரின்பநிலைகாணப்பெருமைகேளே. (௧00)

சௌவீர வைப்பு.

கேளப்பாபச்சையென்னுஞ்சரக்குவைப்புக்
கெடியானசௌவீரவைப்புக்கேளு.
நாளப்பாகந்தகந்தான்பலமிரண்டு
நன்மையுள்ளபுத்தோட்டிலுருக்கிக்கொண்டு
வேளப்பாசூதமதிற்பலந்தானெட்டு
விட்டதிலேகிண்டையிலேயனல்படாதே
கூழப்பாபோலவுமேஅப்பத்தாற்கிண்டு
குணமானரசமதுவுமடிந்துபோமே. (௧0௧)

போமப்பாகரிபோலேசூதந்தானும்
புத்தியுடன்பொடிசெய்துதோண்டிக்கேற்றி
நாமப்பாமறுதோண்டிகவிழ்த்துமூடி
நன்மையுடனுளுந்தரைத்துச்சீலைசெய்து

தாமப்பாவதின்மேல்மண்சீலையைந்து
தளமாகச்செய்ததையுங்காயவைத்து
ஓமப்பாகணபதிக்குப்பூசைசெய்தே
உத்தமனேயடுப்பேற்றிமூன்றுசாமம். (௧௦௨)

சாமமடாதீபம்போலெரித்துநீயும்
தண்மையுடன்றானிறக்கிப்படுக்கப்போடு
நேமமுடனாறினபின்னவிழ்த்துநீயும்
நினைவாகமேற்றோண்டிதன்னைப்பாரு
தாமமுடன்மாப்போலேயிருக்குஞ்சூதம்
தனையெடுத்துநிறுக்கவுமேகுறையாதப்பா
வாமமுடன்சூதமென்றமாவுதானும்
மைந்தனேபலமெட்டுவைத்துக்கொண்டே. (௧௦௩)

கொண்டதொருவெடியுப்புத்துருசுசீனம்
குணமாகவகைக்கிரண்டுபலந்தான்கூட்டு
கண்டதொருநவாச்சாரம்பலமுநாலு
கனமானபூநீறுபலமதொன்றோ
டுண்டதோரன்னத்தின்பேதிதானும்
உத்தமனேபலமூன்றுகல்லுப்புத்தான்
பண்டையிலேசேர்த்தாற்போல்பலமிரண்டு
பாலகனேகல்லுப்புந்துருசுங்கேளே. (௧௦௪)

கேளப்பாவெளுக்கவேவறுத்துக்கூட்டுக்
கிருபையுள்ளபூசரக்குநன்றாயாட்டி
மாளப்பாமாச்சூதஞ்சேர்த்துநீயும்
மார்க்கமுடன்றானரைத்துக்காயவைத்துக்
கோளப்பாகாசியென்றகுப்பிக்குத்தான்
குணமாகத்தான்வைத்துசீலைசெய்து
தாளப்பாவாராமற்காயவைத்துத்
தண்மையுள்ளகுப்பியரைமருந்தையேற்றே. (௧௦௫

ஏற்றியேநாற்சதுரமாடம்போல
இதமான அடுப்புமேகிழக்கதாகப்
பார்த்திபனேநீயிருக்கவடபாகந்தான்
பாங்கான அடுப்புமட்டந்திண்ணைபோட்டுப்
போற்றியேபுகைபோகமேற்குத்தானும்
பூமிமட்டுந்தரையோடேபொதிந்துவைத்துச்
சாற்றியேசாந்தாலேநன்றாய்த்தீற்றிச்
சமர்த்தானகணபதிக்குப்பூசைபண்ணே. (௧௦௬)

பண்ணப்பாவாலுகையில்தாளியொன்று
பாங்காக அடிகனத்தபாண்டமேற்றி
நண்ணப்பாபொடிமணல்நால்விரன்மட்டிட்டு
நாதாந்தமனோன்மணியைத்தோத்ரஞ்செய்து
கண்ணப்பாமேல்நோக்கித்தீபம்பார்த்துக்
கருணையுள்ளகுப்பிதனையதன்மேல்வைத்து
மண்ணப்பாகழுத்தளவுமணல்தானிட்டு
மார்க்கமுடன்கமலம்போலெரித்திடாயே. (௧௦௭)

எரித்திடவேபன்னிரண்டுசாமந்தானும்
என்மகனேயெரிக்கும்விதஞ்சொல்லக்கேளு
பொருத்திடவேபகலைக்கேயெரித்துநீயும்
புத்தியுடனிராத்திரிக்கவ்வடுப்போடேவை
மறுதினமும்பகலைக்கண்டெரித்துநீயும்
மாற்றிவைத்துமூன்றுநாளெரிக்கும்போது
முரித்திடவேயனல்மீறவெரித்திடாதே
முன்போலநீயெரித்துச்சிலாகைபோடே. (௧௦௮)

சிலாகையிட்டுநீகிண்டிப்பார்த்தாயானால்
தீர்க்கமுடன்வெண்மையாய்க்குப்பிவாயில்
நிலாவதுபோல்வெண்மையாய்மூடிக்காணும்
நிலவரமாயடியிலேகரகரத்துக்

கலாகையது சிலாகையிலேகாணுமானால்
கனமானபதமிதென்றுகண்டுகொண்டு
பலவகையிலிருக்காமலனலையாற்று
பாகமடா அவ்வேளைபரிந்துபாரே. (௧0௯)

பாரடாகுப்பிதனையெடுத்துநீயும்
பத்தியுடன்குளிர்ந்தபின்னருடைத்துப்பாரு
நேரடாவீரமதையென்னசொல்வேன்
நிசமானபூரணசந்திரனைப்போல
போரடாபெற்றதொருவீரமாச்சுப்
பெலமாகமுன்மருந்திற்பாதிசேர்த்துக்
காரடாமுன்போல்மூவிசைசெய்திட்டால்
கனமானகொச்சியென்றவீரமாமே. (௧௧0)

இரசகர்ப்பூர வைப்பு

வீரமென்றவீரவைப்புமுறையாச்சொன்னேன்
விருதானபூரவைப்பைவிளம்பக்கேளு
நேரமில்லைமுன்செய்தசூதமாவில்
நிறுத்தெடுத்துநாலுபங்குகுப்பிக்கேற்றிப்
பாரமில்லர்வாலுகையிற்கமலம்போலே
பதமாகஎரிக்கையிலேயுருகும்பாரு
ஓரமில்லையுருகுபதந்தன்னைக்காண
உறுதியுடனிருசாமமெரித்துமேலே. (௧௧௧)

மேலாகச்சிலாகையிட்டுக் கிண்டிப்பாரு
மேன்மையுடன்றானுருகிக்குழம்புபோலாம்
காலானசீனமரைப்பலத்தைத்தானும்
கணக்காகப்பொடித்ததிலேபோட்டுக்கிண்டி

நாலானசாமமட்டுமெரித்துநீயும்
நன்மையுடன்சிலாகையிட்டுப்பார்த்தாயானல்
கோலான அடியின்மருந்தில்லாவிட்டால்
குருவானபதமென்றுகுணமாயாற்றே. (௧௧௨)

சூடன்வைப்பு.

ஆற்றியேகுப்பிதனையுடைத்துப்பாரு
அப்பனேவெள்ளையாயிருக்குஞ்சொன்னேன்
போற்றியேபூரமதைப்பதனம்பண்ணு
புண்ணியனேயின்னமொருவித்தைகேளு
சாற்றுகிறேனலாத்திப்பூரவைப்பைத்
தண்மையுடன்றூனுரைக்கத்தயவாய்க்கேளு
மேற்றேலேப்போக்கினதோர் [1] முத்தக்காசும்
விளங்கியதோர்லவங்கமெடைவாகன்பத்தே (௧௧௩)

பத்தானசீனமஃதிரண்டுபத்துப்
பாங்கானவெடியுப்புநூறுங்கூட்டிச்
சித்தானகல்வத்திற்பொடித்துக்கொண்டு
சிவந்த [2] கருவாப்பட்டைத்தயிலம்வாங்கி
முத்தானமுச்சாமமரைத்துமைந்தா
முறையுடனேபிட்டுப்போலுதிர்த்துநன்றாய்
வற்றுத [3] கங்காசலக்குப்பிதன்னில்
மார்க்கமுடனரைவாசியடைத்துக்கேளே. (௧௧௪)

கேளப்பாமாக்கல்லாலடைத்துநீயுங்
கிருபையுடனெழுசீலைமண்ணுஞ்செய்து
நாளப்பாநன்றாகக்காயவைத்து
நாதாந்தவாலேப்தநாடிநின்று

---

[1] கோரைக்கிழங்கு.
[2] இலவங்கப்பட்டை.
[3] காசிக்குப்பி.

வேளப்பா [1]வாலுகையிற்பாண்டம்வைத்து
    விதமாகஆறுவிரல்மணல்தானிட்டு
வாளப்பாகுப்பிதனைமேலேயிட்டு
    வண்மையுடன்பானை [2]ரம்பமணலான்மூடே. (௧௧௫)

மூடியேயடுப்பேற்றிக்கமலம்போல
    மூர்க்கமுடனொருநாழியெரித்துப்பாரு
நாடியேமணற்சூடுநிரம்பவானால்
    நன்மையுடன்பாண்டமதையிறக்கிவைத்துக்
கூடியேகுளிரநன்றாயாறவிட்டுக்
    குருவானகுப்பிதனையுடைத்துப்பாரு
தேடியேயலைந்தாலுமிந்தப்பூரம்
    தேசத்தில்ரவிபீசமென்பார்காணே. (௧௧௬)

பச்சைக்கர்ப்பூர வைப்பு.

காணப்பாஇன்னமொருவைப்பைக்கேளு
    கருவானபூரமடாபச்சைப்பூரம்
பூணப்பாகூடவொருபலமும்வாங்கிப்
    புனிதமுள்ளவெடியுப்புக்காற்பலந்தான்
தோணப்பாவுவருப்புமரைதான்கூட்டித்
    துரிதமுள்ளபுனுகுடனேயேலந்தானும்
வேணப்பாகஸ்தூரிவகைக்குத்தானும்
    விளக்கவேயரைக்கழஞ்சுவேண்டுவாயே. (௧௧௭)

வேண்டியேகல்வத்திலரைத்துநன்றாய்
    விதமானசந்தனத்தின்தயிலத்தாலே
தோண்டியேபிட்டுப்போற்பிசறிக்கொண்டு
    சுத்தமுள்ளகுப்பியரையிட்டுமைந்தா

---

[1] வாலுகாயந்திர அடுப்பு.
[2] ரம்ப - நிரம்ப.

தூண்டியேமாக்கல்லால்வாயைமூடித்
துரிதமுடனெழுசீலைமண்ணுஞ்செய்து
தாண்டியேதாளியரைமணல்தானிட்டுத்
தண்மையுற்றகுப்பிவைத்துமேலுமூடே. (௧௧௮)

மூடியேமணல்செம்பித்தோடுமூடி
மூர்க்கமுடன்சீலைமண்வலுவாய்ச்செய்து
நாடியேரவிதனிலேகாயவைத்து
நன்மையுள்ளகணபதியைநாடிக்கொண்டு
தேடியேவாலுகையிலேற்றிமைந்தா
திறமாகவொருசாமந்தீபம்போலே
கூடியேயெரித்துமெல்லஆறவைத்துக்
குருபதத்தைத்தான்வணங்கியெடுத்துப்பாரே. ()

எடுத்துமிகப்பார்க்கையிலேயென்னசொல்வேன்
இன்பமுள்ளசிறுபொடியாந்தகடுபோலத்
தொடுத்துநின்றதாமரைப்பூவாசம்வீசும்
துரைத்தனத்தார்க்கேற்றபச்சைப்பூரமாச்சு
அடுத்துநின்றபேர்களுக்குமிந்தவாசம்
அதிகமுடன்செங்கழுநீர்ப்பூப்போல்வீசும்
கடுத்துநின்றநீர்க்கடுப்புக்கல்லடைப்புக்
கனமானபித்தமெல்லாங்காணுதோடும். (௧௨0)

வாலைரசவைப்பு.

காணுதகாட்சியெல்லாமிந்தநூலில்
கருதினேனின்னமொருகருவைக்கேளு
தோணுதவாலைரசம்வைக்குமார்க்கம்
சொந்தமுடன்சொல்லுகிறேன்சூட்சமாக
வேணதொருசாதிலிங்கந்தன்னைநீயும்
விதமாகத்தான்பொடித்துத்தோண்டிக்கேற்றி
நாணுதநன்னுரிவேர்தான்கொஞ்சம்
நன்மையுடன்பொடிசெய்துகூடப்போடே. (௧௨௧)

போட்டுமேமறுதோண்டிதன்னைநீயும்
புனிதமுடன்ருன்மூடிப்பொருந்தவைத்துப்
நாட்டியேசீலமண்ணேழுஞ்செய்து
நலமாகவுலர்ந்தபின்புநன்மையாக
ஆட்டுமேகணபதிக்குப்பூசையைச்செய்
தப்பனேவாலுகையிலேற்றிமைந்தா
காட்டுமேகாடாக்னியாகத்தானும்
கனமாகவொருசாமமெரித்திடாயே. (கஉஉ)

எரித்தந்தஅனலணைத்தேயிறக்கிமைந்தா
இன்பமுடன்ஆறவிட்டேயவிழ்த்துநீயும்
தரித்ததொருமேற்றேண்டிதன்னைமைந்தா
தண்மையுள்ள [1] வராகமுடிதன்னுலேதான்
தெறித்துமிகப்போகாமற்றுடைத்துநீயும்
திறமாகப்பார்க்கையிலேசூதம்போலே
பொருந்திமிகஇருந்ததொருவாலைதன்னைப்
புத்தியுடன்குடுக்கைதனிலடைத்துவையே. (கஉ௩)

வாலைரசத்துக்குத் தீரும்வியாதி.

வைத்ததொருவாலைபணவெடைகால்மைந்தா
வண்மையுடன்விடைத்தலைவேர்ச்சந்தனத்தில்
மெய்த்திட்டமாகநீபத்துநாள்தான்
மேன்மையுடனந்திசந்தியீய்ந்தாயானல்
கைத்ததொருபுகையுடனேபுளியுந்தள்ளிக்
கனமாகவிருபதுநாள்கழிந்தபின்பு
செய்த்திட்டந்தவருமலோமந்தேய்த்துச்
சிவசிவாதலைகுளித்தால்புளியைக்கூட்டே. (கஉ௪)

---

[1] பன்றிமயிர்க்கற்றை.

கூட்டவேதீருகிறவியாதிகேளு
கூறுகெட்டசொறிசிரங்குகிரந்திநோயும்
நாட்டவேபுண்புரைகள்வயிற்றிரைச்சல்
நலமானபேதியுடன்காய்ச்சல்தீரும்
பூட்டவேதேகமதிற்காந்திமீறிப்
புனிதமுடன்றுதுவிர்த்திப்பலமுண்டாகும்
வாட்டமாமின்னமோரநுபானங்கேள்
மைந்தனேவாலைரசம்விராகன்றண்டே. (கஉ௫)

வாலைரசத்துக்கு, அநுபானமும் தீருநோய்களும்.

விராகனெடையிரண்டப்பாபறங்கிப்பட்டை
வீறுன [1] திப்பிலியிலவங்கம்ரண்டும்
விராகனெடைநாலப்பாகரும்புவெல்லம்
விசையடங்கத்தானரைத்தேயுண்டைகேளு
விராகனெடைமுக்காலாயுருட்டிமைந்தா
வீறுகெட்டமானிடர்க்குமேழுநாள்தான்
விராகனெடைமுக்காலாயந்திசந்தி
விவரமுடன்றூன்கொடுத்துமேலுங்கேளே. (கஉ௬)

கேளப்பாபத்தியந்தான்உப்பாகாது
கிருபையுடன்பசுவின்பால்கூட்டிக்கொள்ளு
நாளப்பாபதினேந்தாநாளிலேதான்
நன்மையுடன்தலைமுழுக்குமுழுகவாரு
கோளப்பாவொன்றுமில்லைக்கோழிச்சாறு
கூட்டியேபத்தியத்தைமுறித்துப்போடு
வேளப்பாவாயெல்லாம்வெந்துகாணும்
விதமாகத்தான்றூனேயாறுந்தானே. (கஉ௭)

தாந்தானேயாறுகையிற்றீருநோய்கேள்
தண்மையில்லாமேகவெள்ளைதடிப்புப்புண்கள்
சேர்ந்ததொருஅழிகிரந்திகுழிகிரந்தி
தீராதஅரையாப்புமேகசூலை

[1] வகைக்கு ஒரு விராகனெடை.

போந்தானேகால்முடக்குக்கைம்முடக்குப்
பொல்லாதநோய்களெல்லாம்போகுஞ்சொன்னேன்
நாந்தானேவாலையிடகருணையாலே
நன்மையில்லாவியாதியெல்லாநலமதாமே. (௧௨அ)

தாதுபுஷ்டிக்குக் குளிகை.

நலமானஇன்னமொருகுளிகைகேளு
நன்மையுள்ளவாலைரசங்கழஞ்சுமூன்று
குலமானசாதிலிங்கங்கழஞ்சதொன்று
கூறுகிறேம்வெண்காரங்கிரும்புகஞ்சா
தலமானமுருங்கைவிதைசாதிக்காயும்
தண்மையுள்ளசாதிபத்ரிமுத்தக்காசு
பிலமானவபின்பூனைக்காலிவித்தும்
புண்ணியனே [1]சாரத்தின்பருப்புங்கூட்டே. (௧௨௯)

கூட்டுவாய்பூமிசர்க்கரைக்கிழங்கும்
குணமாகவகைக்கரைப்பலந்தான்கூட்டி
நாட்டுவாய்பொடிசெய்துதேங்காய்க்குள்ளே
நன்மையுடன்றானடைத்துச்சாணமேற்றிப்
போட்டுவிடுபத்தெருவிற்புடந்தானப்பா
புண்ணியனேசிரட்டையதுவேகும்போல
ஆட்டுவாயாறினபின்சிரட்டைநீக்கி
அப்பனேமுருங்கைப்பூச்சாற்றினாலே. (௧௩௦)

முருங்கைப்பூச்சாற்றாலேமூன்றுசாமம்
முக்யமுடன்றானரைத்துக்கழற்சிக்காய்போல்
நெருங்கவேயுருட்டியதையுலர்த்திக்கொண்டு
நீமகனேயோருருண்டைநினைவாய்க்கேளு

[1] சாரப்பருப்பு.
பன்றிமயிர்க்கரனை.

நருங்கவேபொடிசெய்துசர்க்கரையிலுண்ணு
நன்மையுள்ளபுளிதள்ளிச்சாதமுண்ணு
குருங்கையென்றபசுவின்பாற்சர்க்கரையுங்கூட்டிக்
குணமாகத்தானருந்திக்கூடுவாயே. (௧௫௧)

கூடுவாய்பெண்களுடன்போகஞ்செய்யில்
குணமாகவிந்துதம்பனமேயாகி
நாடுவாயிடுப்புவிடமாட்டாதப்பா
நாரியர்கள்சோபமதானடுங்குவார்கள்
தேடுவாரிடுப்புவிடமாட்டாதாகில்
திறமானகுளிகையிடதிறத்தினாலே
ஓடாதேயுனதுவிந்துவிழுந்திடாது
உத்தமனேபெண்களெல்லாமுறவாவாரே. (௧௫௨)

உறவானகுளிகைதன்னையுலகத்தோர்க்கே
யுண்மையுடன்றான்கொடுக்கவுறுதிகண்டு
திருவானபொருளப்பாவேணதீவார்
திறமாகவாங்கியதைத்தருமஞ்செய்தால்
பரமானபரமரிடபாதங்காட்டும்
பரமகுருதான்வருவார்பணிந்தாயானால்
நிறமானநிராமயத்தின்ஸ்வரூபங்காட்டி
நினைவாலேயொளிகாட்டிவெளிசொல்வாரே. ௧௫௩

வெளிசொல்வார்பொருளாசையின்மையாலே
வேதாந்தக்குருசொல்லில்வெளியாய்க்காணும்
வளியானவளிதோன்றுமிராஜவீதி
மற்றமற்றயோகமெல்லாங்குருட்டுவீதி
ஒளிசொல்வேனென்றுசொல்லிக்குருக்களெல்லாம்
உன்னிடத்திற்பொருள்பறித்தேயுடலெழுத்தை
விழியதனைமூடிப்பாரென்றேபோவார்
விழிமூடிலொ[illegible]ளம்புவாயே. (௧௫௪)

காமகேசரிகுளிகை.

விளம்புவேனின்னமொருகுளிகைகேளு
வீரியமாமதனப்பூ அபின்கிராம்பு
தளும்பாமல்சாதிக்காய்மராட்டிமொக்குத்
தங்கபஸ்மம்சாம்பிராணிப்பதங்கக்கூட
அளம்பாமல்முருங்கையுடன் ஆலரசு அத்தி
அதின்வித்துமதூரமுடன்சமனுக்கூட்டிக்
குளம்பாசமுருங்கைப்பூச்சாற்றலாட்டிக்
குணமாகத்தான்வழித்தேயுண்டைபண்ணே. (கஅ௬)

உண்டையதுசிறுசுண்டைக்காய்வீதந்தான்
உத்தமனேயநுபானஞ்சொல்லக்கேளு
உண்டையதுபசுவின்பாற்றன்னிற்கொள்ளு
உத்தமனேமுருங்கைப்பூப்போட்டுக்காய்ச்சி
உண்டையதுமண்டலந்தான் அந்திசந்தி
உண்டவர்க்கேயேழானைப்பலனுண்டாகும்
உண்டதனுற்றுவிர்த்தியதிகமுண்டாம்
உத்தமனேயோகியென்றல்போகியானே. (கஅ௬)

போகமதுசெய்ததினுல்விந்தூறுது
பூதலத்திற்பெண்களெல்லாநடுங்குவார்கள்
சோகமதுமெத்தவுண்டாம்பெண்கள்மோகம்
சோர்ந்துமேமுகந்தளர்ந்துவாடுவார்கள்
வேகமதுதீருதற்குவேறேவேறே
விடியுமட்டுஞ்செய்தாலும்விந்தூறுது
பாகமாய்க்கிருஷ்ணவதாரந்தன்னில்
பன்னிரண்டாயிரமென்னும்பாவைமாரே. (கஅஎ)

பாவையரைப்புணர்ந்ததிந்தக்குளிகையாலே
பாலகனேகாமகேசரியீதப்பா
தேவையில்லையென்றுமனங்கேளாது
தெரிவையரைந் [illegible]ம்போதாது

கோவமின்றிமன்மதனார்வளைத்தவில்லும்
குமரிகடம்பார்வையம்புங்கொள்ளும்வேகம்
பாவையர்களெல்லோரும்வசியமாவார்
பக்ஷமாய்மன்மதன்போல்லீலைசெய்யே. (கந௮)

சர்வசுரகுளிகை.

செய்யவேயிம்மருந்தையுலகத்தோர்க்குச்
செப்பாதேயாசருக்குச்செய்துநீயும்
ஐயனேபுலத்தியனேயறிவுள்ளோனே
அரசரெல்லாமுனைப்பணிவாருமையாகி
மெய்யாகஇன்னமொருகுளிகைகேளு
மேன்மையில்லாச்சுரங்களைவைதீர்வதற்குத்
துய்யதாய்க்கௌரியொருபலந்தானப்பா
தூக்கியதைமுலைப்பாலிலூறப்போடே. (கந௯)

போட்டப்பாமூன்றுநாளூறப்போட்டுப்
புனிதமுடன்றானெடுத்தேயோட்டில்வைத்து
நாட்டப்பாமுலைப்பாலாற்சுருக்குத்தாக்கு
நன்மையுடனூற்சாமநயந்துநீயுந்
தேட்டப்பாகௌரியதுசுத்தியாகுந்
திறமாகத்தாளகமோர்பலந்தான்வாங்கிக்
கூட்டப்பாசுண்ணாம்புக்குள்ளேவைத்துக்
குணமாகச்சுத்தசலந்தன்னையூற்றே. (கசo)

ஊற்றியேநீறியபின்னெடுத்துநீயும்
உத்தமனேயேழுவிசைநீற்றச்சுத்தி
தோற்றியேஇரண்டுமொன்றாக்கல்வத்திட்டுத்
துரிதமுடன்றானரைக்கும்போதிலேதான்
தேற்றியேமுலைப்பாலால்நாலுசாமம்
திறமாகத்தானரைத்தேயுருந்துபோலே
[illegible]பார்த்திபனேயுருட்டியதைநிழலுலர்த்திப்
[illegible]தயக் பக்குவமாயெடுத்ததனைப்பதனம்பண்ணே (கசக)

பண்ணப்பாசுரம்வந்தோர் தமக்குத்தானும்
பாங்கானமாத்திரை தானொன் றுகேளு
உண்ணப்பாமுலைப்பாலில்மூன் றுநாளும்
உறுதியுடனிருவேளையுண்மையாகத்
தண்ணப்பாதான்கொடுக்கமூன் றுநாள்தான்
தயவானபித்தமெல்லாந்தானேகக்கும்
கண்ணப்பாபித்தமெல்லாங்கக்கும்போது
கனமானசுரங்களெல்லாங்காணுதென்னே. (௧௪௨)

காணுதுநாலாநாள்வரைக்குமைந்தா
கருவாகப்புளிபுகையுந்தள்ளச்சொல்லு
தோணுததுவரையுடன்கத்தரிப்பிஞ்சு
சுகமாகத்தான்கூட்டியுண்ணச்சொல்லு
ஆணை அரோசகங்கள்வந்திட்டாலும்
அப்பனேபத்தியங்கள்தவறிட்டாலும்
வீணைமிளகதனைக்கியாழம்பண்ணி
வீரியமாய்த்தான்கொடுக்கமீளும்பாரே. (௧௪௩)

மீளுமேமிளகதுக்குமுறிவுமாச்சு
மிஞ்சாதவாதசுரம்விட்டுப்போச்சுத்
தாளுமேபித்தசுரங்குளிருங்கூடத்
தயவானஐயசுரமாறல்கூடக்
கோளுமேகள்ளசுரமூன்றுமாறல்
குடிகெடுத்தகாய்ச்சலிடகுடிலந்தீரும்
நாளுமேசுரமுதலாய்த்தீருமப்பா
நாட்டோர்க்குச்செய்திடவேநன்மையாமே. (௧௪௪)

சுரத்துக்குப் பாஷாணகுளிகை.

நன்மையாயின்னமொருகுளிகைகேளு
நாடாதபாஷாணக்கட்டிவாங்கி
வெண்மையாமெருக்கம்பால்நாலுசாமம்
மீறுமற்சுருக்கிடவேசுத்தியாகும்

வண்மையுள்ளலிங்கமதைமுலைப்பால்தன்னில்
மார்க்கமுடனூற்சாமம்ஊறச்சுத்தி
தண்மையுள்ளவெண்மிளகுமூன்றுமொன்றாய்த்
தான்சேர்த்துக்கல்வத்திலரைத்திடாயே. (கசரு)

அரைத்திடுவாய்சம்பளத்தின்சாற்றினாலே
அப்பனேநாற்சாமமரைத்துநீயுந்
திரத்துடனேயுளுந்துபோற்றிரட்டிமைந்தா
திறமாகநிழலுலர்த்திவைத்துக்கொண்டு
பரப்புடனேகுளிர்காய்ச்சல்சகலத்துக்கும்
பண்பாகக்குளிர்ந்தநீர்தன்னிற்றாக்காய்
உரைத்துமேமூன்றுநாளாறுவேளை
உத்தமனேதான்கொடுக்கவொழிந்துபோமே. (கசசு)

போமப்பாபுளிபுகையுமற்றொன்றாகா
புலத்தியனேவழுதுணையுந்துவரையாகும்
நாமப்பாஏழுநாளொன்றுகேளு
நன்மையுள்ளமிளகினிடகியாழமீந்து
வேமப்பாஎட்டாநாளோமந்தேய்த்து
வெந்நீரான்முழுக்காட்டுசுட்டபுளிகூட்டுத்
தாமப்பாகுளிர்சுரங்கள்தாமேதீர்ந்து
தண்மையுடன்றானிருப்பார்தயவாய்க்கேளே. (கசஎ)

பாஷாண முறிவு.

கேளப்பாவாந்தியுடன்பித்தமீறில்
கிருபையுடன்மிளகுநீர்குடிக்கத்தீரும்
வேளப்பாபாஷாணந்தின்றபேர்க்கு
விதமாகமிளகொருசேர்தன்னைவாங்கி
நாளப்பாஅரைத்தரைத்தேயுள்ளுக்கீய
நன்மையுள்ளபாஷாணம்வீறுகெட்டுத்
தாளப்பாமலத்துடனேமலமாய்ப்போகுந்
தயவானமாற்றறிந்துதனதாய்நில்லே. (கசஅ)

சுரங்களுக்கு அபின்குளிகை.

நில்லப்பா இன்னமொருகுளிகைகேளு
நிலையானசுரங்களைவைநிவர்த்தியாக
அல்லப்பா அபினியதுவராக்னெடையாறு
அன்பானசுக்குமதுவராகனெடையேழு
நல்லப்பாவராகனெடைதிப்பிலியுமெட்டு
நன்மையுள்ளசீரகமுமொன்பதெடைகூட்டு
சொல்லப்பாமிளகுபத்துவராகனெடையாகச்
சுகமாகஜலந்துமொன்றுக்கல்வத்திட்டே. (கசகூ)

கல்வத்திலரைத்திடுவாய் விஷ்ணுகாந்தி
கனமானகஷாயமதால்நாலுசாமம்
வலுமைபெறத்தானரைத்துக்குன்றிபோலே
மைந்தனே தானுருட்டிநிழலுலர்த்தி
அலைவுபெற்றசுரங்களுக்குமூன்றுநாள்தான்
அப்பனே தான்கொடுக்கவநுபானங்கேள்
நல்வைத்த [1] வில்லையொடுவிஷ்ணுகாந்தி
நன்மையுள்ளசீரகம்வெற்றிலையின்காம்பே. (கரு0)

காம்புடனேநாலுமொன்றாய்க்கியாழஞ்செய்து
கனமானவொருகுளிகையாறுவேளை
தாம்புடனே தான்கொடுக்கச்சுரங்கள்தீரும்
தருவானகழிச்சலொடுதாபசுரந்தீரும்
நாம்பானபெரியோர்க்குஞ்சிறியோருக்கும்
நன்மையுள்ளபத்தியந்தான்புளியைமாற்று
வேம்பானபுளிகூட்டில்வேறொன்றில்லை
விதமானகாய்ச்சலதுவிட்டிடாதே. (கருக)

விட்டிடாச்சுரங்களுக்குமூன்றுவகைக்குளிகை
விதமாகச்சொன்னதைநீசெய்துமைந்தா
இட்டிடுவாய்பெட்டியிலேபணங்கள்போல
இருத்திவைக்கக்குளிகைகட்குமுயிருண்டாகும்

[1] வில்லை - வில்[illegible]

பட்டிடவேநாட்சென்றற்குளிகைவேகம்
பார்க்குமுன்னேசுரங்களெல்லாம்பதறியோடும்
சுட்டிகள்போல்நூடு துடுக்காய்ச்செய்யவென்றால்
சுகமானகுளிகையொன்றுசொல்லுவேனே. (கடுஉ)

இதுவும் - சுரக்குளிகை.

சொல்லுவேனிலிங்கமொன்றுநாபியொன்று
சுகமானவெண்காரந்திப்பிலியுமிளகும்
வெல்லுவேனேர்வாளமாறுமொன்றாய்
விதமாகச்சுத்திசெய்துசமனாய்க்கூட்டிக்
கெல்லுவேன்பழச்சாற்றால்நன்றாயாட்டிக்
கிருபையுடன்குன்றிபோல்நிழலுலர்த்தி
நல்குவேன்பதனமதாய்வைத்துக்கொண்டு
நன்மையுள்ளவாதசுரந்தனக்குக்கேளே. (கடுங)

கேளப்பாமூன்றுநாளாறுபோது
கிருபையுள்ளசர்க்கரையிலுண்ணத்தீரும்
நாளப்பாபித்தசுரந்தனக்குத்தானும்
நற்சீரகத்தினிடநீரிற்றாக்கு
வாளப்பாசேத்மசுரம்இஞ்சியிலேதீரும்
வண்மையுள்ளமூன்றுநாள்கொடுக்கும்போது
தாளப்பாசுரமெல்லாந்தவறுண்டேபோம்
தண்மையில்லாப்பத்தியந்தான்புளியாகாதே. (கடுச)

புளியாகுந்தின்னதினாற்சுரந்தீராது
பூதலத்திற்பேதிக்கோகொடுக்கவென்றால்
வளியானமாத்திரைதானிரண்டுதந்து
வண்மையுள்ளமிளகதனைமென்றுதுப்பி
வெளியானமாத்திரையைத்தின்னச்சொல்லு
விவரமுடன்துன்மலங்கள்வெளியாய்ப்போகும்
ஒளியாததுன்மலங்களொழிந்தவானால்
உத்தமனேமிளகுநீர்சாதமுண்ணே. (கடுரு)

சாதமுண்டுசாய்காலஞ்சுக்குநீர்கொள்
சமர்த்தானபேதியதுநிரம்பவானல்
நீதமென்றுநீமயங்கிப்போய்விடாதே
நிலவரமாய்த்துவரையினற்பருப்போடொக்க
பாதமென்ற அரிசியிட்டுக்கிச்சடிபோற்பொங்கிப்
பதமாகநெய்யூற்றித்தின்னநிற்கும்
பேதமொன்றுமில்லையடாவசம்புதன்னைப்
பிரியமுடன்கருக்கிடவேபேதமாமே. (கடுசு)

வாலைசஞ்சீவிக்குளிகை.

பேதமாமின்னமொருகுளிகைகேளு
பிரியமுடன்திரிகடுகு மிலிங்கமோமம்
பேதமாம்வெண்காரங்கிராம்புங்கூட்டிப்
பிலமாகஎழுமொன்றாய்க்கல்வத்திட்டுப்
பேதமாம்பழச்சாற்றால்நன்றாயாட்டிப்
பெருமையுள்ளஉளுந்ததுபோற்குளிகைகட்டிப்
பேதமாநிழலிலேயுலர்த்திக்கொண்டு
பெருமையுள்ளசுரங்களுக்குப் புகலக்கேளே. (கடுஎ)

கேளப்பாதுளசிச்சாறதனிற்றாக்கு
கிருபையுள்ளநாய்த்துளசிச்சாறுமாகும்
கோளப்பாமுலைப்பாலிற்றக்கினுக்கால்
குணமானசந்நிசுரம்பாலகர்க்கு
நாளப்பாமூன்றுநாள்கொடுக்கச்சொல்லு
நன்மையுள்ளசலதோஷம்நாடிற்றானல்
வாளப்பாவெற்றிலையில்மென்றுதின்ன
வளமானநீர்த்தோஷமாறிப்போமே. (கடுஅ)

வாலைபேதிக்குளிகை.

மாறிப்போம்இன்னமொருவாலைபேதி
மகத்தானகுளிகையொன்றுவகையாச்சொல்வேன்
தேறிப்போமிளகெடையோரைந்துகூட்டித்
திறமானசுக்குதிப்பிலியுமோமம்

கூறிப்போம்ரோகணியுங்கூர்மத்தோடு
கோஷ்டமுடனெல்லாமோரொடையாய்க்கூட்டி
ஆறிப்போஞ்சுத்திசெய்தவாளமைந்து
அப்பனேபழச்சாற்றாலரைத்திடாயே. (கருகூ)

அரைத்துமேமிளகளவாயுருட்டிக்கொண்டே
ஐயனேநிழலுலர்த்திமுலைப்பாலிற்றான்
உரைத்தீயக்குழந்தைகட்குப்பேதியாகும்
உத்தமனேசந்நிசுரஞ்சீதங்கூட
இரைத்துமேயீடுப்புவலியுள்ளவெல்லாம்
இன்பமுடன்றான்றீரும்வேணநோய்கள்
கரைத்துமேவெந்நீருஞ்சாதமுண்ணக்
கனமானபேதிநிற்குங்கண்டுபாரே. (கசு0)

பேதிமாத்திரை.

பாரப்பாஇன்னமொருகுளிகைகேளு
பாங்கானசாதிக்காயோமங்கிராம்பு
காரப்பாகரியசீரகமுஞ்சுக்கு
கனமானதிப்பிலிகஸ்தூரிமஞ்சள்
சாரப்பாவசம்புடனேகாயமொக்கச்
சரியெடையாயொன்பதுக்குச்சமந்தான்கேளு
வேரப்பாவெள்ளைக்காக்கணத்தின்பட்டை
விதமாகத்தான்கூட்டிவெந்நீராலே. (கசுக)

வெந்நீராற்றானரைத்துச்சுண்டைக்காய்போல்
விதமாகத்தானுலர்த்திவைத்துக்கொண்டு
வெந்நீரிற்குழந்தைகட்கேயேழுநாள்தான்
விதமாகத்தான்கொடுக்கஉப்பாகாது
வெந்நீரிற்சாதமிட்டேயுண்பாரானால்
வேண்டியதோர்நோய்தீரும்விளம்பக்கேளு
வெந்நீராஞ்சளியிருமல்கக்கல்காய்ச்சல்
மீறிவருஞ்சுழிகணங்கள்விச்சுளியும்போமே. (கசுஉ)

போமப்பா அள்ளுடனேசந்நிதோஷம்
பொல்லாதவலிப்புடனேவிஷசுரங்கள்
போமப்பாமந்தமுடன்வயிற்றுநோயும்
பொருமலுடனிரைச்சலுமேபோகுஞ்சொன்னேன்
போமப்பாவசம்புதன்னைச்சுட்டுக்கூட்டு
போக்கோடேபச்சையென்றால்பேதிரம்ப
போமப்பாசுட்டதினால்மட்டாம்பேதி
போகுமடாமற்றநோய்புனிதமாமே. (கசங)

சந்நிக்குத் தாம்பிரக்குளிகை.

புனிதமுடன்தாம்பிரத்தைத்தூளதாக்கிப்
புண்ணியனேசட்டியிட்டுவறுக்கும்போது
கனிதமுள்ளபுளியஞ்சிறுகீரைதானும்
கடுவளவாய்த்தான்போட்டுகாலுசாமம்
இனிதமுடன்வறுக்கையிலேமாண்டுபோகும்
என்மகனேயிதில்களஞ்சுஆறுதூக்கி
வனிதமுடன்வாலைரசங்களஞ்சதாறு
வண்மையுள்ளகெந்தியதுகளஞ்சுமாறே. (கசச)

ஆறுகுமருந்தெல்லாங்கல்வத்திட்டே
அப்பனேசெருப்படிச்சாறிட்டேயாட்டிக்
கூறுனமிளகதுபோலுருட்டிக்கொண்டு
குணமாகத்தானுலர்த்திக்குப்பிக்கேற்றி
மீறுமல்வாய்மூடிமண்ணுஞ்செய்து
விளங்கவேகாயவைத்துத்நாளிக்குள்ளே
பாறுமல்அங்குலநால்மணல்தானிட்டுப்
பண்பாகக்குப்பிவைத்துமேலேமூடே. (கசரு)

மூடியேமணலிட்டுச்சட்டிமூடி
மூர்க்கமுடன்மண்சீலைமூன்றுஞ்செய்து
தேடியேகணபதிக்குப்பூசைபண்ணித்
திறமாகவாலுகையிலிரண்டுசாமம்

நாடியேகமலம்போலெரித்துநீயும்
நலமாகத்தானிறக்கியாறவைத்துக்
கூடியேகுப்பியுள்ளமருந்தைத்தானுங்
குணமாகத்தானெடுத்துக்கல்வத்திட்டே. (கசுசு)

இட்டுநன்றாயரைத்திடுவாயிஞ்சிச்சாற்றில்
என்மகனேபருத்திவிரைப்பிரமாணந்தான்
பட்டுநன்றாய்த்தானுருட்டிக்காயவைத்துப்
பாங்கானபரணியிலேபதனம்பண்ணிப்
பிட்டுநன்றாய்த்துளசிச்சாறதனிலேதான்
பிலமானதிரிகடுகுதூளுஞ்சேர்த்து
அட்டிபண்ணுதிருபோதுமூன்றுநாளும்
அடைவாகத்தான்குடிக்கவகலுநோய்கேள். (கசுஎ)

கேளப்பாபதின்மூன்றுசந்நிதீரும்
கிருபையுள்ளதோஷமெல்லாங்கெதிகெட்டோடும்
வாளப்பாவசாத்தியமாஞ்சந்நிகூட
மைந்தனேதீருமடாமருவிப்பாரு
நாளப்பாவுப்பில்லாப்பத்தியம்வைத்து
நன்மையுள்ளபொரியரிசிக்கஞ்சிகொள்ள
தாழ்வப்பாவொருநாளுமில்லையில்லை
தண்மையுள்ளசந்நியெல்லாந்தணிந்துபோமே. ()

சாம்பிராணிப்பூக்குளிகை.

போமப்பாவின்னமொருகுளிகைகேளு
புண்ணியனேசாம்பிராணிமுதற்றரந்தான்
நாமப்பாபளிங்காகநானுபலம்வாங்கி
நன்றாகப்பொடிசெய்துசட்டியிட்டு
ஓமப்பாமேற்சட்டிக்குள்ளேநீயும்
உத்தமனேகாகிதத்தையுருப்போலொட்டி
நாமப்பாமேன்மூடிச்சீலைசெய்து
நன்மையுள்ளவடுப்பேற்றித்தீபம்வையே. (கசுகூ)

வைத்தக்கால்பசுநெய்யாற்றீபமேற்றி
　　மைந்தனேயடிச்சட்டித்தூரிற்சூடு
தைத்தக்கானாற்சாமஞ்சென்றபின்பு
　　தண்மையுடன்றானிறக்கிப்படுக்கப்போடு
செய்ததொருசீலைமண்ணவிழ்த்துமெள்ளத்
　　திறமானமேற்சட்டிக்காகிதத்து
ணைத்ததொருவப்பிரகம்பற்பம்போலே
　　நன்மையுள்ளவாசமதாய்மணக்கும்பாரே. (கஎ0)

பாரப்பாவப்பூவையெடுத்துநீயும்
　　பாங்கானவெற்றிலைபாக்குண்ணும்போது
நேரப்பாமிளகளவுதின்றுவந்தால்
　　நேர்மையுள்ளதாதுவிர்த்திநிலைக்கும்பாரு
காரப்பாவப்பூவுங்களஞ்சிரண்டு
　　கனமானகிராம்புமோகழஞ்சுமூன்று
கூறப்பாகோரோசனைகழஞ்சதொன்று
　　கூட்டியரைவெற்றிலையின்சாற்றினாலே. (கஎக)

சாற்றினாலிருநாழியரைத்துமைந்தா
　　தண்மையுள்ளகுன்றிபோற்குளிகைகட்டி
ஆற்றிநன்றாய்நிழல்தனிலேபதனம்பண்ணி
　　அப்பனேதேனிலொருகுளிகையீந்தால்
போற்றியேமூன்றுநாளாறுபோதில்
　　பொல்லாதசூதகத்தின்சுரங்கள்தீரும்
பார்த்திபனேநெய்மிளகிலீந்தீயானால்
　　பரந்துபோஞ்சூதகத்தின்சயங்கடானே (கஎஉ)

சயமானசர்க்கரையிலேழுநாள்தான்
　　தண்மையுடன்றான்கொடுக்கத்தயவாய்க்கேளு
மயமானசூதகத்தின்வாய்வினோடு
　　மைந்தனேயுதிரத்தின்கட்டுதீரும்

நயமானவெற்றிலையில்மென் றுதின்ன
நன்மையில்லாச்சுகசந்நிநாடாதோடும்
பயமென்னபத்தியங்கள்பயமேயில்லை
பரமானபூரணத்தின்பதிவுதானே. (௧௭௩)

கட்டுவோதிமாத்திரை.

தானென்றவின்னமொரு குளிகைகேளு
தண்மையுடன்சாதிக்காய்சாதிபத்திரி
மானென்றமாசக்காய்கிராம்புகோஷ்ட
மதுரமுடனதிவிடையம்லவங்கப்பட்டை
தேனென்றவிலவுடனேவிளாம்பிசினுமொன்றாய்ச்
சேர்த்தரைத்துமாதளங்காய்க்குள்ளேவைத்துக்
கோனென்றவெண்சீலைபொதிந்துசுற்றிக்
குணமாகவதன்மேலேசாணமப்பே. (௧௭௪)

அப்பியேகாட்டெருவிற்புடத்தைப்போடங்
கண்டையிலேபார்த்திருநீகாய்வேகாமல்
தப்பியேசாணமதுவெந்துபற்றித்
தான்காயில்வேவகையிலேதள்ளிக்கொண்டு
ஒப்பியேகவசமொடுசீலைநீக்கி
உத்தமனேகல்வத்திலரைக்கும்போது
செப்பினேங்கஞ்சாவின்சாற்றிலாட்டிச்
சிறுசுண்டைக்காய்போலவுருட்டுவாயே (௧௭௫)

உருட்டியேநிழலுலர்த்திவைத்துக்கொண்டே
யுண்மையுடன்வடிதயிரிலீந்தாயானால்
திரட்டியைப்போவிரத்தமுடன்கடுப்புஞ்சீதந்
தீராதமூலரத்தந்தீருஞ்சொன்னேன்
மிரட்டியேதேனிலிடவதிசாரபேதி
மீளுமடாபத்தியமோபுளியுமாகும்
சுருட்டிமிகமிளகாயைக்கூட்டிடாதே
துடிமெத்தவிரத்தமடா துணிந்துபாரே. (௧௭௬)

இரசகர்ப்பூரக்குளிகை.

பாரப்பாவின்னமொருகுளிகைகேளு
பதிவானமூலப்பாலின்மூன்றுநாள்தான்
நேரப்பாவூறினதோர்ரசகர்ப்பூரம்
நிலைவாகவராகனெடையஞ்சுங்கூட்டி
காரப்பாமுளைநீக்கிவெள்ளைப்பூண்டு
கணக்காகவிராகனெடையிருபதுமேகூட்டி
சாரப்பாமிளகதுதான்விராகனெடைதானுந்
தண்மையுடன்முப்பதுமேதயவாய்க்கூட்டே. ( )

கூட்டிடுவாய்வெற்றிலையினெடைதான்கேளு
குணமாகநாற்பதெடைகூட்டிக்கொண்டு
நாட்டுவாய்பூரமதைநன்றாயாட்டி
நன்மையுள்ளசரக்கெல்லாமொன்றாய்க்கூட்டி
ஆட்டிடுவாய்வெற்றிலையின்சாற்றினாலே
அப்பனே அறுசாமம்நன்றாயாட்டி
போட்டிடுவாய்சுண்டைக்காய்போலுருட்டிப்
புனிதமுடனிழலனிலேயுலர்த்திக்கேளே. (கஎஅ)

கேளப்பாவந்திசந்தியேழுநாளும்
கிருபையுடன்றான்முழுங்கிப்பத்தியமேகாக்கப்
பாளப்பாவுப்புடனேபுளிப்பாகாது
பாங்காகவொருவேளைபசும்பால்கூட்டு
நாளப்பாவேழுநாட்சென்றபின்பு
நன்மையுடன்வறுத்தவுப்புந்தூவரைகூட்டு
கோளப்பாபதினைந்தாநாளிற்றானும்
குணமாகத்தலைமுழுகிப்புளியைக்கூட்டே. (கஎகூ)

புளிகூட்டுவோமநீர்விட்டபின்பு
புண்ணியனேயெண்ணெயிட்டுமுழுகும்போது
வளியிட்டவளிக்கிரந்திலிங்கப்புற்று
வகையானசொறிகிரந்தியோனிப்புற்று

குழிபட்டரிணமாறுங்குழிக்கிரந்தி
கூறியதோர்கிரந்தியெல்லாங்குணமதாகும்
பழிவிட்டுச்சொன்னதொருபூரணத்தைப்
பார்தனிலேவிள்ளாதேயின்னங்கேளே. (கஅ௦)

இலிங்கக்கட்டு.

கேளேநீபுலத்தியமாரிஷியேயையா
கிருபையுள்ளவிலிங்கமொருகட்டியாகத்
தாளேநீமுலைப்பாலிலூறப்போட்டுத்
தண்மையுடன்பத்தநாள்கழுவிப்பின்பு
வேளேநீவெயிலுலர்த்திவைத்துக்கொண்டு
விதமானஎடைக்கெடைதான்கர்ப்பூரம்வாங்கு
வாளேநீசாம்பிராணிபளிங்குபோலே
வாங்கிடுவாய்முன்போலேவளமாய்த்தானே. (கஅக)
வளமானசாம்பிராணிகூடன்ரெண்டும்
வண்மையுடன்கல்வத்தின்மாளஆட்டி
மெழுகாணுலென்னசொல்வேன்தீப்பறக்க
மேன்மையுடன்வழித்ததனைப்பத்துப்பங்காய்
வழுவாமலொருபங்கைச்சீலையூட்டி
வண்மையுடன்லிங்கமதைவைத்துருட்டி
நழுகாமல்விளக்கிலேகொளுத்திப்போடு
நன்மையுடனூறினபினெடுத்துக்கொள்ளே (கஅஉ)
எடுத்ததன்றன்மேற்கரியைச்சுறண்டிப்போட்டு
இன்னமொருபங்கதனைச்சீலையூட்டி
அடுத்துமதில்லிங்கமதையுருட்டிமுன்போல்
அப்பனேவிளக்கினிலேகொளுத்தும்போது
பிடித்துமதுதானெரிந்துஆறிப்போகும்
பின்பதைத்தான்முன்போலப்பத்துவிசைசெய்து
தொடுத்துபின்றகரியெல்லாஞ்சுறண்டிப்போட்டுச்
சுத்தமுடன்தேனிலிடவாயுபோமே. (கஅ௩)

போமப்பா திரிகடுகிற்சந்நிதோஷம்
பொல்லாதநெஞ்சடைப்புவாயுமூர்ச்சை
தாமப்பா வயிறுபேதிவயிற்றிலூதல்
தனியிஞ்சிச்சாற்றிலேதாக்கத்தீரும்
வேமப்பாசூலையொடுபித்தபாண்டு
விஷபாகம்வயிற்றுவலிகுன்மஞ்சோகை
போமப்பாகொடிவேலிக்கியாழத்தீயப்
பறக்குமடாவெகுரோகம்பரிந்துபாரே. (கஅச)

இரசகர்ப்பூரக்கட்டு.

பரிந்துமேவின்னமொருகட்டுசொல்வேன்
பாலகனே இரசகர்ப்பூரம்பலந்தானென்று
வெரிந்துமேயொருகட்டியாகவாங்கி
விதமாகமூலைப்பாலிற்பத்துநாளும்
தெரிந்துநீஊறினபின்னுலர்த்திக்கொண்டு
திறமாகவெள்ளுள்ளித்தயிலம்வாங்கி
இருந்துநீமுச்சாமஞ்சுறுக்குதாக்கி
எடுத்துநீசுறண்டியதைப்பின்னுங்கேளே. (கஅரு)

பின்னுமோரோட்டில்வெடியுப்புத்தானும்
பிரியமுடனஞ்சுபலம்பரப்பிமேலே
முன்னமேசொன்னதொரு * பூரம்வைத்து
மூர்க்கமுடன்மேலுமவ்வீதமூடி
என்னமோவென்றுநீயெண்ணிடாதே
என்மகனேகோழிமுட்டையுடைந்துமேலே
சொன்னமேஅஞ்சுமுட்டையூற்றிமைந்தா
சுறுக்காகவாசலடுப்பிட்டுக்கேளே. (கஅசு)

கேளப்பாகால்நாழிகமலம்போலே
கிருபையுடன்றனெரிக்கவுப்புபொங்கி
வாளப்பாவுருகியதுநெருப்புப்பற்றும்
மைந்தனே அண்டத்தின்மகிமையாலே

---

* இரசகர்ப்பூரம்.

கோளப்பா பாணவுப்புபுகைந்திடாது
குழம்புபோலுருகியதுகெட்டியாகும்
தாளப்பாவிறக்கிவைத்துக்குளிர்ந்தபின்பு
தயவாகவுடைத்துமெள்ளவெடுத்துக்கொள்ளே. ()

எடுத்துநீமேலுள்ளவுப்புநீக்கி
என்மகனேசங்கிசுரம்நாவறட்சி
தொடுத்துநின்றமலவாதசங்கிக்கெல்லாம்
சுத்தமுடனநுபானமறிந்துசேர்த்தே
விடுத்துநின்றலிங்கமுடன்உறைத்துத்தாக்க
விபரமுடன்வாதநோய்விட்டுப்போகும்
தடுத்துநின்றகைபாகநன்றாய்ச்சொன்னேம்
தயவானபூரணத்தின்தன்மையாலே. (௧௮௮)

தாளகக்கட்டு.

தன்மையென்றவின்னமொருவித்தைகேளு
தயவானதாளகத்தைரேக்குப்போலே
வன்மையுடன்லேசாகக்கிழித்துக்கொண்டு
மைந்தனேயரைப்பலந்தானிறுத்துக்கொண்டு
உண்மையுள்ளகிளிஞ்சியிலேஅப்பிரகம்வைத்து
உறுதியுள்ளதாளகத்தைபிட்டுமேலே
கண்மையென்றகளிப்பறட்டைக்கீரைச்சாற்றைக்
கனமாகத்தான்பிழிந்துமேலேகேளே. (௧௮௯)

கேளப்பா அப்பிரகத்தகட்டால்மூடி
கிருபையுள்ளகிளிஞ்சியதைமூடிக்கொண்டு
நாளப்பாபத்தெருவைச்சுற்றிவைத்து
நன்மையுடன்கீழ்மேலிரண்டெருவும்வைத்துத்
தாளப்பாதீமூட்டிப்புகையுமாறித்
தன்மையுடன்தகதகெனஎரியும்போது
வேளப்பாகுறட்டாலேமேலெருவைநீக்கி
விதமானகிளிஞ்சியதினடுவில்வையே. (௧௯௦)

வைத்தப்பாமேல்நெருப்புஎருவால்மூடி
மார்க்கமுடன்பார்கடிக்குள் திறந்துமெள்ள
உத்தப்பாமேல்நெருப்புக்கிளிஞ்சிநீக்கி
உண்மையுடன்றான்பார்க்கவுருகிநல்ல
சத்தப்பாவில்லாமல்கெம்புபோலே
தானிருந்தாலிறக்கியதின் றூரிற்றன்னில்
வைத்தப்பாவாறினபின்சிவந்துகாட்டும்
மார்க்கமுடனப்பிரகந்தள்ளிப்போடே. (கக௧)

போடவேகட்டியாய்வைத்துக்கொண்டு
புண்ணியனேமூன்றுமொன்றாய்க்கூட்டித்தாக்கு
சாடவேசந்நிமுதல்சுரங்கள் தீரும்
தயவானதாளகத்தைமீட்டுக்கேளு
கூடவேகிராம்புதிப்பிலிசிற்றரத்தை
குணமாகவறுத்துநன்றாய்ச்சாணைதன்னில்
தேடவேயிழைத்திடுவாய்த்தேனிற்றானும்
திரமானதாளகமுமிழைத்துக்கொள்ளே. (கக௨)

கொள்ளவேதீருகிறவியாதிகேளு
குடிகெடுத்தபழையசுரங்குத்திரைச்சல்
துள்ளவேவாந்தியோடன்னத்வேஷம்
துயர்முள்ளசேத்துமத்தின் சுரங்கடீரும்
வள்ளலார்பத்தியமோவிதற்கோவேண்டாம்
மைந்தனேபுளிகூட்டிச்சோறுமுண்ணு
உள்ளபடிபூரணத்திறப்போவில்லை
உறுதிவெகுவுறுதியடாஉண்மையாமே. (கக௩)

தாளகபற்பம்.

உண்மையுடனின்னமொருவித்தைகேளு
உறுதியுள்ளதாளகத்தின்பற்பஞ்சொல்வேன்
நண்மையுடன்வெடியுப்புபுளியுமொன்றாய்
நாட்டமுடன்றானிடித்துவட்டுப்போல

வெண்மையுடன்ஓட்டிவிட்டுவாசல்தன்னில்
விதமாகவடுப்பிட்டுஅனலைமூட்டித்
தண்மையுடனேசட்டையனல்மீதில்வைத்துத்
தானடுத்துநின்றுமெள்ளப்பார்த்தாற்கேளே. (ககூச)

பார்த்தாலேயனற்சூடுமுறைக்கும்போது
பாங்கானவெடியுப்புப்பற்றிப்போகும்
காத்தாலேவில்லையதுகறுத்துக்காணுங்
கனமாகப்பொடிசெய்துபீங்கானிலிட்டு
வேத்தாலேகுழிவெட்டிவைத்துமூடி
விதமாகமேல்மூடிக்காற்றுடாமல்
பார்த்தாலேமூன்றுநாட்கழிவுகண்டு
பாலகனேயொருபக்கந்தண்ணீராமே. (ககூரு)

தண்ணீராமங்நீரைச்செங்நீரென்பார்
தண்மையுடனுடோறுமெடுத்துக்குப்பி
அங்நீரையடைத்துவைத்துக்கொண்டுநீயும்
அப்பனேதாளகத்தைதவைத்துவாட்டு
பொன்னீர்போற்கரியோட்டிற்கருகவாட்டு
புண்ணியனேநவக்கிரகஞ்சிவந்துகாணும்
முன்னீரைவிட்டுமேயரைத்துக்கொண்டு
மிஞ்சாமல்இலேசாகவில்லைகட்டே. (ககூசு)

கட்டியோவிதனிலேகாயவைத்துக்
கனமில்லாவக்லிலேசிப்பிச்சுண்ணம்
இட்டுமேகீழ்மேலாய்வில்லைவைத்தங்
கென்மகனேமண்சீலையேழுஞ்செய்து
பட்டுமேபத்தெருவிற்புடத்தைப்போடு
பாலகனேபுடமாறியெடுத்துப்பாரு
நட்டமேவாராதுதவளம்போலாம்
நன்மையுடனன்னீராலரைத்துப்போடே. (ககூஎ)

போட்டப்பாமுன்போலச்சிலைசெய்து
புனிதமுடன்பதினைந்தாமெருவிற்றனும்
நாட்டப்பாபுடம்போடப்பற்பமாகும்
நன்மையதாய்வெளுக்காட்டால்முன்போலாட்டிக்
கூட்டப்பாஇருபதெருதன்னிற்போட்டால்
குருவானதாளகமும் பற்பமாகும்
பாட்டப்பாபற்பத்தைப்பணவெல்லத்தில்
பாங்காகப்பணவெடைகால்பருகக்கேளே. (௧௯௮)

பருகவேபித்தசுரம்பித்தவெட்டை
பாங்கானபித்தகயம்பித்தகாசம்
தருகவேமாட்டாதுமந்தகாசம்
தண்மையுள்ளசூலைவலிமேகரோகம்
வருகவேமாட்டாதங்குப்பாகாது
மண்டலங்கால்கொண்டுவிடுமார்க்கமாக
உருகவேவாதமென்றுமலைந்திடாதே
உண்மையுடன்நோய்தீர்ந்தால்வாதமாமே. (௧௯௯)

வாதமென்றரசவாதமுலகத்தோர்க்கு
வாயாதேயாசையென்றவஞ்சகத்தால்
போதமென்றசிவயோகம்பெற்றபேர்க்குப்
பூதலத்திலாசையில்லைவாதங்கிட்டும்
வேதமென்றவேதவாக்கியமிதாகும்
விருதாவில்வாதமென்றால்விழலாய்ப்போகும்
பாதமென்றபாதமதையறிந்தால்முத்திப்
பாதைவழிமார்க்கமதைப்புகாக்கேளே (௨௦௦)

அகாரம் - உகாரம்.

பகரக்கேள்புலத்தியனேதேகஞ்சித்தி
பராபரமாமுள்ளுயிராய்வாய்வுமாச்சு
நிகரில்லைரெண்டுமொன்றாய்நிலைத்தால்முத்தி
நினைவாகமவுனத்தின்வீடுகேளு

புகலவே அகாரமதைக்கீழேதாக்கிப்
புரிந்துநின்றால்உகாரமதைமேலேசேர்த்து
உகரக்கேள்மகாரத்தினடுவேநின்றே
உற்றுப்பார்பூரணத்தின்யொளிகாண்பாயே. (உ0௧)

காணப்பாசத்திசிவம்ஒன்றதாகக்
கலந்திருப்பார்ஒருவருமேகாணார்காணார்
தேன்போலேயருவியங்கேபாயும்வீடு
திருவானசுழிமுனையில்திறமாய்நின்றால்
தான்போலத்தானுள்ளேதானேதோணும்
தனதாகமுகமங்கேதானேதோணும்
வீணப்பாவலைந்துகெட்டுத்திரியவேண்டாம்
விபரமாயின்னமொருபாகங்கேளே. (உ0உ)

கர்ப்பூரசிலாசத்துப்பற்பம்.

கேளப்பாசிலாசத்துயார்தான்காண்பார்
கிருபையுள்ளகர்ப்பூரச்சத்துவாங்கி
நாளப்பாசுத்திசெய்துகல்வத்திட்டு
நன்மைசிறுசெருப்படியின்சாற்றாலாட்டிக்
கோளப்பாலேசாகவில்லைசெய்து
குணமாகக்காயவைத்தேயோட்டில்வைத்துத்
தாளப்பாசீலைமண்பலமாய்ச்செய்து
தண்மையுடன்ஐம்பதெருப்புடத்திற்போடே. ()

போட்டுமேஆறவிட்டுமுன்போற்போடு
புண்ணியனேமூன்றுவிசையரைத்துப்போடு
நாட்டுமேவெண்மையுமாய்ப்பற்பமாகும்
நன்மையுடன்மேலெரிவுபித்தவெட்டை
காட்டுமேபசுவெண்ணெய்தன்னிலீயக்
கனமானநீர்க்கடுப்புங்காணுதோடும்
பாட்டுமேபத்தியங்களுண்டோ இல்லை
பாலகனேபற்பமுறைபரிந்துபாரே. (உ0௪)

சிலாசத்துப்பற்பம்.

பாரப்பாகர்ப்பூரச்சிலையின்பற்பம்
பாங்காகக்கழஞ்சிரண்டு அகலிலிட்டு
நேரப்பாவதின்மேலேநினைவாய்க்கேளு
நிலையாதவெங்காரஞ்சுத்திசெய்து
சாரப்பாகழஞ்சிரண்டுஇட்டுமேதான்
தயவாகமேலுமேபற்பமிட்டுக்
காரப்பா அகல்மூடிச்சீலைசெய்து
கனஎருவாய்மூன்றெருவிற்புடைத்தைப்போடே ()

போடப்பாஆறினபினெடுத்துக்கொண்டு
பொல்லாதநீர்க்கட்டுநீர்க்கடுப்பு
தேடப்பாவெண்ணெயிலேயீந்தாயானால்
தீருமடாகல்லடைப்புத்தீரவென்றால்
நாடப்பாவிராவினிடதலையின்கல்லு
நன்மையுள்ளவெள்ளரியின்விதையின்சாறு
கூடப்பாபற்பமுடன்கலக்கிக்கொள்ளக்
குடிகெடுத்தகல்லடைப்புக்குணமதாமே. (௨0௬)

குணமாகமாட்டாமலடைத்துக்கொண்டால்
குவலயத்தாருன்னையுமேநகைசெய்யாமல்
குணமாகவின்னமொருசம்பிரதாயம்
கூறுகிறேமுள்ளங்கியிடித்தசாறு
குணமாகக்காற்படியிற்பணவெடைகால்பற்பம்
கூட்டியேதான்கொடுக்கக்கல்லும்வீழ்ந்து
குணமாகுமுள்ளங்கி ஆண்மையப்பா
கூறுதவின்னமொருபற்பம்பாரே. (௨0௭)

வெள்வங்கபற்பம் (நவமூலத்துக்கு.)

பாரப்பாவின்னமொருபற்பங்கேளு
பாங்கானவாலைரசங்கழஞ்சமூன்று
நேரப்பா அதினெடைக்குவெள்வங்கந்தான்
நேர்த்தியாய்த்தொந்தித்துக்கல்வத்திட்டுக்

சாரப்பாகர்ப்பூரசிலாசத்துதானும்
தயவாகக்கழஞ்சியதுமூன் றுங்கூட்டிக்
காரப்பா அரைத்திடுவாய்சுண்ணநீரால்
கருவாகப்பில்லைதட்டிக்காயப்போடே. (உ0அ)

காய்ந்தபின்புஒட்டிவிட்டுச்சீலைசெய்து
கருணையுடன்முப்பதெருப்புடத்தைப்போட்டு
ஆய்ந்துநன்றாயாறியபின்னெடுத்துமைந்தா
அப்பனேமுன்னீராலிரண்டுசாமம்
பாய்ந்துநன்றாயரைத்துபில்லைரவியிற்போடு
பாங்கானஒட்டிவிட்டுச்சீலைமண்செய்
மாய்ந்துவிடும்ஐம்பதெருப்புடத்துக்குள்ளே
மல்லிகைப்பூநிறம்போலவெண்மையாமே. (உ0கூ)

வெண்மையென்றவெள்வங்கபற்பந்தன்னை
விதமாகப்பணவெடைதான் அனுபானங்கேள்
வண்மையென்றமாதுளம்பூவிதழ்தான்மைந்தா
மார்க்கமுடன்ரெண்டுபலம்நிழலுலர்த்தி
நன்மையென்றசீரகம் அவ்வீதங்கூட்டி
நலமாகச்சூரணந்தான்பணவெடைநால்கூட்டி
உண்மையுள்ளபசுநெய்யிலிரண்டுவேளை
உண்டிடவேமண்டலத்திலுள்மூலந்தான். (உக0)

உள்மூலம்வெளிமூலமிரத்தமூலம்
உண்மையில்லாமெய்நோயுமெலும்புருக்கி
வெள்மூலஞ்சீமூலமேகமூலம்
விதமானகழிமூலம்பித்தமூலம்
நள்மூலமொன்பதுமேதீர்ந்துநல்ல
நாடிகளுந்தான்வலுத்துத்தாதுமுண்டாம்
வெள்வங்கபற்பமடாபத்தியந்தான்
விதமானஉளுந்துமொச்சைபூசினியுநீக்கே. (உகக)

கன்ம வரலாறு.

நீக்காதமூலநோய்கன்மத்தாலே
  நிலைகெட்ட அபானத்தில்நெருப்போமீறி
வாக்காலேயபானத்தின்வாசல்தன்னில்
  வந்துமுளைமேகமதால்சூட்டால்காணும்
தாக்கோலாலடைத்தாற்போல்வாயுநின்று
  தண்மையுள்ளமலமதனைவரட்டித்தீய்த்துப்
பேய்க்கோலம்பண்ணுமடாமூலரோகம்
  புலத்தியனேபழவினைகளின்னங்கேளே. (உகஉ)

பழவினையால்விஷப்பூச்சிகடித்ததோஷம்
  பாதகர்க்கேயொருநாளுந்தீர்வதில்லை
உள்வினையாலூடாடிக்கொல்லவந்த
  உண்மையதுவறியாமல்மூர்க்கஞ்செய்வார்
கள்வினையுந்தீர்வதில்லைகடினமெத்த
  கருணையுள்ளபூரணத்தில்கண்டகாட்சி
அள்வினைநீகாணுமுன்னேயகலச்சொல்லு
  அடையாளம்விரல்குறுகுமின்னங்கேளே. (உகங)

விரல்குறுகுங்கால்திமிரும் விஷம்போலேறும்
  மெய்யழுந்துந்தலைசுழலும்வெளுக்குமேனி
பரபரெனத்தேகமெல்லாந்தடித்துக்காணும்
  பாதமெல்லாம்வெடித்துமிகப்புண்ணுங்காணுஞ்
சரசமுடன்சொரிகரப்பான்பணம்போல்தோணும்
  சந்தையமோவிந்துகெடுந்தடித்துவீங்கும்
நாருலகிவிந்நொய்க்குமருந்தீயாதே
  நல்லோரைப்பழித்தகுஷ்டங்கன்மமாமே. (உகச)

நல்லோர்கள்பெரியோர்கள்நடத்துஞ்செய்கை
  நாட்டிலுள்ளதுர்ச்சனர்கள்நகைத்ததாலே
பொல்லாதவிஷக்கடிநீர்ப்புக்கிவந்து
  பொன்னனதேகமெல்லாங்குஷ்டம்போலே

சொல்லாதகடிவிஷங்கள்குன்மம்பாண்டு
துயர்தீராக்கர்மவினைசெய்தபாவம்
எல்லாருமநகைக்கவுடம்பெடுத்தபாவி
இன்னமுண்டுவிபரமதாயுலகிற்கேளே. (௨௧௫)

உலகுதனில்செவிடூமைகுருடர்தாமும்
மூர்க்கமுள்ளசப்பாணிமூக்கில்லாதார்
நல்குமதுவிஷக்கடிநீர்குன்மம்பாண்டு
நாடிவரும்பெருவயிறுகவுசியினை
பிலக்குமதுபெரியோரைக்கற்புள்ளோரைப்
பேதமில்லாச்சிவஞானப்பொருளுள்ளோரைத்
தலைகவிழவவர்கள்தமைத்தூஷித்தோர்கள்
சண்டாளரிந்நோயால்தயங்குவாரே. (௨௧௬)

கன்மந்தீர..

தயங்காமல்தீருதற்குவகையைக்கேளு
தண்மையுள்ளவருஷமதுதகையுங்காலம்
நயங்காமலாடியமாவாசையன்று
நன்மையுள்ளஏழுவிசைதானம்பண்ணி
முயங்காமற்சிவதலத்தைக்கோரிவந்து
முத்தியுடனாயிரம்பேர்வேதியர்க்குச்
சுயம்பாகந்தான்கொடுத்துநவக்கிரகந்தன்னைத்
தோத்திரித்துஅட்சதையும்வாங்கிக்கொள்ளே. ()

வாங்கியேபொதியைக்குத்தென்கிழக்குமூலை
வரிசையுள்ளவானமாமலைக்குச்சென்றால்
தூங்கியேயாலிலைமேல்பள்ளிகொண்ட
சுவாமியிடசந்நிதியில்தியானஞ்செய்து
ஓங்கியேநூறுபேர்பிராமணர்க்கும்
உத்தமனேசுயம்பாகங்கொடுத்துநீயும்
தேங்கியேஉதகமென்றகிணறங்குண்டு
திரமாகவொருசெம்புநெய்யைவாரே. (௨௧௮)

வார்த்துமேமறுசெம்புதயிலமொண்டு
மைந்தனேவேடுகட்டிக்கொண்டுபோய்நீ
ஆத்துமேயந்திசந்திகாசெடையாக்கொள்ள
அப்பனேதிங்களதுமூன்றுக்குள்ளே
தோற்றுமேதேகமதுபொன்போலேதான்
துயமானகன்மநோய்தூரவோடும்
காத்துமேயித்தயிலங் கொள்ளாவிட்டால்
கன்மநோய்தீராதிங்கின்னங்கேளே. (உகக)

வெண்குட்டந்தீர சோர்னபற்பம்.

இன்னங்கேள்புலத்தியனேஇராசயோகிக்
கின்பமுள்ளசொர்னபற்பமிதமாய்ச்சொல்வேன்
முன்னமேமுள்ளிக்கீரைச்சாற்றிலேதான்
மூன்றுநாளூறவைத்துப்பொடியாய்ராவி
சொன்னமதைக்கலவத்திலரைக்கும்போது
சித்திரைப்பாலாடையதுசிவந்தசாற்றில்
நன்னயமாய்மைபோலேயரைத்துவில்லை
நயமாகரவியுலர்த்திநலமாய்க்கேளே. (உ௨0)

கேளப்பாகடம்பினிலையரைத்துமைந்தா
கிருபையுடன்பில்லைமேல்கவசங்கட்டிக்
கோளப்பாவகலில்வைத்துஒட்டால்மூடிக்
குணமாகச்சீலைமண்ணேழுஞ்செய்து
தாளப்பாநூறெருவிற்புடத்தைப்போடு
தண்மையுடனாறினபின்தவளம்போலாம்
வேளப்பாவெண்குட்டந்தீருதற்கு
விதமானவனுபானம்விளம்பக்கேளே. (உஉக)

விளம்பவேசவுரியிலைச்சாறுதானும்
விதமாகத்தனிச்சாறுயப்படிதானெட்டு
தளம்பவேவெயிலிலிட்டுமெழுகுபோலே
தான்வற்றிற்கலந்தவெடையாடாதோடை

குளம்போடேயிலையரைத்துமெழுகுபோலே
கூட்டியதிற்புனுகுமோர்பலந்தான்கூட்டித்
துளும்பவேசொர்னபற்பங்கழஞ்சிரண்டு
தூக்கியதிற்போட்டரைத்துநெல்லிக்காய்போல். ()

காய்போலேயிளம்பதமாயுலர்த்திக்கொண்டு
கனமானவெள்ளெண்ணெய் தன்னில்போட்டுத்
தாய்போலேயோருண்டையந்திசந்தி
தன்மையுடனரைவருஷந்தயவாய்க்கொள்ள
வாய்போலேவெளுத்தகுட்டந்தீர்ந்துபோகும்
வண்மையுள்ளபத்தியம்சையோகமாகா
பேய்போலேகாமப்பேய்கொண்டபேர்க்குப்
புலத்தியனேசொர்னபற்பங்கொடுத்திடாதே. ()

கொடுத்ததினல்மருந்தூரும்எண்ணெய்தன்னைக்
குணமாகஎட்டுநாட்கொருக்கால்மூழ்கக்
கொடுத்ததினல்மருந்துவிடுமட்டுமூழ்கக்
குவலயத்தில்பறங்கியென்றகுட்டந்தீரும்
தடித்துநின்றவெண்குட்டமேக்குட்டம்
தயவாகத்தீருமடாதண்மையாலே
அடுத்திருந்தபேர்களைநீயகலச்சொல்லி
அப்பனேகைபாகமறிந்துசெய்யே. (௨௨௪)

வெள்ளிபற்பம்.

செய்யவேயின்னமொருபற்பங்கேளு
செயமானஊதுகட்டிவெள்ளிதன்னைத்
துய்யமாய்க்குகையிலிட்டுஉருகும்போது
துரையானவெள்ளியெடைமகிழம்பூச்சாறு
ஐயனேரெண்டுஎடைவிட்டிருக்க
அப்பனேவெள்ளியதுமடிந்துபோகும்
பொய்யல்லவப்பொடியைமுன்சாற்றாலே
புகழாகவரைத்துபில்லைஉலர்த்திக்கேளே. (௨௨௫)

உலர்த்தியதோர்வில்லைக்குக்கவசங்கேளு
உண்மையுடன்முட்காவேளைவேரைத்தாலும்
பிலக்கவதைமுன்னீராலரைத்துக்கட்டிப்
பிரியமுடன்குகையிலிட்டுச்சில்லுமூடி
உலர்த்திநன்றாய்மண்சீலைவலுவாய்ச்செய்து
உள்ளபடிநூறெருவிற்புடத்தைப்போடு
பெலத்ததோரசிதமென்றவெள்ளிபற்பம்
பெருமையுள்ளவெண்ணெயிலேகொடுத்துப்பாரே. ()

கொடுத்துமிகப்பார்க்கையிலேதீரும்நோய்கள்
குணமில்லாக்காசமோடிரத்தகாசம்
அடுத்துநின்றமேககயம்மந்தாரகாசம்
அப்பனேதிப்பிலியிலகலுஞ்சொன்னோம்
தொடுத்துமிகப்புளிபுகையுந்தவிர்க்கவேணும்
சுயமாகவேளைக்குப்பணவெடையிற்பாதி
கடுத்துநின்றபவுத்திரமுமூலச்சூலை
காணாமலோடுமடாகண்டுபாரே. (உஉஎ)

நாகபற்பம்.

கண்டுபாரின்னமொருபற்பங்கேளு
கருவானநாகமதைப்பயறுபோலே
கொண்டுபார்பொடிசெய்துகழஞ்சிரண்டு
குணமானஅயக்கரண்டிதன்னிலிட்டு
நிண்டுபார்முதல்தாமாஞ்சோமனாதி
நிறுத்தெடுத்துப்பணவெடையுங்கூடப்போட்டு
மொண்டுபார்சுத்தஜலங்கழஞ்சிவிட்டு
மூர்க்கமுடனிளஞ்சீலைவேடுகட்டே. (உஉஅ)

கட்டியேகாலமேதுவக்கிமைந்தா
கதிரவனிலிருபத்தாறுநாழிமட்டும்
இட்டுமேபிறகாலேகாண்டித்தூரில்
இதமானவேலியென்றபருத்திச்சாறுதடவி

தொட்டுமேஉலையில்வைத்தூதும்போது
சுகமாகத்தானுருகிமஞ்சள்போலே
பட்டியேபுகையெழும்பும்போகுமட்டும்
பாங்காகத்தானூதப்பற்பமாமே. (உஉகூ)

பற்பமடாவைத்தவெடைகுறைந்திடாது
பாலகனேசெய்பாகந்தவறிடாதே
அற்பமென்றுபற்பமதையெண்ணிடாதே
அப்பனேவெண்ணெயிலேபணவெடைகால்கொள்ளச்
சொற்பமென்றவுப்பாகாபுளியுமாகா
துவரையிடபருப்பிட்டுக்கிச்சடிபோற்பொங்கி
நற்பமென்றபசுநெய்யுங்கூட்டியேதான்
நலமாகவெழுநாள்கொள்ளுகொள்ளே. (உ௩0)

கொள்ளவேஎட்டாநாள்உப்புகூட்டு
குணமாகப்பத்தாநாள்ஸ்நானமாட்டு
துள்ளவேபுளிகூட்டத்தீருநோய்கேள்
துலையாதவெள்ளையது துலைந்துபோகும்
கள்ளமாமூலமதுதீர்ந்துநல்ல
கனமானதாதுவிர்த்தியுண்டாம்பாரு
எள்ளளவுங்கைபாகந்தப்போவில்லை
ஏகாந்தபூரணத்தினியல்புகேளே. (உ௩க)

பூரணமாம்நானூறுங்கைபாகந்தான்
புலத்தியனேவுனக்காகநன்றாய்ச்சொன்னேன்
காரணமாய்த்தென்மொழியிற்றிரட்டிவைத்த
கன்மநூல்சரக்குசுத்தியஷ்டலோகம்
மாரணமுஞ்சொன்னனடாநூற்றியைந்து
வகையானபத்திலேமகிழ்ந்துபார்த்தால்
காரணமும்பூரணமுங்கண்டபோதே
கருவானபற்பமெல்லாங்கைக்குள்ளாமே. (உ௩உ)

ரசபற்பம்.

பற்பமென்றாசபற்பமொன்றுகேளு
பாலகனேரசமதனைப்புளிக்காய்ப்பாலில்
அற்பமென்றுநினையாமற்கையிற்றேய்க்க
அகங்கையிலொட்டமெடாவீயம்போலே
துப்பரவாய்த்தேய்த்தும்மெள்ளக்கழுவிற்சுத்தி
சுத்திசெய்தாசங்கழஞ்சிபன்னிரண்டு
நிற்பமாய்க்குழிக்கல்லிலிட்டுக்கொண்டு
நினைவாகத்தானரைக்கத்தயிலங்கேளே. (உ௩௩)

தயிலமென்றகெந்தகத்தின்தயிலமப்பா
தண்மையுடன்இறக்கும்வகைதயவாய்க்கேளு
ஓயிலாகக்கெந்தகத்தைத்தூளாயாட்டி
உண்மையுள்ளகலயத்திற்பாதிபோட்டு
மயலாகக்கலசம்வாய்க்கேற்றாற்போலே
மைந்தனேமண்ணுலேபுனலுண்டாக்கி
அயிலமென்றகலயத்தில்மூடிச்சீலை
அஞ்சாறுமண்வலுக்கச்செய்துகொண்டே. (உ௩௪)

கொண்டபின்புஅடியுயர்ந்தகுப்பிவாங்கிக்
குணமாகச்சலநிரப்பியடைத்துப்போட்டு
அண்டையிலேயொருவனைத்தான்பிடிக்கச்சொல்லி
அடியப்பாவிரும்பாணிதூறிலேதான்
பண்டையிலேயோரடியிற்றமருண்டாகும்
பாலகனேபுனல்மூக்குத்தமருள்விட்டு
ஒண்டையிலேமண்பூசிப்புகையோடாமல்
உத்தமனேசிறுவடுப்பில்தீபம்போலே. (உ௩௫)

தீபம்போல்மேல்குப்பிக்கனல்படாமல்
தீயெரிக்காழிகைதானிரண்டுக்குள்ளே
தூபமென்றகெந்தகத்தின்புகைதான்குப்பி
சுற்றிலுமேதிராவகமாய்நிற்கும்பாரு

தாபமென்றமறுகுப்பிக்கூற்றிக்கொண்டு
தயவாகநாற்கழஞ்சு தயிலம்விட்டுச்
சோபமென்றாசமாளவரைத்துருட்டிச்
சுருக்காகமேற்கவசஞ்சொல்லக்கேளே. (உருசு)

சொல்லக்கேள்பூவரசம்பட்டைபலமிரண்டு
சுத்திசெய்தநெல்லிக்காய்கெந்திபலமிரண்டு
அல்லக்கேள்சிறுதும்பைச்சாறுவிட்டாட்டி
அப்பனேரசமெழுகிலணிந்துருட்டி
நல்லக்கேள்வாய்பொருந்துந்தாளிரண்டு
நன்னயமாயடித்தாளிதன்னிலுப்பும்
வல்லக்கேள்செங்கலுமேபொடித்துப்பாதி
வகையாகத்தான்செம்மிமருந்துவையே. (உருஎ)

வைத்தப்பாமுன்றாளால்மறையமூடி
மார்க்கமுடன்மேல்தாளித்தூரிலேதான்
கைத்தப்பாகையான்சாறேழுவிசைபூசிக்
காயவைத்துமேல்மூடியெழுமண்செய்து
சத்தப்பாவெடித்தவிடமண்ணும்பூசி
சதாநந்திபதம்போற்றிவாலுகைமீதேற்றி
நைத்தப்பாகாடாக்கினிமூன்றுசாமம்
நலமாகத்தானெரித்துமடுப்போடாற்றே. (உருஅ)

ஆற்றியேகிழிறக்கியோரப்பாட்டாய்
அப்பனேதான்சாய்த்துவவிழ்த்துமெள்ள
தூற்றியேமேற்சட்டிக்குள்ளேமைந்தா
துயர்தீரவராகமுடிகொண்டுநீயும்
பார்த்திபனேதுடைத்தெடுத்ததனைநீயும்
பாங்கானகன்மநோய்தீரவேண்டிச்
சாத்தியேபணவெடைதான்பனைவெல்லத்தில்
தயவாகவிருவேளையேழுநாளே. (உருகூ)

ஏழுநாள்தான்கொடுக்கத்தீருநோய்கேள
என்மகனேகுலேநோயுங்குன்மநோயும்
ஆழுமேகுஷ்டமுடன்சூலையரையாப்பு
அபானத்தில்சூலையுடன்யோனிப்புற்று
கேழுமேமூலமுளேகண்டமாலே
கிரந்தியுடன்தடிப்புவெள்ளேகருங்கரப்பான்
பாழுமேவண்டுகடிசில்விடமுந்தீரும்
பத்தியந்தானுப்பாகாபசும்பாலாகும். (உசo)

பாலாகும்வெந்நீராம்பதினுலாநாள்
பாலகனேயோமநீர்ஸ்நானம்பண்ணி
நாலாகும்உப்பதனேவறுத்துக்கூட்டு
நன்மையுடன்மறுநாளும்வெந்நீர்மூழ்கு
காலானவிளக்கெண்ணெய்பின்புமூழ்கிக்
கனத்தபுளிசுட்டுமேகூட்டச்சொல்லு
ஆலானஸ்திரீபோகமண்டலமுமாகா
தப்பனேசகலநோயகலும்பாரே. (உசக)

குப்பிச்சிந்தூரம்.

பாரப்பாவின்னமொருசிந்தூரங்கேள்
பாடுகிறேன்புலத்தியனேபதிவாய்க்கேளு
நேரப்பாவாலேரசம்பலந்தானுலு
நேர்த்தியென்னகந்தியோர்பலமேகூட
காரப்பாகரியோட்டில்தொந்தித்தேதான்
கனமாகப்பொடிசெய்துகுப்பிக்கேற்றி
மேரப்பாவாலுகையிலேற்றிக்கொண்டு
மேன்மையுடனெருசாமம்தீபம்போலே. (உசஉ)
தீபம்போல்மறுசாமங்கமலம்போலத்
திறமாகத்தானெரித்துமூன்றுஞ்சாமம்
தாபம்போற்காடாக்கினிபோலேமைந்தா
தானெரிக்கில்கெந்தகத்தின்வாசம்வீசும்

கோபம்போல்சிலாகையிட்டுமெள்ளக்கிண்டு
குமாரனுடன்குமரியுமேகூடுநேர்மை
சோபம்போலிணக்கமதாயுருகிக்காணும்
துரிதமுடன்இளகுபதமில்லாவிட்டால். (உசங)

இல்லாட்டால்மேலையொருஜடுமுடி
என்மகனேயொருநாழிகடுந்தீப்போடு
சல்லாபமாய்நீக்கிச்சிலாகைபோடு
சதுராகவுருகியதுகுழம்பாய்க்காணும்
பொல்லாததாளகத்தைப்பொடித்ததூள்தான்
புலத்தியனேகாற்பலந்தான்குப்பியிலேபோட்டு
நல்லாகநாற்புறமுங்கிழுமேலும்
நன்றுகச்சிலாகையினுற்கிண்டிப்போடே. (உசச)

கிண்டியேமுச்சாமங்கடந்துமேலே
கிருபையுடனுற்சாமந்தன்னில்மைந்தா
அண்டினுல்வடவையென்றதணலைப்போடாய்
அப்பனேமருந்தெல்லாமேலேயேறும்
துண்டியேமிதப்பதனைமறந்திடாதே
துரிதமுடனுற்சாமம்எரித்துநீயும்
தண்டியேசிலாகையிட்டுப்பார்க்கும்போது
தயவாகச்சிலாகைமுனைசிவந்துபோமே. (உசரு)

சிவந்தாலும்வெளுத்தாலும்பதமிதப்பா
சீக்கிரத்திற்குறட்டாலேயெடுத்துக்குப்பி
மயமாகநீர்தெளித்தேயாற்றிப்போடு
மைந்தனேசிலாகைமுனைகறுத்துத்தோன்றில்
குவிந்திருந்தகுப்பிதனை அடுப்போடேதான்
குணமாகயெரிப்பாற்றிவைத்துப்போடு
தவிந்திருந்தஅடுப்பினதுவேகத்தாலே
தான்சிவக்குமிருநாழிசென்றப்பாலே. (உசசு)

அப்பாலேகுறட்டதினாற்குப்பிவாங்கி
அசராமல்தெளித்திடுவாய்சுத்தகங்கை
தப்பாதகுப்பிதனையுடைத்துப்பாரு
தயவானசிந்தூரங்கறுத்துக்காணும்
இப்பாலேயரைக்கையிலேமுருக்கம்பூப்போல்
இருக்குமடாபணவெடைதான்தேனிலீய
செப்பாதபத்துநாள்,தன்னிலேதான்
தீருகிறவியாதிதனைத்திறமாய்க்கேளே. (உசஎ)
கேளப்பாமூலநோய்மேகரோகம்
கெடியானபவுத்திரமும்அநேகநோய்கள்
தாளப்பாபுளிபுகையுந்தள்ளத்தீரும்
தயவானவாலைரசச்சிந்தூரத்தை
ஆளப்பாகற்பாதிசெய்வானப்பா
அரகராஉலகத்தோர்ரசமென்பார்கள்
வாளப்பாவின்னமொருசெந்தூரந்தான்
வகையாகச்சொல்லுகிறேன்வரிசையாக. (உசஅ)

அப்பிரகசிந்தூரம்.

வரிசையாய்ச்சொல்லுகிறேன்அப்பிரகந்தன்னை
மைந்தனேபொடிப்பொடியாய்ப்பொடித்துக்கொண்டு
துரிசமதாயந்தெடைக்குப்பனைவெல்லந்தான்
சுகமாகவெடியுப்புமொன்றாய்க்கூட்டிப்
பரிசமுடன்சுத்தகங்கைதன்னாலாட்டிப்
பாலகனேபில்லைதட்டிஓட்டிலிட்டுப்
பிரியமுடன்மேல்மூடிச்சீலைசெய்துப்
பிலமாக்கிக்கெசபுடத்திற்போட்டுப்பாரே. (உசகூ)
போட்டுமேஆறினபின்எடுத்துப்பாரு
புண்ணியனேதளுக்கற்றுப்பற்பம்போலாம்
தாட்டிகமாய்க்கல்வத்திலிட்டுக்கொண்டு
தானரைப்பாயொருசாமம்எருக்கம்பாலால்

மாட்டியமாய்க்கல்லோடேரவியிற்போட்டு
மற்றுநாள் அப்பாலால்சாமமாட்டு
நாட்டுமேகல்லோடேவெயிலில்போட்டு
நலமாக அவ்விதம்நாற்பதுநாள்போடே. (உ௫0)

நாள்கேளுநாற்பதிலேவில்லைதட்டி
நன்மையுடன்காயவைத்துஒட்டிவிட்டு
வேள்போன்றமேலோடுபொருந்தமூடி
மேன்மையுடன்எழுசீலைமண்ணுஞ்செய்து
தாளானதாளிறைஞ்சிக்கெசபுடத்தில்
தயவாகஆறினபின்எடுத்துப்பாரு
வாள்போன்றஅப்பிரகஞ்சிவந்துகாணும்
மைந்தனேகல்வத்தில்அரைத்திடாயே. (உ௫க)

அரைத்திடுவாய்பொற்றலையின்கையான்சாற்றில்
அப்பனேநாற்சாமமரைத்துவில்லை
திறத்துடனேதானுலர்த்திக்கெசபுடத்திற்போடு
தீர்க்கமுடனிவ்விதமாயரைத்தரைத்து
உரத்துடனேஐந்துபத்துஒன்றும்போட
உத்தமனே அருணனைப்போல்சிவந்துகாணும்
நிரைத்துமதைப்பொடிசெய்துகுப்பிதன்னில்
நீபதனம்பண்ணிவிடு அநுபானங்கேள். (உ௫உ)

கேளடா ஆவாரைப்பஞ்சாங்கந்தான்
கிருபையுடன்பலமெட்டு அசுவகந்தி
நாளடா அவ்வீதஞ்சீரகந்தான்
நன்மையுடன்பலமிரண்டுசூரணித்துத்
தூளடாவெருகடியிற்குன்றிவீதம்
தருவானபசுவெண்ணெய்தன்னிலுண்ண
வேளடாவிருவேளைமண்டலந்தான்
விதமாகக்கொண்டுவிடவியாதிகேளே. (உ௫௩)

கேளேநீமேகமென்றுலிருபத்தொன்றும்
கெடியாகத்தீருமடாபத்தியமோஇல்லை
கோளேநீரிழிவுமதுமேகந்தீரும்
கோடானகற்பமிதுக்கொவ்வாதப்பா
வாளேநீசிந்தூரஞ்சகலருக்கும்
வாயாதுயார்படுவோரிந்தப்பாடு
வேளோனைவென்றசித்தர்செய்யுமார்க்கம்
வெளியாகச்சொன்னதிந்தப்பூரணந்தான்பாரே. ()

காந்தசிந்தூரம்.

பாரப்பாஇன்னமொருசிந்தூரந்தான்
பாங்கானகெந்திசமன்காந்தங்கூட
நேரேநீகரிசாலைச்சாற்றாலாட்டி
நினைவாகவில்லைதட்டிக்காயப்போட்டுச்
சாரப்பாஓட்டிவிட்டுஓடுமூடித்
தயவாகச்சீலைமண்வழுஞ்செய்து
தாரப்பாகெசபுடத்திற்போட்டுவாங்கித்
தயவாகஇவ்வெடைக்குக்கெந்திகூட்டே. (உருரு)
கூட்டியேமுன்சாற்றாலரைத்துமுன்போல்
குணமாகக்கெசபுடத்திற்போட்டுவாங்கி
நாட்டியேஅவ்வெடைக்குக்கெந்திகூட்டி
நலமானபழச்சாற்றாலரைத்துமுன்போல்
மாட்டியேகெசபுடத்திற்போட்டுப்பின்பு
மைந்தனேஅவ்வெடைக்குக்கெந்திகூட்டி
தாட்டிகமாயவ்வெடைக்குச்சித்திரமூலம்
தயவாகத்தான்கூட்டிமுலைப்பாலாட்டே. (உருசு)
ஆட்டியேபில்லைதட்டிஓட்டிவிட்டு
அப்பனேமுன்போலப்புடத்திற்போடு
நாட்டியேகெந்தியொடுசித்திரமூலம்
நன்மையுடன்இவ்வெடைக்குஒன்றாய்க்கூட்டி

ஆட்டிடுவாய்கோழிமுட்டைவெண்கருவினாலே
அப்பனேவில்லைசெய்துபுடத்திற்போட்டுக்
காட்டிடவேபின்னெடுத்துக்கல்வத்திட்டுக்
கனமானஎருக்கம்பால்தன்னாலாட்டே. (உ௫எ)

எருக்கம்பால்தன்னாலேநாலுசாமம்
என்மகனேதானரைத்துவில்லைதட்டிச்
சுருக்கமுடன்தானுலர்த்திஓட்டிலிட்டுச்
சுசமாகமேலோடுமூடிச்சீலை
இருக்கமுடன்மண்செய்துகெசபுடத்திற்போட்டு
எடுத்துப்பார்செங்கறுப்பாயிருக்கும்பாரு
பெருக்கமுடன்பொடிசெய்துபதனம்பண்ணிப்
புண்ணியனேபணவெடைதான்தேனிலுண்ணே. ()

உண்ணப்பாஅந்திசந்திமண்டலந்தான்
உத்தமனேபத்தியமோஇதற்கோவேண்டாம்
கண்ணப்பாமோகமதைத்தவிர்த்தால்போதும்
கனமனவிஷபாண்டுகாவுசைக்கட்டி
தண்ணப்பாசோகையுடன்பித்தபாண்டு
தருகாதநீராம்பல்அண்டவாயு
நிண்ணப்பாமேலேறும்ஆநந்தவாயு
நிலையானவாயுவெல்லாம்நீங்கிப்போமே. (உ௫௯)

அயசிந்தூரம்.

நீங்கிப்போமின்னமொருசிந்தூரங்கேள்
நிலையானஅரப்பொடியைக்கல்வத்திட்டு
ஏங்கிப்போம்காடிதெளித்தொதியம்பட்டை
இடித்துப்பிழிந்தச்சாற்றைஊற்றிமைந்தா
பாங்குடனேமூன்றுநாள்வற்றரவியில்
பாலகனேவைத்தபின்புநாலாநாளில்
சாங்கமாய்முன்சாற்றிலரைத்துவில்லை
தயவாகத்தான்செய்துகாயப்போடே. (உ௬0)

போட்டப்பாஒட்டிவிட்டுஒடுமூடிப்
புகழாகச்சீலைமண்ஏழுஞ்செய்து
நாட்டப்பாகெசபுடத்திற்போட்டெடுத்து
நலமாகமுன்சாற்றிலரைத்துமுன்போல்
தேட்டப்பாகெசபுடந்தானெட்டும்போடு
திரமாகக்காடியதுசேர்த்தசாற்றில்
கூட்டப்பா தனிச்சாற்றில்மூன்றும்போடு
குணமாகஅயமதுவுஞ்சிந்தூரமாமே. (௨௬௧)

ஆமப்பாஅனுபானமறிந்தேயுண்ண
அரும்பிணிகள்வாதபித்தம்ஐயத்தாலே
நேமப்பாஅநேகமகாரோகமெல்லாம்
நீங்கித்திரிநாடிகளுமுறுக்குமேறி
காமப்பால்பெருகிருக்கும்விந்துங்கட்டும்
கண்களில்செவ்வலரியரிவீரஞ்செய்யும்
தாமப்பாஆலரசுபிஞ்சுவித்துச்
சமனிடைக்குஅதிமதுரம்பசுநெய்யாமே. (௨௬௨)

நெய்யாகுந்தேனாகுமனுபானந்தான்
நீங்காதவாய்வுகளும்நீங்கிப்போகும்
பொய்யாகும்கைபாகந்தவறிட்டாலும்
புலத்தியனேமருந்தொன்றும்பலித்திடாது
வையாதேபூரணத்தில்கைபாகந்தான்
வண்மையுடன்வயித்தியபூரணமிதாச்சு
ஐயமில்லாநானூறும்வெளியாய்த்தோணும்
ஆதிகுருகொடுத்தமுன்மொழிதன்னாலே. (௨௬௩)

நாகசிந்தூரம்.

தன்னாலேயின்னமொருசிந்தூரங்கேள்
தருவானநாகமதையுருக்கிமைந்தா
முன்னாலேமூவேழுதரந்தானன்றாய்
மூர்க்கமுடனிலுப்பைநெய்யில்சாய்க்கச்சுத்தி

பின்னாலேபுதுச்சட்டிதன்னிலிட்டுப்
பிசகாமலடுப்பிட்டுஉருக்கிக்கொண்டு
தன்னாலேசீதாசெங்கழுநீர்ப்பூண்டு
தான்போட்டு அயக்காண்டிதன்னால்கிண்டே. (உசுச)

கிண்டுவாயடிக்கடிதான்பூண்டுபோட்டுக்
கிருபையுடன் அனற்போட்டுநாலுசாமம்
தண்டுமுண்டுபண்ணாதேகிண்டிவாங்கு
தருவானநாகமதுமாண்டுபோகும்
கண்டுமேசெங்கழுநீர்ச்சாற்றரைத்துக்
கனமானவில்லைசெய்துகாயப்போட்டுப்
பண்டுமேயோட்டிவிட்டுஓடுமூடி
பாலகனேசீலைமண்வலுவாய்ச்செய்யே. (உசுரு)

செய்துமேகெசபுடத்திற்போட்டுவாங்கித்
திரும்பவதைப்பொற்றலையின்சாற்றாலாட்டி
எய்துமேமூன்றுவிசைமுன்போற்போட
என்மகனேநாகமதுசிந்தூரமாகும்
கொய்துமேபணவெடைதான்பசுவெண்ணெய்தன்னில்
குழைத்திரண்டுவேளை அரைமண்டலமேகொள்ள
வைதுமேமூலமெல்லாந்தீருமப்பா
வகையானமேகநோய்மாறிப்போமே. (உசுசு)

மாறிப்போம்பத்தியந்தான்கரப்பான்பண்டம்
மைந்தனேயாகாதுமற்றவெல்லாம்
தேறிப்போம்புலத்தியனேசிந்தூரந்தான்
சிவக்காதுமஞ்சள்வர்ணசிவப்புமாகும்
கோறிப்போம்சிந்தூரம்கொடுக்கும்போது
குணமில்லாமூலநோய்மூலவாய்வு
மாறிப்போம்நாகசிந்தூரமப்பா
வகையாகச்செய்துநீவைத்தியம்பாரே. (உசுஎ)

அறிவு.

வயித்தியநீபார்க்கவென்றால்சொல்லக்கேளு
வண்மையுள்ளமானிடர்க்குக்கன்மநோய்தான்
பயித்தியமேயில்லாட்டால்நோயேயில்லை
பாலகனேமுன்செய்தபாவத்தாலே
சயித்தியமோதொடர்ந்துவரும்குஷ்டரோகம்
தன்னாலேஉன்னையவர்பணிந்துகேட்பார்
அயித்தியமாய்ப்பொருளாசைப்பட்டாயானால்
அணுகுமடாபுலத்தியனேஉன்னைத்தானே. (உசு அ)

புலத்தியனேபொருளாசைகொண்டுநீயும்
பூதலத்தில்பணங்கேட்டால்நோய்தீராது
சிலத்தியாயவன்மனதுகனிந்துமீய்ந்தால்
சிந்தையில்லைநீயவனைக்கேட்கவேண்டாம்
நிலத்திலேவயித்தியன்தன்மனநொந்தாக்கால்
நீடூழிகாலமட்டும்நரகிற்சேர்வார்
தலத்திலேபணம்பிடுங்கும்வயித்தியனேயானால்
தன்மையுடன்கன்மநோய்க்குள்ளாவானே. (உசுகூ)

கன்மநோய்க்குள்ளாகிப்பிறத்தல்நன்றோ
கயிலாயம்பராபரத்திற்சேர்தல்நன்றோ
வன்மமெனும்உலகத்தோர்மீதிலேதான்
வயித்தியனேசிவன்மேலேவன்மம்வைத்தால்
கன்மநோய்தீருமடாகாலனில்லை
கயிலாயபதிகிடைக்கும்கருணைதங்கும்
நன்மையென்றபெயரெடுக்கவெகுநாள்செல்லும்
நலமானவயித்தியந்தான்தன்மமாமே. (உஎ0)

தாம்பிரசிந்தூரம்.

தன்மமாமின்னமொருசிந்தூரங்கேள்
தருவானதாம்பிரத்தைத்தகடுதட்டி
நின்மலமாமனோசிலைதான்கொஞ்சம்போலே
நேர்மையுள்ளஅந்தரமாமூலிச்சாற்றில்

வன்மமுடனரைத்ததின்மேல்தடவியப்பா
மார்க்கமுடன்பத்தெருவில்புடத்தைப்போடு
கன்மமடா தானகலும்போலேமைந்தா
கருவாகவிருபுறமும்வெந்துபச்சை. (உஎக)

பச்சையாய்த்தானிருக்கும் அதைத்தான்மைந்தா
பக்குவமாய்முன்போலப்போடச்சாவும்
மிச்சமாய்ச்செத்ததொருசெம்பைநீயும்
மீறுமல்பொடித்துப்புதுசட்டிதன்னில்
ஆச்சமறப்புளியிலேச்சாறிட்டுக்காய்ச்சி
அரைப்படிதான்குழம்புபோல்வருமந்நேரம்
உச்சிதமாய்ச்சுத்தகங்கைநாழிவிட்டு
உண்மையுடன்தான்கலக்கித்தெளியவையே. (உஎஉ)

தெளிந்தபின்இறுத்துவிட்டுமறுநீர்வாரு
திறமாகக்கலக்கியதைத்தெளிவைநீக்கி
ஒளிந்துவிடப்பச்சைவர்ணமூரல்தானும்
ஒன்பதுநீர்தெளிவிருக்கஊரல்நீங்கும்
அளிந்துநீ அவசரமாய்த்தெளித்திடாதே
அப்பனேஊரலற்றுச்சுத்தியாகும்
இளிந்துநீ அடுப்பில்வைத்துச்சூடுதாக்கு
என்மகனேகற்றைகட்டிக்கிண்டக்கேளே. (உஎரு)

கிண்டிடுவாய்புளியஞ்சிறுகீரையாலே
கிருபையுடன்நாற்சாமம்கிண்டிநீயும்
அண்டிடுவாய்கல்வத்திலிட்டுக்கொண்டு
அப்பனேபுளியஞ்சிறுகீரைச்சாற்றால்
நிண்டுடனேதானரைத்துவில்லைதட்டி
நினைவாகத்தானுலர்த்திஓட்டிலிட்டு
பண்டிடவேகெசபுடத்தில்போட்டுவாங்கிப்
பருவமுடன்தானரைபொற்றலையின்சாற்றில். ()

சாற்றாலேஅரைத்துமூன்றுபுடமும்போட்டுத்
தயவாகப்பார்க்ககருஞ்சிவப்பாய்க்காணும்
தோத்தாததாம்பிரம்வீறடங்காவிட்டால்
துரிதமுடன்திரிபலையின்கஷாயத்தாட்டிக்
காத்தாலேமுன்போலப்புடத்தைப்போடு
கருவாகப்பணவெடைதான்கொள்ளச்சொல்லு
பாத்தாலேகுஷ்டமெல்லாந்தீருமப்பா
பண்பானமேகமோடிளைபோமே. (௨௭௫)

ஈளையொடுமந்தாரகாசம்போகும்
இன்பமுடன்கரிசாலைச்சாறுநாழி
கோளையென்றபசுவின்பால்படிதானொன்று
கூட்டியதில்சருக்கரையும்பலம்பத்தாகும்
பேளையென்றபாகுபதம்வருதல்கண்டு
பிலமானமிளகுபலம்பதினாறப்பா
வாளநல்லாய்ப்பொடித்திட்டுலேகியம்போற்கிண்டி
மைந்தனேநெய்யுழக்குத்தேன்றான்பாதி. (௨௭௬)

பாதிவிட்டுலேகியமும்பாக்கெடைக்குப்
பாங்கானசிந்தூரம்பணவெடைகால்கூட்டிச்
சாதியாயிருவேளைமண்டலந்தான்கொள்ளச்
சகலநோய்தீருமடாதாம்பிரத்தின்வேகம்
ஆதியாப்புளிபுகையுந்தவிர்த்துநல்ல
அன்பானபசுநெய்வெள்ளாட்டுக்கண்டம்
ஓதியதோர்சிறுபயறுதுவரையாகும்
உத்தமனேவழுதலையுமுருங்கைப்பிஞ்சே. (௨௭௭)

பெரும்பாடுதீர லேகியம்.

பிஞ்சாகுமின்னமொருலேகியங்கேள்
பெலமானபோஸ்தக்காய்கர்க்கடகசிங்கி
தஞ்சமென்றவகைக்குஒருபலமாய்வாங்கித்
தன்மையுடன்மராட்டிமொக்குகழஞ்சுசேர்த்து

மிஞ்சாமல்பொடிசெய்துபனைவெல்லந்தான்
　மீறாமல்மருந்தெடைக்குப்பாகுசெய்து
அஞ்சாமல்சூரணத்தைக்கொட்டிக்கிண்டி
　அப்பனேதேன்விட்டுக்கூடக்கிண்டே. (உஎஅ)
கிண்டியேபாக்களவுலேகியந்தான்
　கிருபையுடன்இருவேளைஐந்துநாளும்
கொண்டிடவேபெண்களிடஉதிரப்பாய்ச்சல்
　கொடுமையென்றபெரும்பாடுதீருமப்பா
உண்டிடவேபத்தியந்தானென்றுமாகா
　உத்தமனேவறுத்தவுப்புமிளகுஞ்சேர்ந்த
சுண்டலென்றதுவரையதன்சுண்டலாகும்
　சுகமானவெந்நீருஞ்சாந்தமாமே. (உஎகூ)

தேற்றாங்கொட்டை லேகியம்.

சாந்தமாமின்னமொருலேகியங்கேள்
　சமர்த்தானபலமைந்துதேற்றாங்கொட்டை
சேர்ந்ததொருதிரிகடுகுதிரிபலாதி
　சிற்றரத்தைசீரகம்வகைக்கரைப்பலந்தான்
பாங்கமாய்ப்பொடிசெய்துவைத்துக்கொண்டு
　பஞ்சதாரைபலம்நாலுபடியாப்பாவில்
தோய்ந்திடவேகலக்கியதைப்பாகுசேர்த்துத்
　துரிதமுடன்தூள்கொட்டிக்கிளருவாயே. (உஅ௦)
கிளரயிலேபசுவினெய்படிகால்வாரு
　கீழிறக்கித்தேன்பாதிவிட்டுக்கிண்டித்
தளரயிலேபாக்களவுலேகியத்தில்
　தருவானநாகபற்பங்கூட்டித்தின்னு
அளரயிலேயிருவேளையிருபதுநாள்கொள்ளு
　அப்பனேமூலநோயகலுஞ்சொன்னோம்
இளரவேகயமுடனேஅத்திசுரம்வாதம்
　இதமானஅக்கினியாமந்தம்போமே. (உஅக)

திரிகடுகு லேகியம்.

மந்தமொடுமூலத்தின்வாய்வுதீரும்
மைந்தனேபுளிபுகையுமாற்றச்சொல்லு
அந்தமுடன்இன்னமொருலேகியங்கேள்
அன்பானதிரிகடுகுவகைப்பலந்தானென்று
சொந்தமுடன்சீரகமுங்கிராம்புமேலம்
துரிதமுடன்வகைக்குஅரைப்பலமேவாங்கி
விந்தையதாய்ச்சுத்திசெய்துசூரணித்து
விதமானபனைவெல்லம்பலந்தானஞ்சே. (உஅஉ)

அஞ்சாகும்பாகுபோற்காய்ச்சிக்கொண்டு
அப்பனேசூரணத்தைப்பாய்ச்சிக்கிண்டி
மிஞ்சாமல்நெய்யுழக்குஅரைக்கால்தேன்றான்
விட்டுமதைலேகியம்போல்கிண்டிவாங்கிக்
கொஞ்சமாய்க்கொட்டைப்பாக்களவுமைந்தா
குணமாகவிருவேளைஇருபதுநாள்கொள்ளு
நெஞ்சாரத்தீருகிறவியாதிகேளு
நிலையானவாதமொடுவாய்வுபோமே. (உஅங)

வாயுவொடுஊஷ்ணமும்பித்தவாய்வும்
வயிற்றுவலிகடுப்புளைவுமெரிச்சல்பேதி
தேயுவென்றஅக்கினியாமந்தம்வாந்தி
தீராதஅத்திசுரம்அத்திவெட்டை
பாயுரதோர்பொருமலென்றவாய்வுக்கிராணி
பறக்குமடாலேகியத்தில்அயசிந்தூரம்
பேயுமின்றிப்பணவெடைதான்கூட்டியுண்ணப்
பிலமானவாயுவெல்லாம்பிரண்டுபோமே. (உஅச)

கபாடலேகியம்.

பிரண்டுபோமின்னமொருலேகியங்கேள்
பிலமானஆலரசுஅத்திநாவல்
முரண்டுடையமாம்பட்டைக்கருவேல்பட்டை
மூர்க்கமுள்ளவெள்வேலும்விடத்தலையின்வேரும்

திரண்டுநின்றதென்னம்பூஒன்பதுமேஒன்றாய்த்
திறமாகப்பலமிரண்டுமிடித்துமைந்தா
இரண்டுமேபானையிட்டுக்குறுணிநீர்தான்
இட்டுமதையெட்டொன்றாயிட்டுக்கேளே. (உஅ௫)

கேளப்பாகஷாயத்தைவடித்துக்கொண்டு
கிருபையுடன்சக்கையெல்லாமெறிந்துபோடு
தாளப்பாபூண்டுரித்துப்பலந்தானெட்டு
தருவாகஅதிற்போட்டுவேகவைத்துக்
கோளப்பாசலமெல்லாங்குறுகிவெந்தால்
குணமாகமத்திட்டுக்கடைந்துநீயும்
நாளப்பாபனைவெல்லம்பலந்தானாலு
நன்மையுடன்அதிற்போட்டுப்பாகுபோலாம். ()

பாகுபோல்பதமாகும்போதிலேதான்
பக்குவமாய்ச்சாதிக்காயபினியோமம்
நேகவரைவகைக்கிரண்டுவிராகனாக
நேராகப்பொடிசெய்துபோட்டுக்கிண்டிப்
பாகுபோலிளக்கமதாயிருந்ததானால்
பக்குவமாய்ச்சலம்வற்றக்கிண்டும்போது
ஏகமாய்ப்பசுவினெய்கொஞ்சம்விட்டே
என்மகனேலேகியம்போல்கிண்டிவாங்கே. (உஅஎ)

வாங்கியேநெல்லிக்காய்வீதந்தானும்
மைந்தனேயிருவேளையிருபதுநாள்கொள்ளத்
தாங்கிநின்றமூலமொடுகடுப்புரத்தம்
தருவானசீயுடனேமூலக்கிராணி
ஓங்கிநின்றமூலத்திற்சேர்ந்தநோய்கள்
ஓடுமடாகாரமதுமட்டாய்க்கூட்டு
பாங்குடனேபுளிகூட்டுபத்தியமோவில்லை
பாலகனேசிந்தூரங்கூட்டித்தின்னே. (உஅஅ)

சிந்தூரமுன்சொன்னநாகமப்பா
தின்றுவரில்தீராதரோகமுண்டோ
விந்தூருமெலும்புருக்கிரோகந்தீரும்
வித்தகனேதேகமதுபுஷ்டியாகும்
சிந்தூரமுந்நூற்றிற்சுளுவாய்ச்சொன்னேன்
திடமாகவனுபானமறிந்துகொள்ள
செந்தூரில்முருகனைப்போல்நோய்கள்நீங்கும்
திறமானவயித்தியபூரணமிதாமே. (உஅகூ)

தூதுளைலேகியம்.

பூரணமாமின்னமொருலேகியங்கேள்
புலத்தியனேநானூற்றிற்புனிதமாகக்
காரணமாமுருங்கைப்பூதூதுளையின்பூவும்
கணக்காகவகைக்குநாற்பலம்நிறுத்துத்
தாரணியிற்சதாவேரிக்கிழங்குமூன்றும்
தருவானநன்னாரிபலமிரண்டும்
காரணமாய்நிலப்பனையுநெருஞ்சிமுள்ளும்
கருவாகவகைக்குமொருபலமாய்க்கூட்டே. (உகூ0)

கூட்டியேசூரணித்துப்பசுவின்பால்தான்
குறுணியிலேபோட்டுமேகுழம்புபோலே
காட்டியேவற்றிவரும்போதுமைந்தா
கருவானசீனிபலம்பன்னிரண்டும்போட்டு
நாட்டியேகிளரயிலேபசுவின்நெய்தான்
நலமாகப்படியரைதேனுழக்குவிட்டுக்
கேட்டியாய்லேகியம்போற்கிண்டிவாங்கிக்
கிருபையுள்ளகணபதிக்குப்பூசைசெய்யே. (உகூக)

செய்துமேதான்றிக்காயளவுகொள்ளத்
தீருகிறவியாதிதனைத்திறமாய்க்கேளு
எய்துகின்றபிரமியமூமேகநோயும்
இன்பமுள்ளவெலும்புருக்கிப்பிரமேகந்தான்

பெய்துமேமண்டலத்திற்றீர்ந்துதாது
பெலமுண்டாமிந்திரியபெலமுண்டாகும்
செய்துமேலேகியத்தில்மேகநோய்கள்
தீருமடாபத்தியமோ இல்லைபாரே. (உகூஉ)

சாதிக்காய் ரசாயனம்.

இல்லையென்றுமயங்காதேயின்னமொன்று
என்மகனேசாதிக்காய்சாதிபத்திரி
வல்லையென்றகிராம்புசிறுநாகப்பூவும்
வகையான அமுக்கிராபறங்கிப்பட்டை
கொல்லையென்றசந்தனமுங்கொடிவேலிவேரும்
கூர்மையுடன்பச்சைக்கர்ப்பூரமொன்றாய்ச்
சல்லையென்றுநினையாதேகாற்பலமாய்வாங்கித்
தான்பொடித்துச்சரியெடைதான்சீனிகூட்டே. ()

திப்பிலிரசாயனம்.

கூட்டியேபசுநெய்யால்பிசைந்துமைந்தா
குணமானபீங்கானில்வைத்துக்கொண்டு
நாட்டியேபாக்களவுவிரண்டுவேளை
நன்மையுடனிருபதுநாள்கொள்ளும்போது
தாட்டிகமாய்மேகநோய்தீருமப்பா
தயவாகவின்னமொருரசாயனங்கேள்
காட்டுகிறேன்திப்பிலியும்பலம்பத்தப்பா
கருவானமிளகுசுக்குபலந்தானஞ்சே. (உகூச)

பலமொன்றுஇருசீரமிரண்டுஓமம்
பாங்கான அரத்னீதரெண்டுதிரிபலாதி
நலமானலவங்கமுடன்லவங்கப்பத்திரி
நன்மையுள்ளதாளிசபத்திரியுங்கூட்டிப்
பிலமானகொடிவேலியேலமப்பா
பேசியதோர்பதினைந்தும்பலமொவ்வொன்று
தலமாகவிளவறுப்பாய்ச்சூரணித்துத்
தண்மையுடனந்தெடைக்குச்சீனிசேரே. (உகூரு)

சேர்த்துமேதேன்விட்டுப்பிசைந்துமைந்தா
திறமானபீங்கானிற்பதனம்பண்ணிக்
காத்துமேதாம்பிரசிந்தூரங்கூட்டிக்
கனமாகவுண்டிடவேகாசரோகம்
போத்துமேமந்தாரகாசங்கூடப்
புலத்தியனேகயமிருமலிளைப்புகக்கல்
ஆத்துமேசேத்மமதுதொண்ணூற்றாறும்
அகலுமடாமண்டலத்திலறிந்துபாரே. (உகூசு)

சுக்குசூரணம்.

பாரேநீயின்னமொருசூட்சங்கேளு
பாங்கானசுக்கதனைச்சூரணித்துக்
காரேநீகரும்புசர்க்கரையவ்வீதம்
கலந்துமேயிருவேளையேழுநாளும்
சேரேநீதின்றுவரவாய்வுதீரும்
திரமானதீபனமுமுண்டாமப்பா
ஊரெல்லாமருந்திருக்கக்காட்டிற்போய்நீ
உலுத்தரைப்போலலையாதேஉண்மைகேளே. (உகூஎ)

திப்பிலி, மிளகு சூரணம்.

உண்மையென்றதிப்பிலியைச்சூரணித்து
உவமையுடன்தேனிலேகுழைத்துத்தின்ன
வண்மையுடன்புகைந்திருமுஞ்சேத்துமநோய்தான்
மாறியேபசியுண்டாமருவிப்பாரு
நன்மையுடன்மிளகதனைச்சூரணித்து
நலமானபசுநெய்யிற்சீனிகூட்டித்
தண்மையுடன்மூன்றுநாளந்திசந்தி
தானருந்தச்சளியிருமல்தவறிப்போமே. (உகூஅ)

திரிகடுகு சூரணம்.

தவறிப்போம்திரிகடுகுசூரணத்தால்
தருவானமந்தமுடன்கழிச்சல்தீரும்
தவறிப்போங்தேனிலேநீகொண்டாயானல்
தருகாதுசந்நிசீதளங்கள்தானும்
தவறிப்போம்பனைவெல்லங்கூட்டியுண்ணத்
தண்மையுள்ளவயிற்றுநோய்தானேதீரும்
தவறிப்போஞ்சகலநோயதனைக்கண்டால்
தருகாதுவயித்தியன்பேர்சொல்லுமுன்னே. (உ௯௯)

முப்பூவுக்கு விபரம்.

முன்னமேமுப்பூவைமறைத்ததாலே
முழுதுமதுவகைவிபரஞ்சொல்லக்கேளு
நன்னயமாய்நாதமென்றால்பூமிநாதம்
நாதாக்கள்பூசித்துவாழ்ந்தநாதம்
அன்னைஉமைநாதமதிற்கொஞ்சம்வாங்கி
அன்பனேபிருதிவியின்அண்டஞ்சேர்த்துச்
சொன்னமொழிதவறுமல்அப்பினுட்சுவையும்
சேர்த்தரைக்கத்தாளிச்சார்சுருக்குநிரம்ப (௩00)

நிரம்பவென்றாலரைநாழியரைத்தால்போதும்
நிலவரமாய்ச்சிப்பிசாம்பலுக்குள்வைத்து
ஐம்பதெருபுடம்போடச்சதாசிவனுமங்கே
அடங்கிவெள்ளைநிறமாகிக்குருவுமாவார்
செம்பொனென்றவாதமுடன்வயித்தியமுஞ்சித்தி
திறமானவாசிசித்திகுளிகைசித்தி
சம்புசதாசிவனுடையபாதஞ்சித்தி
தயாபரியாந்தாயினிடநாதத்தாட்டே. (௩0௧)

இரசவாதத்திற்கு வாலைரச சிந்தூரம்.

ஆட்டமென்றால்குருவில்லாதாட்டமுண்டோ
அப்பனேவாலைரசசிந்தூரத்தில்
காட்டமென்றபலநிறுத்துப்பாதிகெந்தி
நன்மையுடன்பேய்ச்சேம்பின்கிழங்குச்சாற்றில்
ஆட்டுவாய்நாள்மூன்றுபின்புலர்த்தி
அப்பனேகுப்பியிலேமூன்றுசாமம்
வாட்டமில்லாதேயெரித்துமுன்போற்கெந்தி
மாட்டியேயைந்துவிசையெரித்துவாங்கே. (௩0௨)

முன்சொன்ன வைப்புக்கு விபரமும் வேடியுப்பு சுத்தி விபரமும்.

வாங்கினாற்குப்பியடியிருக்குமப்பா
மைந்தனேசிந்தூரமேலேறுது
தூங்கியேயலையாதேசொல்லக்கேளு
துரையாகச்செலவுக்குக்கிட்டுமெப்பா
ஓங்கியேசகலநோய்தீருமப்பா
உத்தமனேமுன்சொன்னசீடனுக்குத்
தாங்கியேவாழையிடகிழங்குச்சாற்றில்
தான்காய்ச்சிவெடியுப்புகூட்டநன்றே. (௩0௩)

சவ்வீரவைப்பு.

நன்றப்பாசவ்வீரவைப்புதானும்
நலமானவெடியுப்புநாலுபங்கு
நின்றப்பாரசமும்விட்டிரண்டுபங்கு
நிலையானநவச்சாரமிரண்டுபங்கு
கன்றப்பாசீனமோர்பங்குங்கூட்டிக்
கருவாகத்தான்பொடித்துக்கலயத்திட்டு
முன்றப்பாகெந்தகம்போற்றீநீர்வாங்கி
மூட்டியரைசவ்வீரவைப்புநன்றாம். (௩0௪)

முப்பூவின்மரபு.

வைப்பானதிறவுகோலிது தானப்பா
மார்க்கமுடன்சித்தாதிசெய்யும்வித்தை
செப்பாதசதுர்முகத்தோன்றிருவகமுஞ்சொன்னேன்
திறமானசீடனுக்குஉயிருஞ்சொன்னேன்
வைப்பானவைப்புக்குப்பாகஞ்சொன்னேன்
மகத்தானமுப்பூவின்மரப்பைச்சொல்வேன்
அப்பானவப்பினுப்புகல்லுப்புத்தான்
அப்பனேநாதமென்றூற்பூநீராமே. (௩0௫)

உப்பின்பெயர்.

பூநீராஞ்சத்தியுப்புகல்லுப்பின்பேர்
புலத்தியனேசிவமென்பார்பரத்தைக்கேளு
பூநீராமதற்கடியிலண்டம்போலப்
பூமியிலேதானிருக்குந்தெரிந்திடாதோ
பூநீராமண்டமென்றூற்சுக்கான்கல்லு
புலத்தியனேபேருலகம்புகழுங்கல்லு
பூநீராங்கல்லுப்பாஞ்சுண்ணும்புக்கல்லு
பூட்டிவிட்டுநாக்கறுப்பேனென்றசொல்லே. (௩0௬)

சொல்லப்பாபரத்தினிடஉப்பிதப்பா
சுகமாகமூன்றுமொன்றுய்ச்சுண்ணமானல்
அல்லப்பாஆதாரந்தன்னில்மூன்று
அப்பனேயதைச்சேர்க்கிலுயிருண்டாகும்
வல்லென்றபெரியோரும்யோகியோரும்
வாழ்ந்திருப்பாரிதைத்தானேபூசைசெய்து
கல்லென்றமலைக்கருகேயிருப்பார்சொன்னல்
காணரிதுகண்டவர்கள்கோடிக்கொன்றே. (௩0௭)

வெள்ளைக்குச்சூரணம்.

ஒன்றுகவின்னமொருசூரணங்கேள்
உத்தமனேசந்தனமும் அகிற்கட்டையேலம்
நன்றுகலவங்கப்பட்டைகிராம்புசோம்பு
நன்மையாமதிமதுரம்கார்போகிவித்து
சென்றதோர்வெட்பாலைதேற்றான்வித்து
திறமான அறுகம்வேர்சிற்றாமுட்டி
பன்றுனவேருடனேபன்னிரண்டும்
பாலகனேவகைக்கு அரைப்பலமாய்வாங்கே. (௩0அ)

வாங்கியேவெயிலுலர்த்திச்சூரணித்து
வண்மையுடனவ்வெடைக்குக்கற்கண்டிட்டு
தேங்கியேவெருகடிதானந்திசந்தி
திறமானபசுவெண்ணெய்மண்டலமேகொள்ள
ஓங்கியேஓடுகின்றவெள்ளைதீரும்
உத்தமனேநீரெரிப்புமுடனேதீரும்
பாங்குடனேபத்தியமோகாரமாகா
பரிவானபுலத்தியனேபாகமாமே. (௩0கூ)

இஞ்சிச்சூரணம்.

பாகமாமின்னமொருசூரணங்கேள்
பாங்கானஇஞ்சிபலம்பத்துவாங்கி
சோகமாய்த்தோல்போக்கிவில்லையாக்கிச்
சுத்தமாய்ப்பொன்வறுப்பாய்ப்பசுநெய்யாலே
ஏகமாய்ப்பொடிசெய்துவைத்துக்கொண்டு
ஏலமொடுதிரிகடுகுகிராம்புமோமம்
தாகமாய்வாலுழுவைசாதிக்காயும்
தருவானைத்திப்பிலிசீரகமுமாமே. (௩க0)

ஆமப்பா அதிமதுரங்குரோசானிஓமம்
அமுக்கிராகசகசாலவங்கபத்திரி
நாமப்பாமோடியுடன்கொத்துமல்லி
நலமானபேரீச்சுமுந்திரிகையொக்கத்

தாமப்பாவகைக்குக்காற்பலமேவாங்கித்
தருவாகவிளவறுப்பாய்ச்சூர்ணஞ்செய்து
ஓமப்பாசீனிபலம்பத்துங்கூட்டி
உத்தமனேமூன்றுமொன்ருய்விரவிக்கொள்ளே. ()

விரவியேவெருகடிதானந்திசந்தி
விபாமுடன்மண்டலமேகொண்டாயானல்
பாவியேமந்தமுடனக்கினியாமந்தம்
பாங்கானஊஷ்ணத்தின்வாய்வுங்கூடக்
கரவியேபித்தமோடுபித்தவாயுவும்
காணுதேயோடுமடாதீபனமுமுண்டாம்
பிரவியென்றவாதமெல்லாமொடுங்கிநல்ல
பிலமுண்டாமின்னமொருவிவரங்கேளே. (௲௧௨)

திராட்சைச்சூரணம்.

கேளேநீமுந்திரிகைபேரீச்சோடு
கிருபையுள்ளதக்கோலமதுரமுத்தம்
வாளேநீகொத்துமல்லிஅல்லிக்கிழங்கும்
வகையானசாதிக்காய்லவங்கஞ்சுக்கு
ஆளேநீநன்ருரிலவங்கப்பத்திரி
அப்பனேதாளிசந்திப்பிலிவிலாமிச்சு
பாளேநீசிறுநாவற்பூலவங்கப்பட்டை
பாங்கானசந்தனமுமூங்கிலுப்பே. (௲௧௩)

உப்பானநெல்லிவிதைநெற்பொறியுமொக்க
உத்தமனேவகைக்குஒருபலமாய்வாங்கிச்
செப்பாமல்சூரணித்துச்சமனெடைதான்சீனிச்
சேர்த்துமேவெருகடிதானந்திசந்தி
ஒப்பாகக்காலேசும்மாமண்டலந்தான்
உத்தமனேபசுநெய்யில்மாலையுண்ணத்
தப்பாதபத்தியமோவில்லேயப்பா
தருவானவியாதிதனேச்சாற்றக்கேளே. (௲௧௪)

சாற்றக்கேள்பயித்தியமும்பாண்டுசோகை
தருவானபித்தமோடிரத்தபித்தம்
போற்றியேகாமாலைதாபசுரம்வாங்கிப்
போகுமடாசயித்தியமுந்தீர்ந்துபோகும்
வாழ்த்தக்கேளின்னமொருசூரணந்தான்
மைந்தனேதிரிகடுகுமோடிகோஷ்டம்
தோற்றியதோர்நெல்லிக்காய்சந்தனமுமாஞ்சில்
சுகமானதாளிசமும்கிராம்புசீரகமே. (௫௰௫)

மந்தவாயுவுக்குச் சூரணம்.

சீரகமுமேலமொடுபச்சைப்பூரந்
திரமாகச்சூரணித்துச்சீனிகூட்டிக்
காரணமாய்வெருகடிதானந்திசந்தி
கனமாகஉண்டிடவேபித்தமெல்லாம்
போணியாய்நின்றதொருஇரத்தபித்தம்
பிலமாகவெரித்தபித்தமரோசகம்வாந்தி
தாரணியில்நில்லாதுபத்தியமோவில்லை
தருவாகஇருபதுநாள்கொண்டுதேறே. (௫௰௬)

வாந்திபேதிக்குச் சூரணம்.

தேறவேயின்னமொருசூரணங்கேள்
திறமானஎட்டியிடவடவேர்வாங்கிக்
கூறவேமேற்றோலைப்பழச்சாற்றுலாட்டிக்
குணமாகரவியுலர்த்திச்சூர்ணஞ்செய்து
மீறவேபதனமதாய்வைத்துக்கொண்டு
மேன்மையுடன்புரமெரித்தார்தும்பைரண்டும்
ஏறவேகஷாயமிட்டுச்சூரணந்தான்
இன்பமுடன்கடலையெடையிட்டுக்கொள்ளே. (௫௰௭)
கொள்ளவேயுகபேதிதீருமப்பா
குணமாகமீறியதுபேதியானல்
விள்ளவேமறுபடியுங்கஷாயத்திற்றுக்கு
மீறுகிறவாந்தியொடுபேதிநிற்கும்

உள்ளவேகாதடைப்புசந்நிவேர்வை
உத்தமனேநிற்குமூன்றுவிசைதானீய
வள்ளவேவறுத்தரிசிகஞ்சிகொள்ளு
மைந்தனேஊழியதுபறக்கும்பாரே. (௫௧௮)

பறங்கிப்பட்டை சூரணம்.

பாரப்பர்இன்னமொருசூரணங்கேள்
பறங்கியிடபட்டையுடன்அமுக்கராவும்
நேரப்பாசெங்கத்தாரிவெம்பாடம்பட்டை
நினைவாகத்திப்பிலியுஞ்சித்திரமூலம்
சாரப்பாசமனெடையாய்ச்சூரணித்துச்
சமர்த்தாகஆவின்பால்விட்டுவைத்துக்
காரப்பாபசுநெய்யில்வெருகடிதானுண்ணக்
காணுதுசூலைப்புண்உப்பாகாதே. (௫௧௯)

கருஞ்சூரை சூரணம்.

உப்பாகாதின்னமொருசூரணங்கேள்
ளுத்தமனேகருஞ்சூரைசித்திரமூலம்
செப்பாதவெள்ளறுகுமிளகரணைமிளகும்
சிறுகுறிஞ்சாணுகாசக்கிழங்குகருவேல்
ஒப்பானஊழலாற்றிவேரின்பட்டை
ஒன்பதுமேசரியெடையாய்ச்சூரணித்து
அப்பானமுன்போலேபாலிற்பிட்டாய்
அவித்திடவேசுத்தியதாம்பின்புகேளே. (௫௨0)

காட்டுக்கரணை சூரணம்.

கேளேநீவெருகடிதானிரண்டுவேளை
கிருபையுடன்பசுநெய்யில்தீருநோய்கள்
பாளேகேடிவிஷமுங்குஷ்டரோகம்
பாங்கானகருங்கரப்பான்கிரந்திசூலை

ஆளேநீபுண்களெல்லாந்திருமப்பா
அப்பனேவறுத்தஉப்புந்துவரையாகும்
வாளேநீயின்னமொருசூரணங்கேள்
மைந்தனேபேய்க்கரணைகழஞ்சுபதினாறே. ()

பதியானசுக்குமேகழஞ்சுநாலு
பாலகனேகொடிவேலிகழஞ்சிரண்டு
விதியானமிளகிரண்டுசூரணித்து
மீறுமல்மூன்றுசுண்டைக்காய்வீதந்தான்
சதியாகவேழுநாளந்திசந்தி
சாதகமாயெள்ளெண்ணெய்க்குழைத்துத்தின்னக்
குதியானமூலமுளைமூலரோகம்
குணமாகும்பத்தியமும்புளியாகாதே. (௩௨௨)

சீந்திற்சூரணம்.

ஆகாதுஇன்னமொருசூரணங்கேள்
அப்பனேசீந்திலிடசூரணத்தை
வாகானசுத்தகங்கைதன்னிற்சுத்தி
மைந்தனேமூவேழுதரமேசெய்து
பாகாகஉலர்த்தியதைப்பாலிற்பிசரிப்
பாலகனேகாயவைத்துப்பலம்பத்தப்பா
நோராகக்கரிசாலைசூரணங்கூட்டி
நினைவாகப்பூநாகப்பூச்சிதன்னை. (௩௨௩)

தன்னையேபாலிடமண்ணெல்லாங்கக்கும்
தருவாகப்பின்புலர்த்திச்சூரணித்து
ஒண்ணுமேஆப்பால்மூன்றெடையுங்கூட்டி
உத்தமனேமூன்றுவிசைவடித்துக்கட்டி
நிண்ணயமாய்வெருகடிதான்நெய்யிற்கொள்ள
நிலையாதமேகமொடுகவுசையீளை
சொன்னமேகாசமெட்டுஇளைப்புகயரோகம்
தொலையாதகிரிச்சரமும்அண்டவாய்வே. (௩௨௪)

வாயுவென்றவாதமொடுவறட்சிபித்தம்
வகையாகத்தீருமடாதேனிற்கொள்ள
தோயுவென்றகன்மநோய்நாசிப்புண்கள்
தொலையாதபீநசமுந்தொலைந்துபோகும்
பாயுமென்றசர்க்கரையிற்கொண்டால்மைந்தா
பாங்கானமயிர்வெட்டுப்புழுவெட்டோடும்
காயுவென்றகால்பலங்கண்தெளிவுமுண்டாங்
கருவாகப்புளிபுகையுந்தவிர்க்கச்சொல்லே. (௩௨௫)

வாதசுரகஷாயம்-கஞ்சி.

சொல்லவேகஷாயமொன்றுவிபரமாய்க்கேள்
சுகமானபர்ப்படகஞ்சீந்தில்முத்தம்
அல்லவேமலைதாங்கிகண்டங்கத்திரி
அப்பனேசெம்முள்ளிமுன்னைசுக்கு
நல்லவேவகைக்கிரண்டுகழஞ்சுகூட்டி
நாழிநீரெட்டொன்றாய்மூன்றுநாளும்
வெல்லவேயிருவேளைகுடிக்கும்போது
மீண்டுவரும்வாதசுரம்விட்டுப்போமே. (௩௨௬)

கஞ்சி.

விட்டுப்போம்வாதசுரந்தனக்குக்கேளு
விதமானசுக்குமுள்ளிகண்டங்கத்திரி
வெட்டிப்போய்பெருமல்லிசிற்றுமல்லி
வேருடனேவகைவீதங்கழஞ்சிரண்டு
கட்டிப்போம்நானாழிநீர்நாழியாகக்
காய்ச்சிவடித்ததிலுழக்குவறுத்தரிசியிட்டுக்
கெட்டியில்லாக்கஞ்சிபோல்காய்ச்சிக்கொள்ளக்
கெடியானவாதசுரம்கிளரிப்போமே. (௩௨௭)

பித்தசுரகஷாயம் - கஞ்சி.

கிளரிப்போக்தூதுவளைவேரினோடு
கிருபையுள்ளசிந்தில்சுக்குமதுரமாஞ்சில்
அளரிப்போம்பயறுமுத்தஞ்சிற்றுமுட்டி
அப்பனேமுன்போலேகஷாயங்கொள்ள
உளரிப்போம்பித்தசுரங்கஞ்சிகேளு
உத்தமனேவில்வவேர்மதுரஞ்சுக்கு
முளரிப்போமிலுப்பைவேர்சிற்றுமுட்டி
முன்போலக்கஞ்சிகொள்ளமுறைமையாமே. (௩௨அ)

சேத்மசுரகஷாயம் - கஞ்சி.

முறைமையென்றதூதுவளைகண்டங்கத்திரி
முயன்றதொருசெம்முள்ளிசுண்டைவேரும்
வறுமையென்றசுக்குடனேகஷாயம்பண்ணி
வகையானதிப்பிலித்தூள்போட்டருந்த
அருமையென்றசேத்துமத்தின்சுரமுந்தீரும்
அப்பனேகஞ்சிவகைபாதிரியும்வில்வம்
உரிமையென்றபெருங்குமிழ்வேரின்முன்போல்
உத்தமனேகஞ்சியிடச்சேத்மசுரம்போமே. (௩௨௬)

குளிர், விஷ, பழையசுரம் - வாயுவயிற்றுவலி கஷாயம்.

போமப்பாசீரகமுங்குறுந்தொட்டிவேரும்
புண்ணியனேகஷாயமிடக்குளிர்சுரங்கள்
ஆமப்பாவிஷசுரமும்பழையசுரமும்போம்
அப்பனேவெள்ளுள்ளிவசம்புமஞ்சள்
தாமப்பாகொடிவேலியிந்துப்போடு
சாறணைவேர்முருங்கைவேர்கஷாயங்கொள்ளப்
போமப்பாவாயுவிடவயிற்றுவலிதீரும்
புலத்தியனேயின்னமொருகஷாயங்கேளே. (௩௩0)

சந்நி, சூதகவாயு, கர்ப்பஸ்திரீ வெப்புக்குக் கஷாயம்.

கியாழமென்றதூதுவளைகண்டங்கத்திரி
கிருபையுடன்முக்காவேளைசுக்குமொன்றுய்க்
கியாழமிட்டுத்திப்பிலித்தூள்தூவிக்கொள்ளக்
கிருபையுள்ளசந்நியிடசூதகத்தின்
கியாழமதில்வாய்வுடனேவலிப்புத்தீரும்
கிருபையுடன்நெல்லியீர்க்குகருவேம்பீர்க்கு
கியாழமுடனறுகம்வேர்பிடிதானென்று
கிருபையுடன்மூன்றறுப்பாய்அரிந்துபோடே. ()

போட்டின்னமிளகுகொஞ்சமுடைத்துப்போட்டுப்
புண்ணியனேதான்வறுத்துஇறக்கிக்கொண்டு
நாட்டியேஅறுகம்வேர்க்கணுவைப்போக்கி
நன்மையுடனிளவறுப்பாய்வறுத்துத்தண்ணீர்
காட்டிடுவாய்ஒருபடிநீர்விட்டுப்பின்பு
கணக்காகக்கிராம்புஐந்துவறுத்துப்போட்டு
தாட்டிகமாயெட்டொன்றுயிறுத்துக்கொண்டு
தருவானபாக்களவுவெண்ணெய்போடே. (௩௩௨)

மூலக்கஷாயம் - இரசவேக்காட்டுக்கஷாயம்.

வெண்ணெயிட்டுஉள்ளுக்குக்கொடுத்தாயானல்
வியாதியதுதீருகிறவிதந்தான்கேளு
தண்மையுடன்கர்ப்பஸ்திரீசூடுகாங்கை
சலக்கட்டுமலக்கட்டுந்தீருமப்பா
வண்மையுடன்விலாமிச்சைலவங்கப்பட்டை
மாமஞ்சள்கஷாயமிடமூலந்தீரும்
நண்ணயமாய்க்கருவேல்வெள்வேலம்பட்டை
நலமானதுளசிவேர்எருக்கம்வேர்தான். (௩௩௩)

தானென்றுய்க்கஷாயமிட்டுக்கொப்பளிக்கத்
தருவானரசத்தினிடவேக்காடாறும்
நானன்றுய்ச்சோதித்துப்பார்த்தேனப்பா
நாச்சூலைவாய்ச்சூலையிரண்டுந்தீரும்

தானன்றுய்ச்செய்து இதைக்கொப்பளிக்கத்
தருவான தந்தமெல்லாமிறுகுமப்பா
வானென்றகெந்தகத்தைப்பசுவெண்ணெயிட்டு
மைந்தனே தானரைத்துத் துணியிற்பூசே. (௲௲௪)

பீனிசத்தயிலம்.

பூசியேயுருட்டியதைக்கதிரில்கோத்துப்
புலத்தியனே தீக்கொளுத்தியெரிக்கும்போது
ஆசியேயதனடியிற்பீங்கான்வைக்க
அப்பனேசுடர்த்தயிலமிறங்கும்பாரு
தேசிகனேபதனமதாய்வைத்துக்கொண்டு
திறமாகமூன்று துளிமூக்கி லூற்றத்
தூஷணத்தால்மூக்கறுக்கவந்தநோய்தான்
துலைந்துவிடும்பத்துநாளூற் றும்போதே. (௲௲௫)

ஊற்றுதேபோனுக்கால்நோய்தீராது
உத்தமனேயெளியோரைப்பெரியோர் தன்னை
தாத்தியேகற்புடையமங்கையோரைத்
தருவாகமொக்கைகுலைத்த தினுலப்பா
தேத்தியதோராசர்களைப்பழித்தாரானல்
சீக்கிரத்தில்மூக்கறுத்துக்கா துங்கொய்வார்
பார்த்திருந்துயோகிகளைப்பழித்ததோஷம்
பாவமதால்மூக்கறுக்கும்பழவினையாம்பாரே. ()

பீநசத்துக்கு நசியம்.

பழவினை தான்தீராதுபாவிமார்க்குப்
பரிவானபுலத்தியனேமருந்தீயாதே
ஊழ்வினையா லூடாடிக்கொல்லுமட்டும்
உலுத்தருக்குத்தீராதுஉறுதிசொன்னேன்
கள்ளவினை தானகற்றிப்பெரியோருக்குக்
கால்பிடித்துஏவல்செய்துகாத்திருந்தால்
பழவினையுந்தானகலுமருந்துகேளு
பாங்கானநிம்பவெண்ணெய்படிகால்வாங்கே. ()

வாங்கியதில்திரிகடுகுதான்றிக்காயும்
மைந்தனேமிளகொடுகஸ்தூரிமஞ்சள்
தாங்கிநின்றகார்கோலும்வேப்பமுத்தும்
தருவாகக்கழஞ்சுமரைபொடித்துப்போட்டுத்
தேங்கிநின்றரவிப்புடந்தானேமூநாள்வை
திரும்பவதைவாசலிலேவைத்துமைந்தா
ஓங்கிநின்றஇரவிதனைநமஸ்கரித்து
உத்தமனேமூன்றுதுளிமூக்கிலூற்றே. (௩௩அ)

மூக்கிலேமூன்றுநாள்விட்டாயானால்
முழுவினையால்வந்ததொருபீநசமேதீரும்
மூக்கிலேசாரணையின்கிழங்கிந்துப்பு
மிளகுடனேசீனிவகைகழஞ்சிரண்டு
மூக்கிலேமுலைப்பாலாலரைத்துநெய்யில்
மூன்றுநாள்ரவியிலிட்டுமூக்கில்வார்க்க
மூக்கிலேநீர்ப்பாய்ச்சல்பீநசமேதீரும்
முறையாகஇன்னமொருதிரிதான்கேளே (௩௩௯)

பீநசத்துக்குத்திரி.

திரியென்னபூவரசும்வெள்ளெருக்கின்வேரும்
திறமானமலைதாங்கிகஸ்தூரிமஞ்சள்
உரமானசிறுநாகம்வெடியுப்புபுழுகும்
உத்தமனேபுகையிலையின்சாற்றாலாட்டி
திறமாகச்சீலையிலேபுரட்டிக்கொண்டு
தீர்க்கமாயனற்கொளுத்திநாசிக்கேற்றப்
பரமானபீநசமும்புழுவுங்கூடப்
பாலகனேதீர்ந்துவிடும்பாகங்கேளே. (௩௪0)

சிரசுநோய் பீநசம் சிரசூலைக்குத் தயிலம்.

கேளப்பாநெல்லிக்காய்ச்சாறுநாழி
கிருபையுடன்கரிசாலைச்சாறுநாழி
வாளப்பாபசும்பாலெள்ளெண்ணெய்நாழி
அதிமதுரம்பலமரைத்துக்கலக்கிக்காய்ச்சி

வேளப்பாமுழ்குசிரசுள்ளநோய்கள்
விலகுமடாபீநசமுஞ்சிரசிற்சூடும்
ஏளப்பாதீருங்கண்தெளிவுமாகும்
இன்பமுடனின்னமொருதயிலங்கேளே. (௲௪௧)

கபாலசூலைக்கு சவுரித்தயிலம்.

கேளப்பாசவுரியிடபழச்சாறுநாழி
இருபையுடன்பொடுதலையின்சாறுநாழி
வேளப்பாபசுவினிடபால்தானுழி
விதமானமிளகுபலம்நல்லெண்ணெய்நாழி
தாளப்பாகலக்கியதைமெழுகுபோலே
தான்வடித்தஎண்ணெய்தனைமூழ்கும்போது
கோளப்பாவொன்றுமில்லைமிளகுநீரும்
கூட்டியேசாதமுண்ணுபோசம்நீக்கே. (௲௪௨)

நீக்கவேதீருகிறவியாதிகேளு
நிலையானகபாலவலிகபாலக்குற்று
போக்குமேபீநசங்கள்மண்டைச்சூலை
பொல்லாதநேத்திரத்தின்மாசுதீரும்
வாக்குமேநீர்க்கடுப்புமேகச்சூடும்
வாங்குமடாதயிலமதுவாரந்தோறும்
தாக்குமேதவறுமல்மூழ்கிவாநீ
தண்மையுள்ளநோய்களெலாந்தவறிப்போமே. ()

சிவயோகிகற்பம்.

தவறிப்போஞ்சிவயோகஞ்செய்வோர்க்கெல்லாம்
தண்மையுள்ளஎள்ளெண்ணெய்நீக்கிமைந்தா
சவரிச்சாறுபொடுதலைச்சாறுபசுவின்பாலும்
சமன்கூட்டிமிளகிட்டுக்காய்ச்சிமூழ்கத்
தவறிப்போமுன்சொன்னவியாதிதீரும்
தண்மையுறுசிவயோகங்கேளுமைந்தா
உவமானஞ்சொல்லுகிறேன்மூலவன்னி
அப்பனேகாந்தியடாசெந்தீதானே. (௲௪௪)

செந்தியென்றஉந்தியிலேமைந்தாகேளு
சிவசிவாகங்கைசிவகங்கையுண்டு
சொந்தமுடனந்தநிலையறிந்துகொண்டு
சுத்தமுள்ளகங்கைதனைச்சுகமாய்நீயும்
அந்திசந்திகொண்டதினிலையாகேளு
ஆதாரமானசிவமூலாதாரம்
எந்தவிதமென்றறிந்துசொல்லப்போறேன்
ஏகநிராமயமானமூலந்தானே. (சஙரு)

அகார உகார தீட்சை பூரணமகிமை.

தானென்றவாதாரமூலம்பார்க்கச்
சாதகத்தைச்சொல்லுகிறேன்நன்றாய்க்கேளு
கோனென்றகுருவருளால்அகாரதீட்சை
கொண்டபின்புஉகாரமடாசத்திதீட்சை
வானென்றமவுனமடாமகாரதீட்சை
மார்க்கமுடனுருவறிந்துதீட்சைபெற்றால்
தேனென்றவமுர்தாசகற்பத்தாலே
திடமில்லாக்காயமதுசித்திதானே. (ஙசசு)

தானென்றசித்தியதுயோகமார்க்கம்
தனையறிந்தமூலமடாபிரமஞானம்
வானென்றஞானமடாகேசரியின்தீபம்
மௌனத்தியானதுவுமூலத்தீதான்
ஓனென்றதீயதுதாணுந்தியுந்தி
ஓமுடிந்த ஆவியடாபிராணையந்தான்
தேனென்றநாதமடாசிலம்பினோசை
தீக்கடங்காஓசையைநீசெவியிற்கேளே. (ஙசஎ)

செவியானஆகாசமோசைமைந்தா
தீர்க்கமென்றமூலமதில்ஆவிதன்னால்
தவியாதவாசியடாமேகமாச்சு
சங்கையுள்ளமேகமதுரவியினாவி

குவியாதரவியுடனேமேகஞ்சேர்ந்து
குமுர்தலலிசத்தமதாய்ச்சலமுமாச்சு
அவியாதமேற்கசலந்தன்னுல்மைந்தா
வண்டசராசரங்களெல்லாமுயிருண்டாச்சே. (௫௪அ)

உண்டானசேதியப்பாபுலத்தியாகேள்
உரைத்துவிட்டேன்பூரணமாய்நானூற்றுள்ளே
கண்டாயோபூரணமும்நான்குநூற்றில்
கண்டெடுத்துச்சொன்னபொருளிந்தநூல்தான்
விண்டனடா அதில்சொன்னகருக்களெல்லாம்
வேதாந்தயோகியர்க்குவிளக்கமாகும்
பண்டுபோலிதிற்கருக்கள்தெளிவாய்ச்சொன்னேன்
பதனமப்பாஇன்னமொருதயிலங்கேளே. (௫௪௯)

கந்தகதயிலம்.

தயிலங்கேள்கந்தகமும்வெடியுப்புசிலையும்
தருவாகப்பலமொன்றுபொடிக்கும்போது
அயிலமென்றநவாச்சாரம்வீரந்தானும்
அப்பனேயரைக்கழஞ்சுகூடப்போட்டு
ஒயிலாகப்பலநாலுபசுவின்வெண்ணெய்
உத்தமனேகல்வத்தில்விட்டுஆட்டித்
தயிலமப்பாமுன்போல்சுடர்த்தயிலம்வாங்கித்
தருவாகப்பீங்கானிற்பதனம்பண்ணே. (௫௫0)

பண்ணியேபணவெடைதானந்திசந்தி
பத்துநாள்சர்க்கரையிற்கொள்ளும்போது
உண்ணவேபத்தியமோஇல்லைகண்டாய்
உத்தமனேதீருகிறவியாதிகேளு
நண்ணவேகுஷ்டசொறிவிரணம்வெள்ளை
நலமானகருமேகம்வாதவாய்வு
திண்ணவேக்ஷயரோகங்குன்மங்கூடத்
தீருமடாஇன்னமொருசெய்திகேளே (௫௫௧)

மூதண்டகஷாயம்.

செய்தியென்னசூடுகொண்டால்மருந்தினாலே
தீருதற்குஅறுகம்வேர்பலம்பத்தப்பா
நைய்துமேஅதிமதுரங்கூகைநீறும்
நலமானமாதுளம்பூமிளகினோடு
எய்துமேபலமரைதான்கூடப்போட்டும்
என்மகனேஅறுபடிநீர்எட்டொன்றாக்கிக்
கொய்துமேகாற்படிநீர்பாக்களவுவெண்ணெய்
கூட்டியேமூன்றுநாள்வாங்கிக்கொள்ளே. (௩௫௨)

சந்நிக்குத்தயிலம்

கொள்ளவேவீறுடனேகடுப்புதீரும்
குணமானசந்நியிடதயிலங்கேளு
விள்ளவேமாவிலிங்கம்புனல்முருங்கை
விளாவேர்நொச்சிவேர்எருக்கம்வேருங்
கள்ளவேசென்னகரைதாமடக்கிக்
கருவாழைப்பட்டைபலமாறோடொக்க
வள்ளலேபலமிரண்டுமயிர்ப்பீலிதானும்
வண்மையுடன்எட்டிகனிகுறுணியாமே. (௩௫௩)

குறுணியாமித்தனையுமிடித்துப்பாண்டங்
கூட்டியேவேப்பெண்ணெய்புங்கினெண்ணெய்
தருணமாயெள்ளெண்ணெய்படியரைத்தான்
தயவாகத்தான்பிசரிமேலேமூடி
அருணமாய்ச்சீலைமண்வலுவாய்ச்செய்து
அப்பனேஅடியிலேதமர்தான்போட்டு
வருணமாய்க்குழிவெட்டிப்பல்லாவைத்து
மைந்தனேபல்லாவாய்ப்பானைத்தூரே. (௩௫௪)

தூரெல்லாமண்பூசிப்புகைபோகாமல்
துரிதமுடன்சாணமேற்றிச்சுத்திகேளு
பாரெல்லாந்தானெரியும்கனபுடமாய்ப்போடு
பாங்கானகலயத்தில்தயிலம்வீழும்

நோரானகுழித்தயிலம்பதனம்பண்ணி
நினைவாகமேற்பூசிப்பிடிக்கும்போது
பாரெல்லாஞ்சந்நியொடுவலிப்பிசிப்பு
பாங்கானகால்முடக்கம்பாரிசவாயுவே. (௫௫௫)

காதுமந்தத்துக்குச் சிரசில்தேய்க்கத் தயிலம்.

வாயுவெல்லாந்தீருமடாதயிலந்தன்னில்
வண்மையுடன்காதுகேளாமற்போனால்
தேயுவென்றநல்லெண்ணெய்படிகால்தன்னில்
நிலப்பனையுங்காற்பலந்தான்பொடித்துக்காய்ச்சிப்
பாயுவென்றபாதமிரண்டடியிற்றேய்நீ
பதமானபக்குவமாய்மண்டலந்தான்
ஓயுவன்றிநல்லெண்ணெய்படிகாலுக்கு
உத்தமனேகொடிவேலிபலமுங்காலே (௫௫௬)

காதுகுத்திரைச்சலுக்குத் தயிலம்.

காலப்பாமுலைப்பால்விட்டரைத்துக்காய்ச்சிக்
கனமாகத்தினங்கொஞ்சம்சிரசில்தேய்த்து
மேலப்பாமண்டலமிப்படிரண்டெண்ணெய்
மேன்மையுடன்தான்றேய்க்கக்காதுமந்தம்
பால்போலேதீர்ந்துவிடுங்குத்திரைச்சல்
பாங்கானகொள்ளுக்காய்கொஞ்சிவேரும்
நாளப்பாகழஞ்சுமேற்றேலரைத்து
நன்மையுடன்முலைப்பாலால்நன்றாயாட்டே. (௫௫௭)

ஆட்டியேகாற்படிநல்லெண்ணெய்தன்னில்
அன்பாகக்காய்ச்சியதிலஞ்சுதுளிவிட்டுப்
போட்டுமேகாதுக்குள்பஞ்சடைக்கப்
பருவாகக்காதிரைச்சல்காதுகுத்தல்
ஓட்டியேகாதுநோய்தீருமப்பா
உத்தமனேபல்வலிக்குமறுபாகத்தில்
காட்டியேதைவேளையறுகம்புல்லும்
நலமாகத்தட்டியதைக்கசக்கிக்கேளே. (௫௫௮)

அறுகம்வேர்தயிலம்.

கசக்கியேமறுபாகங்கா தில்தானும்
கடுகவேமூன்று துளிவிட்டால்தீரும்
நசுக்கிடவேமுகவா தந்தந்தரோகம்
நன்மையில்லாஒருதலையின்வலியும்போகும்
பசக்கியேயின்னமொருதயிலங்கேளு
பாங்கான அறுகம்வேர்பலம்பத்தப்பா
தொசக்கியேபாண்டத்தில்குறுணிநீர்தான்
சுகமாகஎட்டொன்றாயிறுத்துக்கொள்ளே. (ருடு௬)

இறுத்துநீஎள்ளெண்ணெய்படிதான்கூட்டி
என்மகனேவெட்டிவேர்கார்கோல்வித்து
நெருக்கியேகோஷ்டமுடன்கழஞ்சுவீதம்
நெகவரைத்துத்தயிலமதைநீரில்லாமல்
கருத்தாகக்காய்ச்சியதைமுழுகும்போது
கனகனத்தமண்டையிடிசிரசிற்பித்தம்
வருத்தமுள்ளமஞ்சள்நீரரத்தமூத்திரம்
மகத்தானமேகநோய்தணிந்துபோமே. (ருசு0)

போமப்பாஉஷ்ணங்கள்நேத்திரவாய்வு
பொல்லாதசயித்தியமும்பைத்தியங்கூட
நாமப்பாமூதண்டதயிலங்கண்டால்
நன்மையில்லாநோய்களெல்லாநாடாதப்பா
தாமப்பாபித்தமென்றவியாதிதீரும்
தயவானசந்தனாதிஇதற்கொவ்வாது
வேமப்பாவிஷங்களுக்குக்குழம்புகேளு
வேப்பமுத்தரசங்கெந்திதுருசுவெள்ளை. (ருசுக)

விஷங்களுக்கு குழம்பு.

வெள்ளையொடுமனோசிலையும்பெருங்காயமேழும்
மேன்மையாய்வகைக்குஅரைக்கழஞ்சுகூட்டித்
தள்ளையென்றநேர்வாளஞ்சுத்திசெய்து
தருவாகக்கழஞ்சதுவுமேழாமொன்றாய்

வள்ளலேகல்வத்திட்டெருக்கம்பாலால்
மாட்டியரைஒருசாமமெழுகுபோலே
துள்ளவேபின்புநிம்பநெய்தான்விட்டுத்
துருசாகஒருசாமமரைத்துக்கேளே. (௩௬௨)

அரைத்துமதைக்கொம்புசிமிழ்தன்னில்வைத்து
அப்பனேவிஷந்தீண்டிவந்தபேர்க்குத்
திறத்துடனேபயறளவுவெற்றிலையிலீந்து
தீர்க்கமுடன்கடிவாயிற்கொஞ்சம்பூசப்
பறந்துவிடுஞ்சகலவிஷந்தீருமென்று
பாடினதோர்தென்மொழிநூல்பாகமப்பா
உரைத்துவிட்டேன்பத்தியந்தான்பசுமோராகும்
உத்தமனேசந்நிக்குக்கலிக்கங்கேளே. (௩௬௩)

சந்நிக்குகலிக்கம்.

கேளப்பாமருக்காரைப்பழத்தைநீயும்
கிருபையுடனுடைத்ததனின்விதையிற்றானும்
பாளப்பாபிசினிருக்கும்வாங்கிக்கொள்ளு
பாலகனேவிதையெல்லாம்நீக்கிப்போடு
தாளப்பாபயறுபோலுருட்டிக்கொண்டு
தருவாகவேளையொடுவெள்ளைச்சாரைக்
கேளப்பாவெற்றிலையுங்கசக்கிச்சாற்றிற்
கிருபையுடன்தானரைத்துவிழியிற்போடே. ()

ஆக்கிராணநசியம்.

போடவேசந்நியொடுபிடரிநேர்வும்
பொல்லாதவுடம்புநோய்நீரேற்றங்கள்
சாடவேயோடிப்போமின்னமொன்று
சாற்றுகிறேனாக்கிராணந்தயவாய்க்கேளு
நாடவேகாட்டெருவிலெருக்கம்பாலே
நாலாறுவிசையடித்துக்காயப்போட்டுத்
தேடவேபுடம்போட்டுச்சாம்பல்தன்னைத்
திறமாகநாசியிலேயேற்றுவாயே. (௩௬௫)

கண்வியாதிக்கு மருந்து.

ஏற்றயிலேசலதோஷமண்டைக்குத்து
ஏற்றமென்றநீரேற்றமெல்லாந்தீரும்
பார்த்திபனேகண்ணிலுள்ளவியாதிதீரப்
பாடுகிறேன்சம்பழத்தில்நூற்றினெட்டுத்
தோற்றுமல்துளைதுளைத்துலவங்கம்நாட்டித்
துரிகமுடன்கயிர்கோத்துச்சட்டியிலேதாக்கிப்
பார்த்தாலேவிளாங்காய்போற்பசுவின்வெண்ணெய்
பாலகனேலவங்கமெல்லாம்பரப்பிமூடே. (௫௬௬)

மூடியேஅடிச்சட்டிதனிற்படாமல்
மூர்க்கமுடன்சுத்தகங்கைவிட்டுவைநீ
நாடியேநாற்பதுநாள்வேறுவேறு
நலமானசுத்தகங்கைவிட்டுவைத்துத்
தீடியேபிறகுவெண்ணெய்தனையெடுத்துத்
திறமானதாம்பிரத்தின்பரணில்வைத்துச்
சாடியேபழமுடனேலவங்கப்பூவும்
தள்ளிவிடுவெண்ணெய்தனைக்கண்ணில்தீற்றே. ()

தீற்றிடவேசலம்வீழும்எரிப்புமுண்டாம்
திறமாகச்சீலையினால்துடைக்கநிற்கும்
மாற்றிடவேமண்டலந்தான்கண்ணில்தீட்ட
மாறுதநேத்திரநோய்மாறுமென்றும்
போற்றிடவேயென்குருவேதியர்தானிந்தப்
புத்தகத்தின்பெருமையினால்கண்டதப்பா
தோற்றிடாவுலகத்தில்எளியோருண்டு
துரையாளதுரைமக்களரசருண்டே. (௫௬௮)

வயித்திய தருமம்.

அரசரென்றாற்பொருள்கொடுத்துத்தீர்த்துக்கொள்வார்
அதினாலேயுந்தனுக்குத்தருமமில்லை
நிரசரென்றால்எளியோர்க்குவயித்தியஞ்செய்
நிலையானதருமமதுநிலைக்குமென்று

பிரிசமுடன்என்குருவேதியர்தான்சொன்னர்
பிள்ளையென்றுபுலத்தியனேயுனக்குச்சொன்னேன்
பரிசனமாய்மனதில்வைத்தால்முத்திசேர்வாய்
பாலகனேயிதைமறந்தால்பலித்திடாதே. (௬௬௬)

பலித்திடவேவேணுமென்றாற்புலத்தியாகேள்
பாரிலுளஉயிரெலாந்தன்னுயிர்போலெண்ணிச்
சலித்திடாதொருபோதுந்தருமஞ்செய்யச்
சந்தயங்கள்செய்யாதேசதிசெய்யாதே
சலித்திடவேகருமத்தால்பிறவிகிட்டும்
தருமத்தால்சாயுச்சியபதவிகிட்டும்
சலித்திடாசற்குருவையடுத்துக்காரு
சதாகாலஞ்சதாசிவனைப்போற்றிப்பாரே. (௬எ0)

கர்ப்பவியாதிக்கு எண்ணெய்.

போற்றினுலின்னமொருஎண்ணெய்கேளு
புலத்தியனேபிள்ளையில்லாமலடியோர்க்குச்
சாற்றுகிறேம்வாண்டவெண்ணெய்நாழி
நைதவேளையிலையுடனோரண்டத்திலையும்
பார்த்திடவேமஞ்சளொடுகடுக்காய்இந்து
பரிவானவெங்காரம்வெள்ளைப்பூண்டு
தோற்றிடவேகடுகுட்னேவிழுதிநிலாவிரையுந்
தொகைபத்தும்வகைமூன்றுபலமாய்த்தூக்கே. ()

தூக்கியே அம்மியிலேமைபோலாட்டித்
துரிதமுடனெண்ணெயிலேகலக்கிக்காய்ச்சித்
தாக்கியேமெழுகுபதமாய்வடித்துத்
தருவானகுப்பியிலேபதனம்பண்ணி
வாக்கியேவடிக்குமுன்னேகழஞ்சியப்பா
வண்மையுள்ளகள்ளிபபால்கூட்டிக்கொண்டு
தேக்கியேகாண்டிநிறைநாலாநாட்கொண்டு
திரமாகமூன்றுநாள்கொடுத்துக்கேளே. (௬எ௨)

கோளப்பாபத்தியமோடப்பாகாது
  கிருபையுடன்மூன்றுவிசைகொடுத்தாயானால்
பாளப்பாசூதகத்தின்வாய்வுகுத்துப்
  பக்கத்திற்சூலையுடன்வயிற்றுவலிதீர்ந்து
நாளப்பாபெண்களுக்குக்கர்ப்பமுண்டாம்
  நானூறுவயித்தியபூரணமாய்ச்சொன்னேன்
கோளப்பாஒருநாளுமில்லையில்லை
  குணமானவின்னமொருஎண்ணெய்கேளே. (௩௭௩)

சகலமேக எண்ணெய்.

எண்ணெயென்றமேகஎண்ணெய்சொல்லக்கேளு
  ஏரண்டவெண்ணெய்படிஈருள்ளிச்சாறு
நன்னயமாய்த்தேசிச்சாற்செப்புநெருஞ்சில்
  நலமானகரிசாலைகர்ப்பூரவள்ளி
பின்னைப்பூவரசங்காய்சங்கங்குப்பி
  பிரியமுடன்வகைக்குச்சாற்படியரைக்கால்
சொன்னமேமெழுகுபதமாகக்காய்ச்சிச்
  சோதனைக்குஏழுநாளுப்பாகாதே. (௩௭௪)

உப்பில்லாப்பத்தியமாய்க்குடிக்கும்போது
  உள்ளுருக்குமேகநோய்ஊட்டினங்கள்
தப்பில்லாக்கிராந்தியொடுஅரையாப்புதீரும்
  தயவானயோனிப்புண்வெடிசூலைதீரும்
ஒப்பில்லாமேகத்தின்வாயுவுகூட
  ஓடுமடாஇனியேதுவயித்தியந்தான்
சொற்பமாய்ப்பாடிவிட்டேனிந்தநூலில்
  சோதனைக்குப்பூரணத்தைப்போற்றிப்பாரே (௩௭௫)

பூரணநூல் மகத்துவஞானம்.

போற்றினூனதுவினையகலுமப்பா!
  பிறவியில்லாப்பதவியிலேபுனிதனவாய்
போற்றினால்பூரணமுங்கூடப்பேசும்
  பூதலத்திலீயுமொருசித்தனவாய்

போற்றினாலென்னபலனில்லையென்றாற்
   பொதியமலையெனக்கேதுபுலத்தியாகேள்
போற்றினோம்பூரணத்தின்கிருபைகண்டோம்
   புத்தியுடன்தானேதான்பூண்டுபாரே. (நஎசு)

தானான ஆதாரச்சொரூபந்தன்னைச்
   சமர்த்தாகத்தானறிந்துதியானஞ்செய்து
தேனானபுலத்தியனே அறிவாற்றானும்
   தேகத்திலுயிர்ச்சிவமாய்த்தெரிந்துகொண்டு
வானானகேசரியில்மனக்கண்வைத்து
   மனங்கனிந்து'ஓம்றீங் அம்'என்றுஓத
கோனான ஆதாரபூசைதானும்
   கோடானபூசைசெய்தபலத்துக்கொப்பே. (நஎஎ)

ஒப்பென்றால்மனநிலைக்கஉறுதிகேளு
   ஓமென்றபிரணவமேமூலபீடம்
செப்பென்றபீடமதில்றீங்காரவாலை
   சென்றிருந்த அகாரமதுசிவமுமாச்சு
குப்பென்றுதானெழுந்துவாசியாகிக்
   கொண்டுநின்றதிருவாசியமாவாசை
அப்பனே ஆதார அம்மாவாசை
   அறிந்துகொண்டுபௌரணையிற்பூசைபண்ணே. ()

பூசையென்றாலந்திசந்திபூசைபண்ணு
   புண்ணியனேகாயாதிகற்பங்கொண்டு
நேசமுடன்பூரணத்தைத்தினமும்போற்றில்
   நினைவாகவுனதுசடம்நிலைத்துப்போகும்
பாசமென்றபாசமதைவிலக்கிடைக்கா
   பக்குவமாயகாரமென்றால்சத்திசிவமாச்சு
பேசவொண்ணாச்சத்திசிவமூலந்தன்னைப்
   பெருமையுடன்தன்னிடமாய்ப்பேணிக்காணே. ()

காணப்பாமகேந்திரமாங்கிரிக்கடுத்துக்
கணாநாதர்தனைநோக்கிப்பூசைசெய்தால்
தோணப்பாவம்மலையில்வாழுஞ்சாரை
சுத்தமுள்ளவெண்சாரைநிலத்திற்பாயுஞ்
சாணப்பாபூமியிலேபாய்ந்தபின்பு
சமர்த்தாகமையமதிற்பிடித்துக்கொண்டால்
ஊணப்பாபிடித்தபிடிகையில்தங்கும்
உத்தமனேரண்டுதுண்டுமொன்றும்பாரே. (௩௰)

ஒன்றாகிப்பூமியிலேயோடிப்போகும்
உண்மையுடன்பிடித்தபிடியுள்ளேகொள்ளு
நன்றாகவருஷமொன்று அந்திசந்தி
நாட்டமுடன்கொண்டுவரும்போதிலேதான்
பண்டானவாசியதுபாயாதப்பா
பாஞானகாயமதுசித்தியுண்டாம்
சென்றுடப்பத்தியந்தான்கடுகெள்ளெண்ணெய்
திறமானசையோகமூன்றுகாதே. (௩௱௧)

மூலகிரி.

ஆகாது ஆண்டொன்றுசிவத்தைப்பூசி
அப்பனேசத்தியிடகற்பங்கேளு
போகாதமூலகிரிதன்னில்நீயும்
புத்தியுடன்சென்றுதவஞ்செய்தாயானல்
ஆகாசந்தனிலிருந்துபூமிதன்னில்
அந்தரமாய்க்கருஞ்சாரைபாயுமுன்னே
ஆகாசமந்திரந்தான்உம்மென்றோதித்
தம்பித்துநடுமையம்பிடித்துக்கொள்ளே. (௩௱௨)

கொள்ளப்பா ஆண்டொன்று அந்திசந்தி
குணமாகக்கொண்டுவரக்குணத்தைக்கேளு
பிள்ளப்பாமூலமதிலனலேமீறிப்
பித்தமதுமேற்கொண்டுசெந்தீபற்றி

துள்ளப்பாதேகமது இளைத்துக்கண்டால்
துலங்கவேமூதண்டகியாழங்கொள்ளு
நல்லப்பாஉகாரமதைப்பூசைசெய்ய
நரையானதிரையகன்றுநாட்டங்காணும். (கூஅகூ)

நாட்டமென்றால்சுழிமுனையில்நாட்டங்காணும்
நடுமனையில்தீபஒளிநன்றாய்த்தோணும்
தேட்டமென்றபூரணத்தின்தீபங்கண்டால்
திறமானதேகமதுவலுத்துப்போச்சு
கூட்டமென்றசிவசத்திபூசைசெய்து
குணமானரெண்டுகற்பங்கொண்டபின்பு
பாட்டமென்னகாலையிலேசிவத்தைப்பூசி
பாலகனேமாலையிலேஉகாரங்கொள்ளே. (கூஅச)

கொள்ளவேஆண்டுஒருமூன்றுஞ்சென்றால்
குணமானசட்டையதுமூன்றும்நீங்கி
விள்ளவேஆண்டுனக்குமுந்நூறாண்டு
மிஞ்சாதுகுறையாதுநித்திரையும்நீங்கி
வள்ளலார்திருநடனம்வெளியாய்த்தோணும்
மைந்தனேரவிமதியும்ஒன்றாய்க்காணும்
மெள்ளவேவாசியென்றகுதிரையேறி
மேலானபோதகிரியுச்சம்பாரே. (கூஅரு)

போதகிரி.

உச்சமென்றபோதகிரியுச்சந்தன்னில்
உண்மையுடன்கர்ப்பூரதீபம்போலே
பக்ஷமுடன்சதாசிவனுநாமுங்கூடப்
பதினெட்டுசித்தர்களுமங்கிருப்போம்
இச்சையுடன்போதகிரி தன்னிலென்னை
ஏறிவந்துகண்டவுடனின்பமாக
அச்சமென்றஅச்சமதையகற்றிமைந்தா
அறியாதபதவியுனக்களிப்போம்பாரே. (கூஅசு)

பாரப்பாபோதகிரியார்தான்காண்பார்
பாலகனேநவசித்தர்பார்த்தபோதம்
நேரப்பாபோதமென்றால்சிவபோதந்தான்
நிலையாதபோதைதனைநிலைத்தோன்காண்பான்
மேரப்பாஉச்சமென்றபோதங்கண்டு
மேன்மையுடனழியாதபதவிபெற்றால்
சாரப்பாசதாநந்திமணியைநீயும்
சார்ந்ததினாலுனதுவினைதவறிப்போமே. (௩௮௭)

சிவராஜயோகம்.

தவறிப்போஞ்சிவராசயோகங்கண்டால்
தாரணியில்மற்றமற்றயோகமெல்லாம்
தவறிப்போமுச்சுடருமொன்றாய்க்கண்டால்
தாழ்வானபிறப்பிறப்புந்தன்மையாகித்
தவறாமல்ஞானவழிகண்டுமைந்தா
தன்மையுடன்முக்கோணத்தறுகோணத்துள்
தவறிப்போநாற்கோணமைங்கோணத்துள்
சதாசிவனார்ஒளிகண்டுவெளிகண்டோர்க்கே. ()

கண்டோர்க்கேநாதவொலிகாதிற்கேட்கும்
காணாதமடையருக்கும்வெளிதோணாது
பண்டோர்க்குவிட்டகுறைபற்றியேறும்
பாவியர்க்குக்கிடைத்தாலுமெட்டாதப்பா
விண்டோர்க்குக்கோடிபலனுண்டுசொன்னோம்
வீணருக்குவிண்டதினால்நரகமெய்தும்
அண்டர்பிரானருளதினாலிந்தநூலில்
ஆதிதொடுத்தந்தவரையடைவாய்ச்சொன்னேன். ()

சொன்னனடாநூல்தோறும்ஒளித்தசேதி
சுத்தமுடனிச்சயமாய்த்தோணச்சொன்னேன்
முன்னேநான்பெருநூல்களனந்தஞ்சொன்னேன்
மிச்சமிந்தநூல்போலேஒன்றுங்காணேன்

கண்ணுனபுலத்தியனேயிந்த நூலைக்
காட்டாதேஉலகருக்குக்காட்டிடாதே
விண்ணேருஞ்சித்தர்களும்யோகியோரும்
வேதாந்தவயித்தியபூரணமென்பாரே. (௫௱௯௰)

பாரப்பாசத்திதனைமாலையிலேபூசி
பதிவானகாலையிலேசிவனைப்பூசி
சாரப்பாநடுச்சாலைநடந்துபாரு
சந்தையமோபூரணத்தின்சார்புதோன்றும்
வாரப்பாபூசையென்றால்வாலைபூசை
மந்திரமாய்எட்டிரண்டுமகிழ்ந்துகண்டால்
மேரப்பாமூலைவழிபாதைகாணும்
மேல்மூலைகண்டுமெள்ளவிழித்துப்பாரே. (௫௱௯௰௧)

விழித்துமிகப்பார்த்திடவேபொரிதான்வீசும்
முச்சந்திநடுவீதிதீபந்தோன்றும்
சுழுத்தியிலேபோகாதேஒருமனதாய்நின்றால்
சுத்தமென்றநாதவொலிகாதிற்கேட்கும்
இழுத்ததென்றுநீகூடத்தொடர்ந்தாயானால்
எண்ணவொண்ணாப்பிறப்பிறப்புமெய்தும்பாரு
அழித்துமனஞ்சுழிக்கேற்றிவிழித்துப்பாரு
அரகராசிவசத்தியாட்டமாமே. (௫௱௯௰௨)

ஆட்டமென்றால்மணியினிடஆட்டேஆட்டு
அதையறிந்தாற்சதாசிவத்தின்ஆட்டங்காணும்
பாட்டைமிகப்பார்த்ததினாலென்னதோணும்
பாடறிந்தயோகியென்றால்பலுக்குந்தோணும்
கூட்டமென்றால்வாசியிடகூட்டேகூட்டு
கூட்டுவிட்டுப்பின்னொருத்தர்க்கூட்டேனப்பா
தீட்டமென்றால்தசதீட்சைதீட்டேதீட்டு
தீட்டறியநாள்செல்லவரிதுதானே. (௫௱௯௰௩)

அரிதாகவித்தனைநாள்மறைத்ததெல்லாம்
அன்புடனேமதுராசமொழிந்தேனிந்நூல்
குரிதாகப்பாடிவைத்தேனிந்தநூலிற்
கூறினேன்சகலமுமேவெளியாய்ச்சொன்னேன்
பெரிதாகப்பாராட்டுமிந்தநூலைப்
பேரின்பமுத்திதனைப்பெறுவாயப்பா
சிறிதாகவெளியாங்கஞ்செய்தாயானால்
சிவசிவாரவிகோடிநரகமெய்தும். (ருகூச)

நரகமென்றநரகமதில்விழுதல்நன்றோ
நன்மையுள்ளசாயுச்சியம்பெறுதல்நன்றோ
தெரிவையர்கள்சந்துநடுவிழுதல்நன்றோ
சிவஞானமுத்திபெற்றிருத்தல்நன்றோ
பரியானவாசிதனிலேறல்நன்றோ
பாழானவுலகமதிலிருத்தல்நன்றோ
தெரியாதபுலத்தியனேஇந்தநூலைத்
தேசத்திற்காட்டாதேசதிசெய்வாரே. (ருகூரு)

நூல்கொடாதிருக்க.

சதிசெய்வாரிந்நூலைவெளிவிடாதே
சதிராகவுலகத்தோர்கேட்பாருன்னை
விதியாலேநூலதனையீந்துவிட்டால்
வீணனவனுன்னமதியான்வித்தையாலே
எதிராளியானவனுமுன்னைத்தானு
மெவ்வளவுபோடாமீவாடாவென்பான்
குதிப்பாகக்குருவிந்தப்பாடுபட்டால்
குவலயத்தோர்படும்பாடென்னசொல்வேன். ()

சொல்வானேநான்தாண்டாகுருவுமென்பான்
சோதனைக்குமாரணத்தைச்செய்துபார்ப்பான்
வெல்வானேவெளியோரைவலுமையாலே
வீணருக்குநூல்கொடுத்தால்சாபமெய்தும் .

செல்லாதபணமொருநாள்செல்லாதப்பா
சிவாயகுருநாதனென்றாற்செல்லவைப்பான்
வல்லோருக்கீயாதேயோகிக்கீந்தால்
வகையானநூலதனைவணங்குவாரே. (௯௯எ)

வணங்குவார்சிவயோகிஞானயோகி
மற்றமற்றபேரெல்லாந்தூஷணிப்பார்
இணங்குவார்போலிருப்பாரிணங்கார்பின்னே
இந்தநூல்கிட்டுமட்டுமிணங்கிநிற்பார்
பிணங்களுடனுறவுசெய்யவேண்டாஞ்சொன்னேன்
புலத்தியனேபேரின்பவெளியைநாடிக்
குணங்காமல்வழிகூடிநடுவழியேநாடி
குருவானபராபரத்தின்வெளியதாமே. (௯௯அ)

வெளியானவெளியதுதான்பரஞ்சொரூபம்
வேதாந்தரூபமடாசொரூபானந்தம்
வளியானவயித்தியபூரணமானந்தம்
மகத்தானபூரணத்தினர்த்தங்கண்டு
நெளியாமலாதாரங்கடந்துமேலே
நெருப்பாறில்மயிர்ப்பாலம்வழியிற்சென்று
அளியாதபரவெளியேவெளியாய்க்கண்டு
அமருவதுமானந்தபூரணமுமுத்தே. (௯௯௯)

மூத்தானபுலத்தியமாரிஷியேகேளு
முச்சுடருமாதியந்தம்கன்றாய்ப்பாரு
சித்தானவயித்தியபூரணமீதப்பா
தேசத்திற்கிடையாதுதிறமாய்க்கேளு
பத்தானபதிதனிலேவைத்துப்பூசி
பதிதானவாசியதுசித்தியாகும்
வித்தானவினையறுக்குஞ்ஞானசித்தி
வேதாந்தபூரணத்தின்வெளிசேர்முற்றே. (௲00)

பரிபூரணம்.

முற்றிற்று.